கோகுலம்


GOKULAM மே '96 ரூ. 5/-



பேசும் கம்ப்யூட்டருக்கு ஒரு பூங்கொத்து!



தலைசிறந்த பிரில்® தயாரிப்புகள்!
Bril
• இங்க் (INK) • கம் (GUM)
• பேஸ்ட் (PASTE)
• ஜியாமெட்டரி பாக்ஸ் (GEOMETRY BOX)
• கலர் கிரேயான்கள் (COLOUR CRAYONS)
• பால் பென்கள் (BALL PENS) • ரீ-பில்கள் (REFILLS)
• பென்கள் (PENS) • பென்சில் ஷார்ப்பெனர் (PENCIL SHARPENER)
• கலர் ஸ்கெட்ச் பென்கள் (COLOUR SKETCH PENS)
இண்டஸ்டிரியல்
ரிஸர்ச்
கார்ப்பொரேஷன்
பெங்களூர்-560 055
போன்: 3341567
சென்னை-600 041
போன்: 411166
ADWAVE/IRC/4727/TAM



கோகுலம்

மே 1996

மலர் : 14

இதழ் : 4

உயிர்களிடத்து அன்பு
வேணும் - தெய்வம்
உண்மையென்று தானறிதல்
வேணும்.
- பாரதியார்



அருமைச் சிறுவர் சிறுமியரே,

எல்லோருக்கும் அன்பு வணக்கம்.

தேர்வுகள் எல்லாம் முடிந்து விடுமுறை தொடங்கியிருக்குமே? விடுமுறை என்றதுமே விதம் விதமான பொழுதுபோக்குகள்தானே நினைவுக்கு வருகிறது? விடுமுறையை முழுக்க முழுக்க நேரத்தை வீணடிக்கும் வெறும் பொழுதுபோக்குகளிலேயே கழித்துவிடாமல், பயனுள்ள பொழுதுபோக்குகளில் கழித்தால் பலவிதங்களில் உங்களுக்கு அது பயன்படும். சைக்கிள் விடக் கற்றுக் கொள்ளலாம், நீச்சல் கற்றுக் கொள்ளலாம், கதை எழுதவோ நாடகம் எழுதி நடிக்கவோ முயற்சி செய்யலாம். கைவேலைகள் எதை யாவது கற்கலாம். வீட்டை ஒழித்து சுத்தப்படுத்தலாம். கல்வியறிவில்லாதவர்களுக்கு எழுதப் படிக்கக் கற்றுக் கொடுக்கலாம். நீங்கள் என்ன செய்தீர்கள் என்பதை மறக்காமல் கோகுலத்திற்கு எழுதி அனுப்புங்கள்.

இந்த இதழில் வழக்கமாக வெளியாகும் போட்டியைத் தவிர கோடைவிடுமுறைப் போட்டியும் வெளியாகியுள்ளது. இவைகளுடன், பள்ளி மாணவர்களுக்கான குழந்தைக் கவிஞர் அழ. வள்ளியப்பா நினைவுச் சிறுகதைப் போட்டி அறிவிப்பும் வெளியாகிறது. 'புவனா தேடிய புதையல்' இறுதிக் கட்டத்தை நெருங்கிக் கொண்டிருக்கிறது.


மறக்க முடியாத தலைமையாசிரியர் என்ற தலைப்பில் உங்களது மனதைக் கவர்ந்த தலைமையாசிரியர் பற்றி எழுதியனுப்புங்கள். எந்த விதத்தில் மறக்க முடியாதவர் என்பதும் அதில் எழுதப்பட்டிருக்க வேண்டும். 'இன்லாண்ட்' உறையில் மட்டுமே இதை எழுதி அனுப்பலாம். தவறாமல் உங்கள் வயதைக் குறிப்பிடுங்கள். 15 வயதிற்கு உட்பட்டவர்களே இதை எழுதலாம்.

மீண்டும் அடுத்த இதழில் சந்திப்போம்.

அன்புடன்,

(கௌரவ ஆசிரியர்)





* ஓடினால் குள்ளவாத்து என்னவாகும்? - பக்கம் 87



* தும்பிலி - பக்கம் 49 (வண்ணப்படக்கதை)

கோகுலம்




“மாதங்களில் சிறந்தது எது?”

“மே மாதம் சார்!”


“ஏன் அப்படிச் சொல்றே?”

“தப்பில்லாமல் சரியாக அதைத்தான் எழுத முடியுது.”





• ஐயாதான் நீதிபதி! பக்கம் 65



• வலமும் இடமும் பக்கம் 7
(அறிவியல் சித்திரமடல்)

1996 மே

இந்த இதழில்...

‘‘முதல்ல சைக்கிள் ஓட்டக் கத்துக்கோடான்னா ஏரோபிளேன்தான் ஓட்டுவேன்னு அடம்பிடிக்கிறயே!’’

‘‘ஏரோபிளேன்ல, யார் மேலும் மோதாம, எப்படி வேணும்னாலும் ஓட்டலாம் அதுக்குதான்.

‘‘ஏண்டா கண்ணா! மரத்திலே உண்டியல் கட்டி வைச்சிருக்க!


‘‘தேனீக்கு ஈடா சேர்த்து வைக்கணும்னு ஆசிரியர் சொன்னார்டா.’’

மிட்டூர் சு. கண்ணகி



உலகின் மாபெரும் ஜனநாயக நாடு என்ற பெருமை நம் இந்தியாவுக்கு உண்டு. இங்கே நடைபெறுவது மன்னராட்சியோ இல்லை. சர்வாதிகார ஆட்சியோ இல்லை. ஜனநாயக ஆட்சி. அதாவது மக்களால் நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்படும் பிரதிநிதிகளைக் கொண்டு மக்களுடைய நலனுக்காகவே நடத்தப்படும் ஆட்சி.

ஐந்து ஆண்டுகளுக்கு ஒருமுறை, மக்கள் தேர்தல் மூலம் தங்கள் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுத்து, ஆட்சி புரிய அனுப்பி வைக்கிறார்கள். அரசியல் கட்சிகள் தங்கள் வேட்பாளர்களைத் தேர்தலில் போட்டியிட வைக்கின்றன. இவர்களில் அதிக ஓட்டுப் பெறுபவர்கள், மக்களின் பிரதிநிதிகளாகத் தேர்ந்தெடுக்கப்பட்டு டெல்லி பார்லிமெண்ட்டுக்கும், மாநில சட்டசபைக்கும் அனுப்பி வைக்கப்படுகிறார்கள். இவர்களில் அதிக எண்ணிக்கையுள்ள கட்சி டெல்லி அமைச்சரவையையும் மாநில அமைச்சரவையும் அமைக்கிறது. இந்தப் பிரதிநிதிகளின்



தலைவர், டெல்லியில் பாரதப் பிரதமராகிறார். மாநிலத்தில் வெற்றிபெறும் தலைவர் மாநில முதலமைச்சர் ஆகிறார். இவர்கள் ஐந்து ஆண்டுகள் ஓட்டளித்த மக்கள் சார்பில் நாட்டை ஆள்கிறார்கள். ஐந்து ஆண்டுகள் முடிந்ததும் மறுபடி தேர்தல் வரும். மக்கள் ஓட்டளித்து, போட்டியிடுபவர்களில் இருந்து பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுத்து

வருது



ஆட்சியமைக்க அனுப்புவார்கள். யாருக்கெல்லாம் ஓட்டுப் போடும் தகுதி உண்டு? முதலில் 21 வயது நிரம்பியவர்களுக்கு மட்டுமே ஓட்டுப் போட்டு மக்கள் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுக்கும் தகுதி இருந்தது. இப்பொழுது 18 வயது நிறைந்தவர்கள் கூட ஓட்டுப் போடும்படி சட்டம் திருத்தப்பட்டுள்ளது.

வருகுது தேர்தல்!

பாரத நாடு 1950 ஆம் ஆண்டு ஜனவரி 26 ஆம் நாள் குடியரசானது. இதை ஒட்டி இந்தியாவின் முதல் தேர்தல் 1952 ஆம் ஆண்டு நடைபெற்றது. இதற்குப் பிறகு, 1957, 1962, 1967, 1971, 1977, 1980, 1984, 1989, 1991 ஆகிய ஆண்டுகளில் தேர்தல்கள் நடைபெற்றன. இந்த ஆண்டு ஜூன் மாதம் இப்பொழுதுள்ள மக்களவையின் ஆட்சிக்காலம் முடிவடைகிறது. எனவே, பாரதக் குடியரசின் 11 ஆவது மக்களவைக்கான தேர்தல் இந்த ஆண்டு ஜூன் மாதத்திற்குள் நடைபெற உள்ளது. உலகத்தின் மிகப் பெரிய ஜனநாயக நாடு ஆனதால், இந்தியாவின் தேர்தல் உலக மக்களின் கவனத்தை ஈர்த்துள்ளது.

ஒட்டளிக்கும்போது எவ்வித முறைகேடுகளும் நடைபெறாமல் இருக்க ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன.

உங்கள் பள்ளியில், பள்ளி மாணவர் தலைவர் தேர்தலுக்குப் பள்ளி என்ன பாடுபடுகிறது! அதேமாதிரித்தான், இல்லை, இல்லை, அதைவிட மிகப் பெரிய அளவில் ஏற்பாடுகள் நடக்கின்றன. போட்டா போட்டி போட்டுக் கொண்டு அரசியல் கட்சிகள் தங்கள் சிறப்பான தொண்டர்களை நிற்க வைத்து மக்களின் ஆதரவைப் பெறத் தீவிரமாக முனைகின்றன.



உங்கள் கோடை விடுமுறை முடிவதற்குள்ளேயே 11 ஆவது தேர்தல் நடந்துமுடிந்து விடும்போல் இருக்கிறது. தினமும் செய்திகளைக் கூர்ந்து கவனியுங்கள். ஏனென்றால் உங்களில் சிலருக்கும் அடுத்த தேர்தலில் ஒட்டளிக்கும் தகுதி வந்துவிடப் போகிறதே!


வலமும் இடமும்


ஆழி——



மனிதர்களில் பெரும்பாலோர், வலக்கையை அதிகமாகவும், ஒரு சிலர் இடக்கையை அதிகமாகவும் பயன்படுத்துவது போலவே, பெரும்பாலோர் வலக் கண்ணையும், ஒரு சிலர் இடக் கண்ணையும் பயன்படுத்துகிறார்கள் என்கிறார்கள் ஆராய்ச்சியாளர்கள்.


நாய் எதற்கும் தன் வலக்காலைத் தான் பயன்படுத்தும். நாய்களிடம் கைகுலுக்கும் பழக்கத்தைச் சிலர் ஏற்படுத்துவார்கள். அதற்குக் கூட நாய் தன் முன்பக்கத்து வலக்காலைத்தான் தூக்கும்!






பூனை சண்டை போடுவதற்கும், இரையைப் பிடிப்பதற்கும் தன் வலக் காலைத் தான் முதலில் பயன்படுத்தும் என்கிறார்கள் ஆராய்ச்சியாளர்கள்.


யானையின் இரண்டு தந்தங்களும் சம அளவில் இருப்பதில்லை. வலப் பக்கத்துத் தந்தம் தான் பெரிதாக இருக்கும். மரங்களைத் தூக்கவும், மண்ணைத் தோண்டவும், யானை பயன்படுத்துவது வலப் பக்கத்துத் தந்தத்தைத் தான்.





தோட்டத்து நத்தைகள், ஊர்ந்து போகும் திசையையும், திரும்பும் பக்கத்தையும் அவற்றின் ஓட்டில் உள்ள சுற்றைக் கொண்டு சொல்லிவிடலாம்! நத்தை ஓடு இடப் பக்கமாகச் சுற்றியிருந்தால், அதன் இயக்கம் இடப் பக்கமாகவே இருக்கும்; ஓடு வலப் பக்கமாகச் சுற்றியிருந்தால், அதன் இயக்கம் வலப் பக்கமாகவே இருக்கும்!

தவளை அதிகமாகத் தன் வலப் பக்கத்து முன்னங் காலைத்தான் நீந்துவதற்கும் நகர்வதற்கும் முதலில் பயன் படுத்துகிறது.







ஆனால்; நீரில் வாழும் நத்தையின் இயக்கம் எப்போதும் இடப் பக்கமாகவே இருக்கும்!



கடலில் உள்ள முத்துச் சிப்பிகள் நீந்துவதும் இரை தேடப் போவதும் இடப் பக்கம் தான்.




கடலில் வாழும் 'தட்டை மீன்', குஞ்சாக இருக்கும் போது, எல்லா மீன்களையும் போல அதற்குப் பக்கத்துக்கு ஒன்றாக இரண்டு கண்கள் இருக்கும். ஆனால், அது வலப் பக்கத்துக் கண்ணை அதிகமாகப் பயன்படுத்தி, அந்தப் பக்கமாகவே, இரண்டு கண்களும், வாயும் தள்ளிப் போய்விடும். மீனின் வளர்ச்சி தட்டையாகிவிடும். எனவே, அதன் கவனம் இயக்கம் எல்லாமே வலப்பக்கம் தான்!





இரால் வகையைச் சேர்ந்த 'லாப்ஸ்டர்' பயன்படுத்துவது, முன் பக்கத்திலுள்ள இடப்பக்கத்துப் பாதத்தைத்தான். அது வலப்பக்கத்தைவிட வலப் பக்கம் நல்ல வளர்ச்சி பெற்றிருக்கும்.

காக்கைகள் அதிகம் பயன் படுத்துவது இடக்கால்களைத்தான்.




கிளிகளில் 75 சதவீதம் இடக் கால்களைத்தான் பயன் படுத்துகின்றன.







வட துருவத்தில் உள்ள எல்லா உயிரினங்களும் இடப் பக்கமாகவே இயங்குகின்றன. ஓடுவது, நடப்பது, நீந்துவது பறப்பது எல்லாமே இடப் பக்கம் தான். இதற்குக் காரணம் வட துருவத்தின் ஈர்ப்பு சக்திதான் என்கிறார்கள் விஞ்ஞானிகள்!

கொடிகளிலும் இந்த இடப்பக்க, வலப்பக்க இயல்பு உண்டு. 'ஹனி சக்கிள்', அவரை ஆகிய கொடிகள் எப்போதும் வலப் பக்கமாகவே சுற்றிப் படரும். அவற்றைப் பிரித்து இடப் பக்கமாகச் சுற்றி விட்டாலும், தாமாகவே பிரிந்து பழையபடி வலப்பக்கமாகவே சுற்றிப் படரும்!



'கான்வால் வலஸ்' என்னும் காக்கரட்டைக் கொடி எப்போதும் இடப் பக்கமாகவே சுற்றிப் படரும். அதைப் பிரித்து விட்டாலும், பழையபடி இடப்பக்கமாகவே சுற்றிக்கொள்ளும்!





ஆனால், இந்த இயல்புடைய கொடிகளை பூமத்திய ரேகைக்கு அப்பாலோ இப்பாலோ கொண்டு போய் வளர்த்தால், அவை அப்படியே இடப் பக்கம் வலப் பக்கமாகவும் வலப்பக்கம் இடப்பக்கமாகவும் மாறிச் சுற்றிப் படரும். காரணம் புவியின் காந்த சக்திதான் என்கிறார்கள் விஞ்ஞானிகள்!

படிக்க வந்த பாட்டி!

புலேந்திரன்



இரவு மணி எட்டு

கையில் அரிக்கேன் விளக்குடன் கிழத் தெருவை நோக்கி நடந்து கொண்டிருந் தான், மாதவன்.

அந்தத் தெருவில் இருபது வீடுகள் இருந்தன. அனைவருமே விவசாயத் தொழிலாளர்கள். பள்ளி செல்லும் குழந் தைகளைத் தவிர மற்றவர்கள் எழுத்தறிவு பெறாதவர்கள். காலையில் புறப்பட்டு வேலை தேடிச் செல்பவர்கள் மாலையில் வேலை முடிந்து அவரவர் வேலை செய்த இடங்களில் கூலியை வாங்கி, வீட்டுக்குத் தேவையான அரிசி, மற்றும் சாமான் களைக் கடைத்தெருவில் வாங்கிக் கொண்டு வீடு திரும்ப இரவு ஏழு மணி ஆகிவிடும். சமைத்து, உண்டு, உறங்கத் தொடங்கும்போது பத்து மணிக்குமேல் ஆகிவிடும்.

தெருவை நெருங்கிவிட்டான் - வீடு களில் விளக்கொளி தெரிந்தது.

மேலத்தெருவைச் சேர்ந்த மாதவனின் தந்தையும் ஒரு விவசாயத் தொழிலாளிதான். அவர், தான் படித்திரா விட்டாலும் தன் பிள்ளை யையாவது படிக்க வைத்துவிட வேண்டும் என்று விரும்பினார். மாதவனும் நன்கு படித்து பட்டம் பெற்று விட்டான். வேலை தேடி வருகிறான்.

தன் படிப்புக்கு ஏற்ற வேலை கிடைக் கும் வரையில் அப்பகுதியில் கல்வியறிவு இல்லாத மக்களுக்கு எழுதவும், படிக்கவும் கற்றுக் கொடுக்க விரும்பினான் மாதவன். கிழத் தெருவில் ஒருநாளும், மேலத் தெரு வில் ஒரு நாளுமாக இரவில் பாடம் நடத்தத் தொடங்கினான். ஆனால், கிழத் தெரு மக்கள் யாரும் சரியாக வருவதில்லை. வந்தாலும் ஒத்துழைப்பதில்லை.

தெருவின் மத்தியில் விளக்கை வைத்த மாதவன், முதல் வீட்டுக்குச் சென்றான்.

"அக்கா...!"

"மாதவன் தம்பியா?" - குரல் அடுக்களை யில் இருந்து வந்தது. "இப்போதுதான் அடுப்புப் பற்ற வைக்கிறேன். அவரும் இன் னும் வரலே..."

"சரி, அக்கா. நாளைக்காவது சற்று முன்னாலேயே வேலையை முடிச்சுக் கிட்டு வரப்பாருங்க" என்ற மாதவன், அடுத்த வீட்டை நோக்கி நடந்தான்.

அந்த வீட்டுக்காரர் அரிக்கன் விளக் கொளியில் நண்பர்களுடன் சீட்டாடிக் கொண்டிருந்தார். சீட்டாடப் படிப்பு தேவை இல்லையே? நிலைமை சரியில்லை என் பதை உணர்ந்த மாதவன் எதிர் வீட்டுக்குப் போனான்.

அந்த வீட்டுக்காரர், வாசலிலேயே உட் கார்ந்திருந்தார். மாதவனைப் பார்த்ததும், "இன்று வேலை அதிகம் தம்பி. ரொம்பக் களைப்பா இருக்குது. அக்காவோ இன்

னும் சமையலை முடிக்கலே. நாளைக்கு வைச்சுக்கலாம்" என்றார்.

இப்படியே ஒவ்வொரு வீட்டிலும் சாக்குப் போக்குச் சொன்னார்கள். இருந்தும் மாதவன் மனம் தளரவில்லை. தெருவில் கடைசி வீட்டை நெருங்கிய போது, எதிரில் முருகன் வந்தான். அவனுக்கு வயது பதினெட்டு. கல்வியறிவு இல்லாதவன்.

"தம்பி! படிக்கலாம் வா" என்றான் மாதவன்.

முருகன், அதைக் காதில் வாங்கிக் கொண்டதாகத் தெரியவில்லை. "அண்ணே! தியேட்டரிலே புதுப்படம். என்னோடு வா. உனக்கும் நானே சீட்டு எடுக்கிறேன்" என்றான்.

மாதவனுக்கு மிகவும் வருத்தமாக இருந்தது.

அப்போது -

"தம்பி...!"

திரும்பிப் பார்த்தான் மாதவன். அரிக்கேன் விளக்கின் அருகில் மங்கம்மா பாட்டி உட்கார்ந்திருந்தாள். பாட்டிக்கு அறுபது வயதிருக்கும்.

"நான் இங்கே உள்ளவர்களைப் படிப்பதற்காகக் கூப்பிட்டுக் கொண்டு இருக்கிறேன் பாட்டி. இப்போ எதற்காக என்னைக் கூப்பிடுறீங்க?" என்றான் மாதவன்.

"இங்கே கிட்டே வா தம்பி சொல்றேன்" - சற்று அதட்டலாகக் கூறினாள் பாட்டி.

மாதவன் அருகில் வந்ததும், "நான் எழுதவும் படிக்கவும் கற்றுக்கிறதுக்காக உன்னை எதிர்பார்த்துக் காத்துக்கிட்டு உட்கார்ந்திருக்கேன். நீயோ... வராத வங்களோடு பேசிக்கிட்டு நேரத்தை வீணாக்கிக்கிட்டு இருக்கே"



என்றாள் பாட்டி.

"என்ன சொன்னீங்க பாட்டி! நீங்க கற்றுக்கிறதுக்காக வந்து உட்கார்ந்து இருக்கீங்களா?" - வியப்பால் கண்கள் விரியக் கேட்டான் மாதவன்.


"ஆமா, தம்பி" என்ற பாட்டி உரத்த குரலில் சொன்னாள்: "இறந்து போன என் வீட்டுக்காரருக்குப் படிக்கத் தெரியாது. எனக்கும் தெரியாது. எங்களுக்கு ஆயிரம் ரூபா கடன் கொடுத்த ஒருத்தரு... தாளிலே என்னமோ எழுதி எங்ககிட்டே கையெழுத்து வாங்கினாரு. சில மாதங்களுக்குப் பின்னாலே... நாங்க குடியிருந்த மனையை விற்றுவிட்டுத்தான் அவருகிட்டே பணம் வாங்கினதா அந்தத் தாளிலே எழுதி இருப்பதாகச் சொல்லி, எங்களை வெளியேறச் சொல்லிட்டாரு. என்ன செய்வது...?" சற்று நிறுத்திவிட்டு மறுபடி தொடர்ந்தாள் பாட்டி. "என் மகனும் படிக்கலே. மருமகளும் படிக்கலே. இப்படியே போனா... இது படிப்பறிவு இல்லாத குடும்பமுன்னு எல்லாரும் சொல்வாங்களே...? அதனாலேதான் என் பேரனைப் படிக்க பள்ளிக்கூடத்திலே சேர்த்திருக்கேன்."

"இதைச் சொல்றதுக்காகத்தான் கூப்பிட்டீங்களா?" என்றான் மாதவன்.

"நான் உன்னிடம் கற்றுக்கிறதுக்காகத்தான் வந்திருக்கேன். எனக்குச் சொல்லிக் கொடு தம்பி" - அழுத்தமாகக் கூறினாள் பாட்டி.

"இந்த குடுகுடு வயசுக்கு மேலே... நீங்க எதற்காகப் படிக்கணும்...?" - குழப்பத்துடன் கேட்டான் மாதவன்.

"காரணம் கேட்கிறியா? சொல்றேன்" என்ற பாட்டி, "பள்ளிக்கூடத்திலே படித்துவிட்டு வருகிற பிள்ளை இரவில் வீட்டுப் பாடம் படிக்கிறதிலே தவறு இருந்தால் திருத்திச் சொல்லிக் கொடுக்க வேண்டி



யது நம் பொறுப்புத்தானே? நமக்குத் தெரியலேன்னா... அவன் தப்புத் தப்பாவே ஏதாவது சத்தம் போட்டுப் படிச்சுட்டுப் புத்தகத்தை மூடிடுவான். பிறகு, அவனுக்குப் படிப்பு ஏறலேன்னு திட்டினா, அது நம் தவறு அல்லவா? அதனாலே, நான் என் பேரனுக்குப் பாடம் சொல்லிக் கொடுக்கிறதுக்காகவே உன்னிடம் கற்றுக் கொள்ள வந்திருக்கேன்" என்றாள்.

பாட்டி கூறியதைக் கேட்டதும் மாதவனின் கண்கள் உணர்ச்சிப் பெருக்கினால் நீரைச் சொரிந்தன.

"நான் சொல்லித் தர்றேன் பாட்டி" என்ற மாதவன், கரும் பலகையையும், எழுதும் குச்சியையும் பாட்டியிடம் கொடுத்துவிட்டு, புத்தகத்தைத் திறந்தான்.

ஒரு சில மணித்துளிகள் கடந்தன.

சுற்றிலும் 'கசமுச' சப்தம். தலையை நிமிர்ந்து பார்த்தான், மாதவன்.

அந்தத் தெருவிலுள்ள ஆண்களும், பெண்களும் கையில் புத்தகம் - கரும்பலகையுடன் நின்று கொண்டிருந்தார்கள்.

எதிரில் நின்றவர், "தம்பி! நீங்க இலவசமாப் பாடம் சொல்லிக் கொடுக்க வந்தது எங்கள் நன்மைக்காகத்தான்கறதைப் புரிஞ்சுக்கிட்டோம். இனிமேல் உங்களுக்கு முன்னமே நாங்கள் இந்த இடத்துக்கு வந்து இருப்போம் தம்பி" என்றார்.

பக்கத்தில் நின்றவர், "ஒவ்வொருவரும் எழுத்தறிவு பெற வேண்டிய அவசியத்தை நாங்கள் உணர்ந்து கொண்டோம். படிக்கிற இடத்திலே.. நாளையே ஒரு சிறு கொட்டகையும் கட்டுவதற்கு முடிவு செய்து இருக்கிறோம்" என்றார்.

மாதவனின் உள்ளம் மகிழ்ச்சியில் திளைத்தது.

புதிய உலகம்

சந்திர மண்டலம் என்பது வானில்
தனியே இருக்கும் உலகம்
இந்திரன் இல்லை தேவர்கள் இல்லை
எவருமில் லாத உலகம்

ஆம்ஸ்டிராங்க் என்னும் அமெரிக்க வீரன்
ஆற்றல் துணிச்சலி னாலே
தேர்போல் செய்த ராக்கெட்டில் ஏறி
சந்திர மண்டலம் கண்டான்

மக்கள் பெருக்கம் இடநெருக் கடியா
மனதில் கவலை வேண்டாம்!
இக்கணம் சந்திர மண்டலம் சென்று
இடத்தைப் பிடிப்போம் வாரீர்!

புதிய இடத்தில் பொய்ம்மை வெறுப்பு
புகுந்து விடாமல் காப்போம்!
இதமாய் அன்பு செய்பவர் வாழும்
இடமாய்ச் செய்வோம் வாரீர்!

— செல்லகணபதி





சாதம் போடுமா?

பள்ளி விட்டு வீடு வந்து கொண்டிருந்தான் அரவிந்தன். சுற்றிலும் இருந்த இயற்கைக்காட்சிகள் அவன் கருத்தை ஈர்த்தன. வானை அளப்பது போல் நிமிர்ந்து நின்ற மரங்களும் விதவிதமாகக் குரலெழுப்பி மகிழ்ந்த பறவைகளும் அவனுக்குள் புதிய கற்பனையைத் தட்டி விட்டன. அந்த இடத்'லேயே அமர்ந்து கண்ணில் கண்ட காட்சிகளை வரையத் தொடங்கினான்.

அரவிந்தனுக்கு ஓவியம் வரைவது என்பது உணவைவிட, விளையாட்டைவிட மிகவும் பிரிய மானது. கையில் ஒரு கரித்துண்டு கிடைத்தால் கூட அதை வைத்துக் கொண்டு அற்புதமாகப் படம் வரைவான்.

ஆனால், வீட்டிலும், பள்ளியிலும், அவன் திறமையை யாரும் புரிந்து கொள்ள மறுத்தார்கள். அவன் நகராட்சிப் பள்ளியில்தான் படித்துக் கொண்டிருந்தான். படிப்பிலும் அவன்தான் முதலாக இருந்தான். தான் வரைந்த படத்தை மாணவர்களிடம் காட்டுவான். உள்ளூர அவர்களுக்கும் அது பிரமிப்பாகத்தான் இருக்கும். ஆனாலும், அவர்கள் அதை வெளிக்காட்டாமல் ஏளனமாகப் பேசுவார்கள்.

"ஏண்டா, இப்படி நோட்டுல கிறுக்கறே? இதைப் போயிப் படம்னு, சொல்றியே!'' எனக் கிண்டலடித்து வேண்டுமென்றே சிரிப்பார்கள். சில நண்பர்கள், சினிமா நடிகர்களின் பெயர்களைக் கூறி, "அவர்களைப் போன்றே படம் வரைந்துதாடா. நோட்டிலாவது வைத்துக் கொள்வோம்'' என ஏளனம் செய்வார்கள்.வீட்டில் பெற்றோரோ, "எப்பப் பாரு என்னடா, நோட்டை வெச்சு எழுதிக்கிட்டிருக்கே? அந்த நேரத்துல ஏதாவது பாடம் படிக்கக் கூடாதா? இல்லே, கூட மாட எங்களுக்கு ஏதாவது உதவி செய்யக் கூடாதா?'' என்பார்கள். அவனுக்குள் உறங்கிக் கிடந்த கற்பனைத் திறனை அறிந்து ஊக்கம் தர யாரும் முன்வரவில்லை. அவன் மனம் வேதனைப்படும்.

காண்கிற காட்சிகளையெல்லாம், காமிராக் கண்களால் படம் பிடித்து, பேசும் விரல்களை விளையாடவிட்டு கவனமாக ஓவியங்களாக்கிவிடும் அதிசயத் திறமை அவனுக்கு இருந்தது.

அன்று அவன் பள்ளியில் இருந்து திரும்பும்போது கடை

பத்மாரெங்கன்

வீதியில் குரங்காட்டி ஒருவனைப் பார்த்தான். குரங்காட்டி குரங்கை மிரட்டியது, குரங்கு பயந்தபடி ஆடியது எல்லாம் அவன் மனத்தில் பதிந்தது. அப்படியே வீட்டுக்கு வந்து அதை ஓவியமாக்கிவிட்டான்! பின்னால் இருந்து வந்த அவன் அப்பாவுக்கு அன்று வேலை பார்த்த இடத்திலே ஏதோ பிரச்னை. முதலாளி திட்டிவிட்டார். உலைக்களமாக எரிச்சலோடு வீட்டுக்குள் வந்த அவர் அரவிந்தன் படம் வரைந்து கொண்டிருந்ததைப் பார்த்தார். வேதனை ஆத்திரம் கண்களை மறைக்க, அவர் தன்னை மறந்தார். அந்த ஓவியத்தை இழுத்துச் சுக்குநூறாகக் கிழித்து எறிந்தார்.

"அடுத்தவேளை சாப்பாட்டுக்கு வழியில்லை. என்னடா ஓவியமும் காவியமும்?" என்று அரவிந்தனின் கன்னத்தில் அறைந்தார்.

அரவிந்தன் ஆடிப் போய் விட்டான். உடம்பில் வலித்ததை விட, மனதில் அப்பா அடித்த அடி பலமாக வலித்தது! மறுநாள் அவனுக்கு நல்ல காய்ச்சல் கண்டது. நான்கு நாட்களாகியும் விடாமல் அடிக்கவே, அரசாங்க மருத்துவமனையில் சேர்த்தனர். அங்கு பணியாற்றிய தலைமை டாக்டர் நந்தகுமார், கலை உள்ளம் கொண்டவர். அரவிந்தனுக்கு நல்ல முறையில் சிகிச்சை அளித்தார். ஒரு வார காலத்திலேயே அரவிந்தனிடம் சிறைபட்டுக் கிடந்த அற்புதமான ஓவியத் திறமையை அறிந்து கொண்டார்.

அரவிந்தனுக்கு அன்றுதான் காய்ச்சல் விட்டிருந்தது. மனம் உற்சாகமாக இருந்தது. படுக்கையில் எழுந்து அமர்ந்து கொண்டு சுற்று முற்றும் நோக்கினான்.

மூன்றாவது படுக்கையில் ஒரு சிறுமி. ஆறு வயது இருக்கும். ஊசி போட வந்த நர்சைப் பார்த்துப் பயந்தபடி அம்மாவின் கழுத்தைக் கட்டிப் பிடித்துக் கொண்டிருந்தாள். அப்பா தந்த சாக்லேட்டைக் கூ



வாங்கவில்லை! நர்சின் முகத்தில் இருந்த பொறுப்புணர்வு, அம்மாவின் முகத்தில் தேங்கியிருந்த கவலை, சிறுமியின் முகத்தில் இருந்த அச்சம், எல்லோரும் வேடிக்கை பார்த்த சூழ்நிலை எல்லாம் ஓவிய உள்ளம் படைத்த அரவிந்தனை உசுப்பின.

மதிய உணவாக வழங்கப்பட்ட ரொட்டியைச் சுற்றி வந்த காகிதம் கண்ணில் பட்டது. அதில் ஒரு பக்கம் ஒன்றுமே இல்லை. அதைச் சுருக்கம் நீக்கிக் கொண்டு, பென்சிலை எடுத்தான். தன்னை மறந்தான். அரை மணிக்குப் பிறகு அவன் ஓவியத்தை முடித்துவிட்டு நிமிர்ந்தபோது, தனக்கு அருகே டாக்டரும், நர்சும் இருப்பதைக் கண்டான். பயந்தான்.

"அற்புதம் அரவிந்தன்! இத்தனை திறமை உனக்குள் இருக்கும் என்பதை நான் எண்ணிப் பார்க்கவே இல்லை! சிறுமியின் முகபாவம், நர்சின் உணர்ச்சிகள், தாயின் கவலை எல்லாம் கச்சிதமாக இருந்தது இருந்தபடி வரைந்திருக்கிறாய்! எனது பாராட்டுகள்'' என்று தட்டிக் கொடுத்த டாக்டர், அவனைக் கையெழுத்திடச் சொல்லி, அந்தப் பென்சில் ஓவியத்தை வாங்கிக் கொண்டார்.

"ஓவியத் திறமை இருந்து என்ன புண்ணியம் டாக்டர்! அது இவனுக்குச் சாதம் போடுமா? ஏழைகளுக்கு கலை கற்பனை எல்லாம் இருக்கக் கூடாது சார். இருந்தால், படாதபாடுபடுவான். என் மகனைப் பாராட்டுவதைவிட, அவனுக்கு ஏதாவது வேலை வாங்கிக் கொடுங்கள். எனக்கு இருந்த வேலையும் போய்விட்டது'' என்று விரக்தியுடன் சொன்னார் அப்பா.

இரண்டு நாட்களில் அவனை வீட்டுக்கு அனுப்பிவிட்டார்கள்.

அரவிந்தனின் பள்ளிப் படிப்புக்கு முற்றுப் புள்ளி வைக்கப்பட்டு, மளிகைக் கடையில் எடுபிடியாக வேலைக்கு அமர்ந்தான். ஒரு மாதம் ஓடியது. அன்று கடை மூடும் நேரம். கடை வாசலில் ஒரு கார் வந்து நின்றது. டாக்டர்தான் இறங்கினார்.

"என்னுடைய வாழ்த்துகள் அரவிந்தன். நீ அன்று வரைந்த ஓவியம், ஜெர்மனியில் நடைபெற்ற ஓவியப் போட்டியில் ஆயிரம் டாலர் பரிசு பெற்றிருக்கிறது. அதோடு பத்து ஆண்டுகளுக்கு உன் கல்வி, ஓவியப் பயிற்சிக்கு ஆகும் செலவுக்கு மாதம் ஐந்நூறு ரூபாய் உதவித் தொகையும் வழங்கியிருக்கிறார்கள். நான் திறக்க உள்ள மருந்துக் கடையில் உங்கப்பாவுக்கு வேலை தரேன். சரிதானே?'' என்றார் டாக்டர்.

கண்களில் நீர் பொங்க பதில் கூற வாய் எழாமல் விம்மினான் அரவிந்தன்.





குழந்தைக் கவிஞர் அழ. வள்ளியப்பா நினைவுச் சிறுகதைப் போட்டி - 1996

பரிசு ரூ. 1000/-

சிறுவர் இலக்கியம் செழிக்கத் தன்னை முழுவதுமாக ஈடுபடுத்திக் கொண்ட, கோகுலத்தின் முதல் கௌரவ ஆசிரியர் குழந்தைக் கவிஞர் அழ. வள்ளியப்பா அவர்களின் நினைவாக இந்த ஆண்டும் இந்தச் சிறுவர் சிறுகதைப் போட்டியை அறிவிப்பதில் கோகுலம் பெருமை கொள்கிறது.

1. இந்தப் போட்டியில் பள்ளி மாணவ மாணவியர் (இவ்வாண்டு (1996) +2 எழுதியவர்கள் உட்பட) மட்டுமே கலந்து கொள்ளலாம். ஆசிரியர் அல்லது பெற்றோரின் கையொப்பமிட்ட சான்று இணைக்கப்பட வேண்டும்.

2. சிறுகதைகள் சிறுவர்களுக்கானதாக இருக்க வேண்டும். நகைச்சுவை, துப்பறிதல், சமூகம், வரலாறு, அறிவியல் என்று எதைப் பற்றியதாக வேண்டுமானாலும் இருக்கலாம். சொந்தக் கற்பனை என்ற உறுதிமொழியுடன் அனுப்ப வேண்டும். கோகுலத்தில், கதைகள் 3 முதல் 4 பக்கங்களுக்கு மேற்படாமல் அமைதல் வேண்டும்.

3. வெள்ளைத் தாளில் ஒரு பக்கம் மட்டுமே எழுதலாம். கையெழுத்து தெளிவாகப் புரியும்படி இருக்க வேண்டும். தட்டச்சு செய்தும் அனுப்பலாம். ஆனாலும் கட்டாயமில்லை.

4. பரிசு பெறாத, பிரசுரத்துக்கு ஏற்கப்படாத கதைகளைத் திரும்பப் பெற, போதிய தபால் தலைகளை ஒட்டிய உறையைக் கதைகளுடனேயே இணைக்க வேண்டும். பின்னால் தனியே அனுப்பிப் பயனில்லை. இது குறித்து எவ்விதக் கடிதப் போக்குவரத்தும் வைத்துக் கொள்ளப்பட மாட்டாது.

5. இதில் கலந்து கொள்ளக் கட்டணம் ஏதும் இல்லை. ஒருவரே எத்தனை கதைகள் வேண்டுமானாலும் அனுப்பலாம். ஆனால், ஒவ்வொன்றுக்கும் தனித் தனியாக உறுதிமொழி இருக்க வேண்டும்.

6. முதல் பரிசு ரூ. 300/ (ஒரு கதைக்கு) இரண்டாவது பரிசு ரூ. 200/- வீதம் இரண்டு கதைகளுக்கு. மூன்றாவது பரிசு ரூ. 100/- வீதம் மூன்று கதைகளுக்கு. ஆக மொத்தம் ரூ. 1000 பரிசாக வழங்கப்படும்.

7. தவிர, பிரசுரத்துக்கு ஏற்கப்படும் ஒவ்வொரு சிறுகதையும் ரூபாய் ஐம்பது பரிசாகப் பெறும். கதைகளை முதல் முறையாக வெளியிடும் உரிமை கோகுலத்திற்கே உண்டு. பிறகு இதன் உரிமை முழுவதும் ஆசிரியருக்கே

8. **முடிவு தேதி 30.6.96.** இதற்கு மேல் வருபவை பரிசீலனைக்கு ஏற்கப்பட மாட்டா. தபாலில் ஏற்படும் தாமதத்திற்கு கோகுலம் பொறுப்பேற்காது. நடுவர் குழு பரிசுக்குரிய கதைகளைத் தேர்ந்தெடுக்கும்.

9. அயல்நாட்டில் உள்ளவர்கள், இந்தியாவில் நண்பர் அல்லது உறவினர் முகவரியைக் கட்டாயம் தரவேண்டும்.

10. கதைகளை, "ஆசிரியர், கோகுலம், 47, ஜவாஹர்லால் நேரு சாலை, ஈக்காடுதாங்கல், சென்னை - 600 097" என்ற முகவரிக்கு அனுப்ப வேண்டும். உறையின் மேல் அழ. வள்ளியப்பா நினைவுச் சிறுகதைப் போட்டி" என்று அவசியம் குறிப்பிட வேண்டும்.

11. போட்டி குறித்து எழும் எவ்விதப் பிரச்னைகளுக்கும், சந்தேகங்களுக்கும் கோகுலம் ஆசிரியர் எடுக்கும் தீர்ப்பே முடிவானதாகும்.

காட்டில் நாட்டிய மேளா!

சிங்கராஜாவின் அமைச்சரவை கூடியிருந்தது. அமைச்சர் புலியார் வரவேற்புரை நிகழ்த்திய பிறகு, சிங்கராஜா எழுந்து கம்பீரமாகப் பேசத் தொடங்கினார்.

"நாமெல்லாம் இந்தியாவின் வனவிலங்குக் குடிமக்கள். தங்கள் தாய் நாடான இந்தியாவைப் பற்றி, இந்தியர்களுக்கு எத்தனை பெருமை உண்டோ, அதே அளவு பெருமை இந்தியாவின் காட்டு விலங்குகளான நமக்கும் உண்டு. இதை; இந்த உரிமையை யாருமே மறுக்க முடியாது. நமது விலங்குக் குடிமக்களின் நலனும், மகிழ்ச்சியுமே எனக்கு முக்கியம் என்பதை நீங்கள் எல்லோரும் அறிவீர்கள். மனிதர்கள், "நிருத்யாஞ்சலி", "நாட்டியாஞ்சலி" என்று நடன விழாக்களைக் கொண்டாடிப் பெருமையும், மகிழ்ச்சியும் கொள்வது போல், நாமும் நாட்டிய மேளா ஒன்றைக் கொண்டாட வேண்டும் என்று எல்லா விலங்குகளும் கோரிக்கை வைத்துள்ளன. இது காட்டுக் குடிமக்களான உங்கள் விருப்பத்திற்கு மதிப்பளிக்கும் ஆட்சி. எனவே, நமது காட்டிலும் ஒரு நாட்டிய மேளாவை நடத்துவது என்று முடிவு செய்துள்ளேன்."



புலியார் உட்பட எல்லா அமைச்சர் பெருமக்களும் கை தட்டித் தங்கள் மகிழ்ச்சியை வெளியிட்டனர்.

"இந்த நாட்டிய மேளாவில் நடனம் ஆடத் தெரிந்த; ஆட விருப்பமுள்ள எல்லா விலங்குகளும் பறவைகளும் கலந்து கொள்ளலாம். கலந்து கொள்ளும் எல்லோருக்கும் பரிசு வழங்கப்படும். மிகச் சிறப்பாக ஆடுபவர்களுக்கு 'நாட்டிய மணி' என்ற பட்டமும், தங்கப் பதக்கமும் வழங்கப்படும். புலியார் பொறுப்பேற்று இந்த விழா ஏற்பாடுகளைக் கவனிப்பார். பங்கு கொள்ள விருப்பம் உள்ளவர்கள் அவரிடம் பெயரைக் கொடுங்கள்" என்றார் சிங்கராஜா.

காட்டில் மகிழ்ச்சி நிறைந்த பரபரப்பு. போட்டி போட்டுக் கொண்டு விலங்குகளும் பறவைகளும் பெயர் கொடுத்தன.

"நான் தத்தித் தத்தி ஆடுவேன்" என்று முதலில் வந்தார் குருவியார். "காது தாளம் போட, துதிக்கையை அசைத்து, முகத்தை ஆட்டி நானும் ஆடுவேன்" என்று பின்னால் வந்தார் யானையார். "வாலைக் கிளையில் சுற்றி

தலை கீழாகத் தொங்கியபடி விதம் விதமான அடவுகளுடன் ஆடுவேன்" என்றார் குரங்கார். "தாளம் தப்பாது துள்ளித் துள்ளி ஆடுவேன்" என்றது புள்ளிமான். "நான் தாவித்தாவி ஆடுவேன்" என்றது முயல். "நான் பரத நாட்டியமே ஆடுவேன்" என்றார் கரடியார். "எங்களால் ஜதி போட முடியும்" என்றன ஒட்டகமும், ஒட்டகச் சிவிங்கியாரும்.



விலங்கு, பறவைகளின் நாட்டிய ஆர்வத்தைக் கண்டு புலியார் அசந்து போனார். இந்த அளவுக்கு வரவேற்பு இருக்கும் என்பதை அவர் எதிர்பார்க்கவே இல்லை. இத்தனை பேர் கலந்து கொண்டாலும், நாட்டிய மணிப் பட்டத்தை மயிலார்தான் தட்டிக் கொண்டு போவார் என்றே எல்லோரும் எண்ணினர். நாட்டியம் என்றதுமே மயிலின் நினைப்புத்தானே வருகிறது? இருந்தாலும் கடைசி நாள்வரை மயிலார் பெயர் கொடுக்க முன்வரவில்லை! புலியாருக்கு இது வியப்பாகத்தான்





இருந்தது. 'ஒருவேளை நாட்டியமேளா நடக்கும் செய்தியும், போட்டி பற்றிய விவரங்களும் மயிலாருக்குத் தெரியாதோ என்று அவர் எண்ணினார். அதனால் நரியாரை அனுப்பி வைத்தார்.

"ஆடுவதற்கு என்றே பிறந்த என் உடலின் அழகைப் புகழாத இந்திய இலக்கியங்களே கிடையாது.



அப்படிப்பட்ட நான், ஆடத் தெரியாத கத்துக் குட்டிகளுடன் போட்டியிட்டு நாட்டியமணி பட்டத்தையும், பதக்கத்தையும் பெறுவது என் திறமைக்கு இழைக்கப்படும் அவமானம் இல்லையா? எனக்குப் பட்டமும் வேண்டாம், பதக்கமும் வேண்டாம், நான் போட்டியிடவும் போவதில்லை" என்று கர்வத்தோடு கூறிவிட்டது மயில்.

மயிலின் செய்தியுடன் புலியாரிடம் வந்தார் நரியார்.

மயிலுக்குத் தன் நாட்டியத்தைப் பற்றி அளவில்லாத கர்வம். 'சிங்கராஜாவே நேரில் வந்து அழைத்தால்தான், இளவரசனின் திருமண வரவேற்பில் நாட்டியமாடுவேன்' என்று அது திமிராகக் கூறியதை புலியார் இன்றும் மறக்கவில்லை. அதனிடம் அற்புதமான நாட்டியத் திறமை இருக்கிறது. அதை யாருமே மறுக்க முடியாது. ஆனால், அதற்காக இத்தனை கர்வமாகப் பேசுவதை எப்படிப் பொறுப்பது? மயிலின் நாட்டியம் இல்லாது நாட்டிய மேளாவை நடத்துவதும் பொருத்தமாக இருக்காது. என்ன செய்யலாம்?' என்று யோசித்தார் புலியார். சிங்கராஜாவிடம் கூறி கருத்தைக் கேட்டார்.

"நேரில் போய் அழைத்துப் பாருங்கள்" என்றார் சிங்கராஜா. வேறு வழியில்லாமல் புலியார் மயிலைத் தேடிக் கொண்டு போனார்.

"மற்றவைகளோடு போட்டியிட மாட்டேன். எனக்கு என்று சிறப்பாக ஆட, தனிநேரம் ஒதுக்குங்கள். போட்டியில் சிறப்பாக ஆடுபவருக்கு நாட்டிய மணி பட்டமும் பதக்கமும் கொடுங்கள். எனக்கு நாட்டிய மாமணிபட்டமும் பதக்கமும் கொடுங்கள்" என்று நிபந்தனை போட்டு ஒரு வழியாக இணங்கியது மயில்.

புலியார் இசைந்தார்.



வீட்ல திருப்பதி இருக்கானா?

இல்லே. நான் அவன் அப்பா சிதம்பரம். உங்களுக்கு என்ன வேணும்?

அவன் வந்தா காசிலேருந்து பழனி வந்தான்னு சொல்லுங்க. பாபனாசத்தைக் கூட்டிக்கிட்டு குத்தாலம் வீட்டுக்கு வரச் சொல்லுங்க.

— கே. சுதர்சன்

"இன்னும் ஒரு முக்கிய நிபந்தனை. என்னை அழைத்துப் போக ராஜ குடும்பத்துப் பல்லக்கு வர வேண்டும். இந்த கனத்த தோகையைத் தூக்கிக் கொண்டு வந்தால், நடந்த களைப்பில் ஆடவே வராது" என்றது மயில்.

வந்த ஆத்திரத்தில், மயிலை அங்கேயே குருமா பண்ணிவிடலாமா என்று துடித்தார் புலியார். இருந்தாலும், தான் வகிக்கும் பதவிக்கும், ஏற்றுக் கொண்டுள்ள பொறுப்புக்கும் அது அழகல்ல என்று அடக்கிக் கொண்டு அதற்கும் இசைந்தார்.

"பொறுப்பேற்றுக் கொண்டு விட்ட ஒரே காரணத்தால், இந்தத் திமிர் பிடித்த மயிலின் நிபந்தனைகளுக்கெல்லாம் இணங்கும்படி ஆயிற்றே! இதன் கர்வத்தை அடக்க யாராலும் முடியவில்லையே!" என்று மனம் புழுங்கினார் புலியார்.

"நீங்கள் கூறிவிட்டீர்கள் அல்லவா? இந்த மயிலின் கர்வத்தை நான் அடக்கிக் காட்டுகிறேன்" என்றார் நரியார்.

நாட்டிய மேளா நாள். மிக அழகாக அரங்கம் அமைக்கப்பட்டிருந்தது. விலங்குகளும் பறவைகளும் அமர்ந்து பார்க்க நன்கு வசதி செய்யப்பட்டிருந்தது. போட்டி நடுவர்களுக்குத் தனி ஆசனங்கள். பதக்கங்களும், பட்டங்களும் பார்வையாக வைக்கப்பட்டிருந்தன.

மேளா தொடங்குமுன், ஒப்புக் கொண்டபடி சிங்கராஜாவின் பல்லக்கோடு நரியார், மயிலை அழைத்துவரப் போனார்.

"நான் வசதியாக உட்காருவதைவிட, என் தோகையைப் பற்றித்தான் கவலை. என்னுடையதைப் போன்ற அடர்ந்த நீண்ட, கனமான, அழகான தோகை சுற்று வட்டாராக் காடுகளில் எந்த மயிலுக்கு இருக்கு? அதை மடங்கவிடாமல் உட்காரணும்" என்று தற்பெருமையோடு பல்லக்கில் ஏறியது மயில்.

"மயிலாரே... தோகையை அந்த மூலையில் படும்படி வைக்காதீர்கள்... அங்கே..." என்று ஏதோ கூற வந்தார் நரியார்.

"தோகையை எப்படி வைத்துக் கொண்டு உட்கார வேண்டும் என்பது எனக்கு தெரியும். நீர் சொல்ல வேண்டாம்", என்று முகத்தில் அறைந்தது போல் இடை மறித்தது மயில்.

நரியாரும் இதைத்தானே எதிர் பார்த்தார்! அரங்கம் வந்தது. ஒப்புக் கொண்டபடி, மயிலுக்குத் தனி ஆசனம் போட்டார்கள். அரச குடும்பத்தினர் வந்தமர்ந்தனர். மேளா தொடங்கியது.

பெயர் கொடுத்திருந்த பறவைகள் விலங்குகள் எல்லாம் வரிசையாக வந்து தங்கள் திறமையைக் காட்டி ஆடின. கைதட்டல் உற்சாகம் பொங்கி வழிந்தது.

நெளிந்து நெளிந்து, படமெடுத்து ஆடிய நாகப்பாம்புக்கு 'நாட்டியமணி' பட்டமும் பதக்கமும் வழங்கப்பட்டது. சிங்கராஜாவின் பாராட்டுரைக்குப் பிறகு, மயிலின் சிறப்பு நடனம் தொடங்கியது.

பக்க வாத்தியக்காரர்கள் எல்லாம் தயாராக இசை எழுப்பினர். மயில், ஒயிலாக மேடை ஏறி ஒய்யாரமாக வணங்கியது. தோகையை விரிக்க முயன்றது. என்னவோ தடுத்தது. மறுபடி முயன்றது. விசிறிபோல் பரந்து, வர்ண ஜாலங்களைப் பொழியும் அந்த அழகான தோகையைப் பிரிக்கக்கூட

முடியவில்லை! என்ன ஆயிற்று!

காத்திருந்த கூட்டம் விசிலடித்துக் கிண்டல் செய்தது. மயில் தவித்தது!

"நல்லா வேண்டும். என்னவெல்லாம் நிபந்தனை போட்டது? இந்த அழகில் நாட்டிய மாமணிப்பட்டமும் பதக்கமும் வேற! தோகையை விட, வாய் நீளம்" என்று கேலி பேசி மகிழ்ந்தது கூட்டம்.

மயிலின் நிலையைக் கண்டு இரக்கப்பட்டவர் நல்ல மனம் படைத்த சிங்கராஜா ஒருவர் மட்டுமே!

"என்ன ஆயிற்று உனக்கு?" என்று பரிவோடு கேட்டார்.


"தோகையைப் பிரிக்கவே முடியலே! என்ன ஆச்சுன்னும் தெரியலே!" என்று விசும்பியது மயில். அதன் அகங்காரமான பேச்சு மறைந்து விட்டது.

"காரணம் எனக்குத் தெரியும் மகாராஜா" என்று முன்னே வந்தார் நரியார். எல்லோரும் ஆவலாக அவரை நோக்கினர்.

"அரண்மனைப் பல்லக்கை எடுத்துக்கிட்டு மயிலை அழைத்துவர நான்தான் போனேன். பல்லக்கின் ஒரு பகுதியில் விரிசல் இருந்தது. அதை ஒட்ட வைக்க கனமா ஃபெவிகால் போட்டிருந்தாங்க. அது காயாம இருந்தது. மயில், அதன்மேல் தன் தோகையைச் சாய்ச்சு வைச்சது. நான் தடுக்க முயன்றப்போ என் தோகையை எப்படி வைச்சுக்கிட்டு உட்காரணும்கறது எனக்குத் தெரியும். நீ சொல்லதேன்னு கர்வமா முகத்தில் அடித்தது மாதிரி சொல்லித் தடுத்து விட்டது. தோகையில் காயாத ஃபெவிகால் பட்டு, இப்போ காய்ஞ்சு பிரிக்க முடியாம இறுக்கி ஒட்டிக்கிடுத்து. நிபந்தனை போட்டு பெரிய நாட்டிய மாமணிப் பட்டம் வாங்க வந்தது. ஆனால், சிட்டுக் குருவி ஆடின தத்து நடனத்தைக்கூட ஆட முடியாம இப்போ தலை குனிஞ்சு நிக்குது. ஆணவத்துக்கு ஏத்த தண்டனையை, ஆண்டவனே கொடுத்துட்டான்."

இப்பொழுதெல்லாம் மயிலின் ஆணவம் போன இடமே தெரியவில்லை!

உலகம் போற்ற




அன்பு கொண்டு வாழ்ந்திட்டால்
அகிலம் உன்னைப் போற்றுமே!
பண்பு கொண்டு வாழ்ந்திட்டால்
பாரே உன்னை வாழ்த்துமே!

கடமை செய்து வாழ்ந்திட்டால்
காசினி உன்னைப் போற்றுமே!
மடமை நீக்கி வாழ்ந்திட்டால்
மாநிலம் உன்னை வாழ்த்துமே!

ஒழுக்கத் தோடு வாழ்ந்திட்டால்
ஊரே உன்னைப் போற்றுமே!
உழைப்பைக் கையில்
கொண்டிட்டால்
உலகே உன்னை வாழ்த்துமே!


இரா. வேதநாயகம்



நேயங்கள் சொல்லப்படும்


- சேரநம்பி

• **வரலாற்றுப் பெருமைமிக்க கான்ஸ் டாண்டி நோபிள் இருக்கிறதா இல்லை அழிந்து விட்டதா? - மா.லூர்து சாலமன், பொன்மலை.**



உலக வரலாற்றில் தனி இடம் பெற்று விட்ட கான்ஸ்டாண்டி நோபிள் இன்னமும் இருக்கிறது டர்கி TURKEY என்ற பெயரில்.

• **புவிசர்ப்பு விசை இல்லையேல் வான வெளியில் என்ன நடக்கும்? - க. டேனியல் தம்பையா, சிக்கரெட்டிபாளையம்.**






முதலில் நாம் கண்டு மகிழும் நிலா இருக்காது! அம்புலிமாமா அண்டவெளிக்குள் தள்ளப்பட்டு எங்கோ கண்காணாமல் போயிருப்பார்!


• **உலகின் முதல் கார்ட்டூன் சினிமா எது? - மோ. புண்யகோடி, அறந்தாங்கி.**

உலகின் முதல கார்டூன் சினிமா என்பது "THE ENCHANTED DRAWING". இது 1900




ஆம் ஆண்டு, நவம்பர் 16ஆம் நாள் வெளியிடப்பட்டது. ஓவியர் ஒருவர் எப்படி எல்லாம் தன் ஓவியங்களை வரைகிறார், அவைகளின் பாவங்களை மாற்றுகிறார் என்பதை விளக்கும் ஓவியக் கல்விப் படம் இது. இதை வெளியிட்டவர் J. STUART BLACKTON. இவரே ஓர் ஓவியர்தான். ஆனால், கார்டூன் என்பதற்கு இன்று சில எதிர்பார்ப்புகள் இருக்கும் எந்த ஒரு அம்சமும் இதில் இல்லை. கதையம்சம் சிரிப்பு நிறைந்த இன்றைய கார்டூன் படங்களின் வரிசையில் முதலில் தயாரான கார்டூன் படம் "FANTASMAGORIE" இதன் தயாரிப்பாளர் EMILE GOHL. இது முதலில் 1908 (ஆகஸ்ட் 17) ஆம் ஆண்டு பாரீசில் திரையிடப்பட்டது. இவர் தொடர்ந்து கார்டூன் படங்களைத் தயாரித்துப் பெருமை பெற்றார். இதற்குப் பிறகு தான் வால்டிஸ்னியின் தயாரிப்புகள் வெளிவந்தன.

• **யுரேனஸ் கிரகம் எப்பொழுது கண்டுபிடிக்கப்பட்டது? யார் கண்டுபிடித்தார்கள்? - வி. ஜோதிராணி, அரிசிபாளையம்.**



யுரேனஸ் கோளைக் கண்டுபிடித்தவர் வில்லியம் ஹெர்செல் (HERSCHEL). ஆண்டு 1781. இது மிகவும் தற்செயலாக, தொலைநோக்கியின் உதவியால் கண்டுபிடிக்கப்பட்டது!.

• **எல்லா வால் நட்சத்திரங்களுக்கும் ஒரே அளவான வால்தான் இருக்குமா? அதிக நீளமான வால் கொண்ட வால் நட்சத்திரம் எது? – வா. முத்துக்கனி, விருதுநகர்.**




எல்லா வால் நட்சத்திரங்களுக்கும் (COMET) வாலின் அளவு ஒரே மாதிரி இருக்காது. வேறுபடும். 1843 ஆம் ஆண்டு தோன்றிய (காணப்பட்ட) வால் நட்சத்திரத்திற்கு 330 மிலியன் கி.மீ. நீளவால் இருந்திருக்கிறது. இதுதான் இதுவரை காணப்பட்டவைகளில் அதிக நீள வால் கொண்டது!

• **முதல் ஆஸ்கார் அவார்டுகள் எப்பொழுது வழங்கப்பட்டன? – கு. சுதர்சனம், ஸ்ரீமுஷ்ணம்.**



முதல் ஆஸ்கர் அவார்டுகள் 1928 ஆம் ஆண்டு வழங்கப்பட்டன.

• **உலகப் புகழ்பெற்ற ஓவியர் பிக்காசோவின் முழுப் பெயர் என்ன? இவர் எந்த நாட்டைச் சேர்ந்தவர்? – தா. வள்ளிநாயகம், வில்லியனூர்.**




பிகாசோ ஸ்பெயின் நாட்டைச் சேர்ந்தவர். முழுப் பெயர் PABLO PICASSO. ஸ்பெயினில் பிறந்தார். ஆண்டு 1881. பேசக் கற்கும் முன்பே ஓவியம் வரையத் தொடங்கிய மேதை. மறைந்தது 1973.

• **புத்தர் போதித்ததெல்லாம் எந்த மொழியில்? நான் சமஸ்கிருதம் என்கிறேன். என் நண்பன் நேபாளி என்கிறான். பந்தயம் கட்டியிருக்கிறோம். – வ. சு. தாமோதரன், திருத்துறைப்பூண்டி..**



புத்தபெருமான் போதித்தது எல்லாம் நேபாளியிலும் அல்ல சமஸ்கிருதத்திலும் அல்ல. பாலி மொழியில். பரிசை எனக்கு அனுப்பி வையுங்களேன்!


• **உலகில் முதல் இராணுவ விமானப் படை எந்த நாட்டில் அமைக்கப்பட்டது? – கா. வித்யாவதி, பெங்களூர் - 12.**



முதல் விமானப் படையை அமைத்த பெருமைக்கு உரிய நாடு இங்கிலாந்துதான். ஆண்டு 1918.

• **அண்டார்க்டிகாவை முதலில் கண்டு பிடித்தவர் யார்? ஒவ்வொரு புத்தகத்திலும் ஒவ்வொரு மாதிரி உள்ளதே? – கு. கமலநாதன், வாணியம்பாடி.**

அண்டார்க்டிகாவைக் கண்டுபிடிக்கும்




முயற்சியில் இங்கிலாந்து, அமெரிக்கா, பிரான்ஸ், ஸ்பெயின் போன்ற பல நாடுகள் ஈடுபட்டன. ஒவ்வொரு நாட்டைச் சேர்ந்தவர்களும் அண்டார்க்டிகாவின் ஏதோ ஒரு பகுதியைத் தொட்டு விட்டு (அது அண்டார்க்டிகா என்பது அவர்களுக்கே தெரியாது!) வந்துள்ளனர். தங்கள் நாட்டுக்குப் பெருமை சேர்க்க அவர்களே அண்டார்க்டிகாவைக் கண்டுபிடித்ததாக ஒவ்வொரு நாடும் சொல்லிக் கொள்கின்றன. இதில் கணக்கு வழக்கே இல்லை. இது நீண்ட கால முயற்சி. ஆஸ்திரேலியாவைச் சேர்ந்த சர்ஜேம்ஸ் CLORKROSS என்பவர் 1840ல் மேற்கொண்ட பயணத்தின் முடிவில், அண்டார்க்டிகாவைப் பற்றி அறிவியல் அடிப்படையில் பல செய்திகளைத் தொகுத்து வெளியிட்டார். இதை எல்லா நாடுகளும் ஏற்றன. இதன் அடிப்படையில் அண்டார்க்டிகாவில் உள்ள ஓர் வளைகுடாவிற்குக் கூட அவர் பெயர் சூட்டப்பட்டுள்ளது. எனவே அண்டார்க்டிகாவை அறிவியல் அடிப்படையில் உலகுக்கு அறிமுகம் செய்து வைத்த பெருமைக்கு உரியவர் இவரே எனக் கொள்ளலாம்.

• **மூக்குக் கண்ணாடியைக் காதில் தானே மாட்டிக் கொள்கிறோம்? அப்போ காதுக் கண்ணாடி என்பதுதானே சரி? – கா. நஜ்முதீன், பழந்தண்டலம்.**



அருமையான கேள்விதான்! SPECTACLES என்று ஆங்கிலத்தில் அழைக்கப்படுவதைத் தான் மூக்குக் கண்ணாடி என்கிறோம். இவை கண்டுபிடிக்கப்பட்ட புதிதில் முகத்தில் அணியப்படவில்லை. பூதக் கண்ணாடியில் பார்ப்பது போலவே, கையில் பிடித்துக் கொண்டு பார்க்கப்பட்டன. முகத்திற்கு வந்த போது இவை மூக்கில்தான் அமர்ந்தன! பிறகே காதுக்கு ஏறிக் கொண்டன! எனவே, மூக்குக் கண்ணாடி என்பது சரியான காரணப் பெயரே! இப்பொழுது காதுக்கு ஏறிக் கொண்ட பிறகும் கூட இவை மூக்கில் தாங்கலாகத்தானே அமர்ந்துள்ளன?

• **முகத்திற்குப் போடும் TALC FACE POWDERரை முதலில் கண்டுபிடித்தவர்கள் யார்? - இ. பெர்னாண்டஸ், மதுரை – 7.**



இத்தாலியில்தான் நாட்டிய அரங்குகள் அதிகம். இவைகளில் ஆடினவர்கள் பயன்படுத்திய மேக்கப் பவுடரே, இன்னும் எளிமையாக்கப்பட்டு முகப் பவுடராகப் பயன்படுத்தப் பட்டது.

• **செவாலியர் விருதை பிரெஞ்சு அரசாங்கம்தான் தருகிறதா? – மா. கௌதம், ஊத்துக்கோட்டை.**



அதிலென்ன சந்தேகம்! இந்த 'செவாலியர்' விருதுக்கு பெருமைமிக்க வரலாறே உண்டு. இந்த விருதை ஏற்படுத்தியவர் பிரெஞ்சு மன்னர் நெப்போலியன் போனபார்ட்.


• **எளிமைக்கு எடுத்துக்காட்டாக விளங்கிய காந்தியடிகள், ரயிலில் மூன்றாம்**

வகுப்பில்தான் பயணம் செய்தார் என்கிறார்களே? இவரைப் போல எளிமையானவர்கள் வேறு யாராவது உண்டா? – வி. ஜவஹர் பாட்ஷையா, நாகர்கோயில்.




உலகப் புகழ்பெற்ற விஞ்ஞானி அல்பர்ட் ஐன்ஸ்டீனுக்கு நோபல் பரிசு வழங்கப்பட்டது இல்லையா? இதை வாங்க ரயிலில் அவர் பயணம் செய்தது எந்த வகுப்பில் தெரியுமா? மூன்றாம் வகுப்பில்! காந்தியடிகளும் ஐன்ஸ்டீனும் எளிமையானவர்களே. சந்தேகமில்லை.

• புறநானூறு, அகநானூறு இரண்டிலும் இருபாடல்களைத் தந்துள்ள ஊட்டியார் என்ற சங்ககாலப் புலவர், எங்கள் ஊரைச் சேர்ந்தவர்தானே? –சி. மாதேஸ்வரன், உதகை.



தம்பி, ஊட்டி என்று ஆங்கிலேயர்களால் அழைக்கப்படும் உங்கள் உதகைக்கும், சங்க கால ஊட்டியாருக்கும் தொடர்பே இல்லை. சங்ககால ஊட்டியார், கவிதை நயம் "ஊட்டப் பெற்ற" என்ற பெருமை காரணமாக ஊட்டியார் என்று அழைக்கப்பட்டார். இவருக்கும், ஆங்கிலேயர்கள் வைத்த ஊட்டிக்கும் சம்பந்தமே இல்லை.

• அடிமை ஒழிப்பு முறை என்றதும் ஆப்ரகாம்லிங்கனின் நினைவுதானே வருகிறது? – மா. பொன்னுத்தாய், பொன்னாச்சி – 2.




உண்மைதான். அமெரிக்காவில் அடிமை முறையை ஒழிக்க ஆப்ரகாம் லிங்கன் ஆற்றிய போராட்டம் உலகறிந்த ஒன்று. மனிதாபிமானம் மிக்க எவரும் அடிமை முறையை வெறுப்பார்கள். பண்டைய நாகரீகம் மிக்க ரோமாபுரியில், அடிமை முறையை எதிர்த்துக் கேட்ட ஒரே காரணத்திற்காக ஸ்பார்டாக்ஸ் என்ற வீரனும் அவனுடன் சேர்ந்த 6000 அடிமைகளும் கொல்லப்பட்டிருக்கிறார்கள்! அவ்வளவு ஏன்? அப்ரஹாம் லிங்கனுக்கே கூட என்ன முடிவு ஏற்பட்டது? 'நாகரீக வளர்ச்சி பண்பாடு என்பதெல்லாம் பேச்சுக்கு மட்டும்தானா? நடைமுறைப்படுத்த இல்லையா?' என்றுதானே நினைக்கத் தோன்றுகிறது?

''சின்னவன் முறைச்சிகிட்டு நிற்கிறானே ஏன்?''

"இவனுக்கு பிப்ரவரி 29-ல பிறந்த நாள் வர்றதுனால நாலு கேக் வெட்டி, நாலு டிரஸ் வாங்கிதான் கொண்டாடணுமாம்."

– மு. தனகோபாலன்



நீதான்

விஜி வியப்புடன் மீனாவைப் பார்த்தாள்.

"என்னடி... மீனா... நீ மட்டும் தனியா வர்றே... உன் ஃபிரண்ட் பார்கவி எங்கே...?"

"ஒரு வாரமா அவ என்னோட வர்றதில்லே..."

"ஏண்டி... என்ன விஷயம்? 'டூ' விட்டுட்டியா...?" என்றாள் விஜி விஷயத்தைத் தெரிந்து கொள்ளும் ஆர்வத்தில்!

"அதெல்லாம் இல்ல... நம்ப கிளாஸ்ல இருக்காளே அனு, அவ பார்கவி வீட்டுப் பக்கத்திலே குடி வந்துட்டா... அதான் அவளோடவே ஒட்டிக்கிட்டு போறா... வர்றா..." என்றாள் மீனா எரிச்சலுடன்.

முதல் பெல் அடிக்கவே இருவரும் வேகமாக ஓடினார்கள்.

விஜிக்கு ஒருவிதத்தில் மகிழ்ச்சி. 'இந்த மீனா எப்பவுமே 'பார்கவி பார்கவி'ன்னு அவளோடேயே இருப்பா. நம்பளை கவனிக்கவே மாட்டாள். இப்ப நல்லா வேணும். இனிமே என்ன பண்ணப் போறான்னு பார்க்கலாம்' என்று விஜி மனசுக்குள்ளேயே மகிழ்ந்தாள்.

வகுப்பு முடிந்து போகும்போது பார்கவியும் அனுவுமே சேர்ந்து போனார்கள். மீனாவைப் பார்த்ததும் பார்கவி 'ஹலோ' சொல்லிச் சிரித்துவிட்டுப் போனாள். மீனா பதிலுக்குச் சிரிக்கக் கூட இல்லை!



யாரையும், பார்க்கவோ, பேசவோ பிடிக்கவில்லை மீனாவுக்கு. 'பார்கவி ஏன் இப்படி மாறிட்டா...? என்ன வந்தது அவளுக்கு...?' என்று குழம்பிக் கொண்டே வீட்டிற்குப் போனாள்.

மான் குட்டியாய்த் துள்ளி வந்து அம்மாவின் கழுத்தைக் கட்டிக் கொண்டு, காப்பி குடித்தவுடன் தான் பள்ளி யூனிஃபார்மைக் கழற்றுவாள் மீனா... ஆனால், இந்த நாலைந்து நாட்களாக யாருடனும் பேசுவது கிடையாது. தம்பிக்குச் சரிசமமாகச் சண்டை போடுபவள் இப்பொழுதெல்லாம், எதுவுமே இல்லை! காற்றைப் பிடுங்கிய பலூனாக சூம்பிப் போய்த் தன் அறைக்குள் போய் எதுவுமே செய்யப் பிடிக்காமல் ஏக்கத்துடன் இருந்தாள்.


அம்மா இதைக் கவனித்து விட்டாள். ஆனாலும் வீட்டில் விருந்தாளிகள் வந்திருந்ததால் மீனாவிடம் தனியே பேசி எதையும் கேட்க முடியவில்லை. 'ஏன் என்னவோ போல் இருக்கிறாள்!' என்ற

கவலை உறுத்தல் மட்டும் அம்மாவுக்கு இருந்து கொண்டேயிருந்தது.

ஒரு வழியாக விருந்தினர்கள் ஊருக்குக் கிளம்பிச் சென்றதும் அம்மா மீனாவின் வருகையை ஆவலுடன் எதிர்பார்த்துக் காத்திருந்தாள்.

அன்றும் சோர்ந்த முகத்துடனேயே உள்ளே நுழைந்தாள் மீனா. பழைய மகிழ்ச்சியும் ஆட்டபாட்டம் துள்ளலும் விடைபெற்றிருந்தன. தன் அறைக்குச் சென்று புத்தகத்தை வைத்துவிட்டு,

அசடு!



சீருடையைக் கூடக் கழற்றத் தோன்றாமல் உட்கார்ந்திருந்தாள்.

அம்மா, மீனாவுக்குப் பிடித்தமான ரவா இட்லியையும், கொத்துமல்லி சட்னியையும் எடுத்துக் கொண்டு உள்ளே நுழைந்தாள். அம்மாவை மெதுவாக ஏறிட்டுப் பார்த்துவிட்டு மீனா தலையைக் குனிந்து கொண்டாள்.

தலையை அன்போடு கோதி விட்டு, டிபனைச் சாப்பிடச் செய்தாள் அம்மா.

"உனக்கு என்னாச்சு? ஏன் ஒரு மாதிரியா இருக்கே? விருந்தாளிங்க இருந்தாலே, உன்கிட்டே என்னால பேச முடியலே... சொல்லு...?" என்றாள் அம்மா அன்போடு.

மௌனமாக உட்கார்ந்திருந்தாள் மீனா.

"ரேங்க் கொறைஞ்சுடுச்சா? இல்ல மிஸ் திட்டினாங்களா?"

"அதெல்லாம் இல்லேம்மா. இந்த பார்கவி இல்லே... அவ என்னோட இப்பல்லாம் வரவே மாட்டேங்கறா... நானும் அவளும் பள்ளிக்குப் போறதிலிருந்து, படிக்கறது வரை சேர்ந்துதானே எல்லாம் செய்வோம்? இப்ப என்னடான்னா என்னுடன் வரவே மாட்டேங்கறா...! என்ன காரணம்னே தெரியலைம்மா..."

தேவசேனா

"இவ்வளவுதானா? என்னவோ, ஏதோன்னு பயந்தேன்."

"என்னம்மா...! இதை இவ்வளவு சர்வ சாதாரணமா சொல்றே! நாங்க எவ்வளவு நட்போட இருந்தோம்கறது உனக்குத் தெரியுமே. ஆறாவதுலேருந்து இப்ப பிளஸ்டு வரை ஒண்ணாத்தானே படிச்சுக்கிட்டு இருக்கோம்? அவ கணக்கு இங்கிலீஷ்ல எல்லாம் எவ்வளவு வீக்? மிஸ் திட்றாங்கன்னு எப்படி அழுவா...? நான் சொல்லிக் கொடுத்து, ஆறுதலா பேசினதாலத்தானே எல்லா சப்ஜெக்ட்லேயும் பாஸ் மார்க் வாங்கினா? அதைக் கூட எப்ப

டிம்மா மறந்தா? அவ வீட்டுக்குப் பக்கத்தில, அனுன்னு எங்க வகுப்புதான், புதுசாக் குடி வந்திருக்கா... அவளோடேயே எப்பப் பார்த்தாலும் போறாளே! என்னோட வர்றதே இல்லையேம்மா...?'' என்றாள் மீனா கண்களில் கண்ணீருடன்.

"நீதாண்டி அசடு! பார்கவி வீட்டுக்குப் பக்கத்தில அனு இருக்கா... அதனால அவளோட போறா... இதில என்ன தவறு இருக்கு...? நாம அவளுக்குப் பாடம் சொல்லிக் கொடுத்ததையெல்லாம் சொல்லிக் காட்டக் கூடாது. உண்மையான சிநேகிதிகளுக்குள் இருக்க வேண்டிய ஒட்டுதல் அது. அவ வீட்டுக்கு அருகே இத்தனை நாளா யாருமே அவளுக்குச் சிநேகிதிகள் இல்லே. அதனால இங்கே வந்து உன்னோட பழகினா. இப்ப, பக்கத்துலேயே ஒரு சிநேகிதி வந்தப்புறம் அவளோட போறா, வரா. இதுலே என்ன தப்பு? அடுத்த ஆண்டு நாம்ப புது காலனிக்குக் குடி போகப் போறோமே? அப்ப நீ என்ன பண்ணுவே? பார்கவியோடதான் போகணும்னு இத்தனை தூரம் தினமும் வருவியா, சொல்லும்மா?''

அம்மாவின் அணுகுமுறை புதிதாக இருந்தது மீனாவுக்கு.

"நல்ல பொண்ணு... இனிமே இது மாதிரியெல்லாம் பைத்தியக்காரத்தனமா நீயே மனத்தைப் போட்டு வருத்திக்காதே. அடுத்த ஆண்டு கல்லூரியிலே பெரிய வகுப்பிலே அடியெடுத்து வைக்கப் போறே. இன்னும் எல்.கே.ஜி., யு.கே.ஜி. பசங்க மாதிரியிருந்தா என்ன வளர்ச்சி? எதுக்கெடுத்தாலும் தொட்டால் சிணுங்கியா, இருந்தால் எப்படி? எதையும் மத்தவங்க கண்ணோட்டத்துல பார்க்கிற பக்குவம் வேணும். இப்படி இதையே நெனச்சுக்கிட்டு இருந்தா, படிப்பிலே எப்படிக் கவனம் செலுத்துவே? மாநில அளவில் ரேங்க் வாங்கணும்னு சொல்லுவியே? அதையெல்லாம் எப்படி சாதிப்பே? இதுமாதிரி அவ பேசலே, இவ சிரிக்கலேன்னு சொல்லி வருத்தப்பட்டுக்கிட்டு இருந்தா, உன்னோட உடம்புதான் பாதிக்கும். நாளைக்கே நீ பார்கவியப் பார்த்துச் சிரிச்சா, அவளும் சிரிச்சுட்டுப் போறா. இதெல்லாம் பெரிய விஷயமா...? இதுக் கெல்லாம் இப்பவே ஒரு முற்றுப் புள்ளி வை. இந்தக் கம்ப்யூட்டர் யுகத்தில காகிதப்பூ மாதிரி இருக்கணும். என்னவோ ஏதோன்னு ஒரு வாரமா நான் ரொம்பக் கவலைப்பட்டுப் போயிட்டேன். இப்படி அம்மாவை பயப்பட வச்சுட்டியே...!'' என்று அம்மா செல்லமாக மீனாவின் முதுகில் தட்டிக் கொடுத்துவிட்டு, வீட்டு வேலைகளைக் கவனிக்கப் போய் விட்டாள்.

மீனா இப்பொழுது தெளிந்த மனத்துடன் வெளியே பார்க்க, வாசலறையில் அழகுக்காக வைக்கப்பட்டிருந்த பல வண்ணக் காகிதப் பூக்கள், அவளைப் பார்த்து காற்றில் அழகாக அசைந்து கண் சிமிட்டின.




பையா, தோப்புக்கரணம் போதும். பசிக்கிறது... சீக்கிரம் போய் பால் கொண்டு வா...!

சிறுவன் : ?...!...?...!

- பா. வடிவேல்

சாட் பீட் கீத்!



சிக்க வைத்த..!

மூப்பது வயதுக்குள் முந்நூறு படங்களுக்குமேல் நடித்து நடிப்பின் இமயம் என்று மக்களால் புகழப்பட்ட பிரபல நடிகர் ரங்கேஷ் குமார், தன்னுடைய தோட்ட பங்களாவிற்கு சாட் பீட் கீத்தைக் கார் அனுப்பி வரவழைத்திருந்தார்.

உப்பு முந்திரியும் காபியும் சாப்பிட்ட பிறகு ரங்கேஷ்குமார் நேரடியாக விஷயத்திற்கு வந்தார்.

"நான் நடித்த பல படங்கள் நூறு நாள் ஓடியிருப்பதும், மத்திய மாநில அரசினரின் பரிசுகளைப் பல முறை பெற்றிருப்பதும் உங்களுக்குத் தெரிந்திருக்கும். என் பெயரில் ரசிகர் மன்றங்களும் இருக்கின்றன. என்னுடைய படத் தயாரிப்பாளர்களும், ரசிகர்களும் ஆண்டு முழுவதும் எனக்கு ஷீல்டுகளையும், கோப்பைகளையும், பரிசுகளையும் வழங்கிக் கொண்டே இருக்கிறார்கள். இவர்கள் அளித்த பரிசுகள் எல்லாம் என் வீட்டின் வரவேற்பு அறையில் உள்ள ஐந்து பீரோக்களை அழகு செய்கின்றன. இவைகளின் சாவி என்னிடம் தான் இருக்கிறது. சிறிது நாட்களாக இவைகளை அடிக்கடி யாரோ திறக்கிறார்கள்" என்றார் ரங்கேஷ்குமார்.

"பீரோக்களின் சாவியை எப்பொழுது மேவா நீங்கள் வைத்துக் கொண்டிருக்கிறீர்கள்?"

"ஆமாம் சாட். இதோ இப்பவே வேண்டுமானாலும் பார்" - சொல்லிக் கொண்டே ரங்கேஷ் குமார் கைப்பெட்டியைத் திறந்து கொத்துச் சாவியை எடுத்துக் காட்டினார்.

"இன்றைக்குத் தமிழ்நாட்டில் ரசிகப் பெருமக்களின் அன்புக் காணிக்கையாக அதிக எண்ணிக்கையிலான பரிசுப் பொருள்களைப் பெற்றுள்ளவன் நான்தான்" என்று பெருமையாகக் கூறிக் கொண்டார் ரங்கேஷ்குமார்.

"ஆமாம் சார், பீரோக்களை யாரோ திறக்கிறார்கள் என்பதை எப்படிக் கண்டுபிடித்தீர்கள்? அது உறுதிதானா?" - கீதா கேட்டாள்.

"ஒவ்வொரு முறை நான் வெளியூர் போகும் போதும், படப்பிடிப்பு, 100 ஆவது நாள் விழா தவிர, ரசிகப் பெருமக்களின் வேண்டுகோளைத் தட்ட முடியாமல் ஏதாவது பொது நிகழ்ச்சிகளிலும் பங்கு கொள்வேன். நான் திறமையான பேச்சாளனும் கூட. வெளியூருக்குப் போனால் நினைவுப் பரிசு இல்லாமல் நான் திரும்பி வந்ததே கிடையாது."

சாட் பீட் கீத், ரங்கேஷ்குமார் மேலே கூறப் போவதை ஆவலுடன் எதிர்பார்த்தனர்.

"அந்தப் பரிசுகளை வைக்க, வந்ததும் முதல் காரியமாக பீரோவைத்தான் திறப்பேன். அப்படித் திறக்கும்போது, சாவி கொஞ்சம் மக்கர் பண்ணும். ஒவ்வொரு முறையும் இப்படித் தான். அதிலிருந்துதான் நான் ஊரில் இல்லாத போது, யாரோ திறக்கிறார்கள் என்பதைக் கண்டுபிடித்தேன்."

சின்னபாப்பு

"பரிசுப் பொருள்கள் ஏதாவது காணாமல் போயிருக்கா?" - கேட்டது சாதிக்.

"அதுதான் அதிசயமா இருக்கு. ஒரு சின்னப் பொருள் கூடக் காணாமல் போகவில்லை. எல்லாம், வைத்தது வைத்த இடத்தில் அப்படி அப்படியே இருக்கிறது. வெளியூர் போகும்போது மட்டும்தான் இப்படி ஆகிறது. யார் மேலும் சந்தேகப் பட இடமே இல்லை. சாவி என்னிடமே இருக்கு. என் உதவியாளர் சுபாஷ், என் சொந்த மைத்துனனேதான். வீட்டு நிருவாகம் எல்லாம் கூட அவன்தான். வீட்டில், வரவேற்பு அறையை ஒட்டித்தான் அலுவலக அறை. சதா சர்வகாலமும் சுபாஷ் அங்கேதான் இருப்பான். அவனை மீறி யாரும் உள்ளே வர

"என்னது! உனக்கும் நாவல் பிடிக்கும்; உங்க அப்பாவுக்கும் நாவல் பிடிக்குமா?"

"எஸ்! எனக்கு நாவல் படிக்கப் பிடிக்கும். அப்பாவுக்கு நாவல் பழம் கடிக்கப் பிடிக்கும்..."



முடியாது."

"ஏன், சுபாஷே ஏதாவது ஏமாற்று வேலை செய்யலாம் இல்லையா?" என்றான் பீட்டர்.

"செய்ய அவசியமே இல்லை. ஏனென்றால் என்னுடைய தொழில், வருமானம், செலவு எல்லாப் பொறுப்புகளையும் அவனேதான் கவனிக்கிறான். அவன் காட்டிய இடத்தில் நான் கையெழுத்திடுவேன். அத்தனை நம்பிக்கை. அவன்தான் ஏதோ பண்ணுகிறான் என்றே வைத்துக் கொள்வோம். அப்படி எதுவுமே பண்ணின மாதிரியும் இல்லையே! எந்தப் பொருளும் மறையவில்லையே! உதகை படப்பிடிப்பில் ஒரு ரசிகர், கழுத்து 'டை'யில் அணியும் ஒரு தங்க 'பின்'னைத் தந்தார். அந்தச் சின்னப் பொருள் கூட காணாமல் போகவில்லையே!"

"நாங்க முதலில் உங்கள் வீட்டு வரவேற்பு அறையையும், பரிசுப் பொருள்கள் அடங்கிய பீரோக்களையும் பார்க்க வேண்டுமே?"

"சுபாஷ் நான்கு நாட்கள் ஊரில் இருக்க மாட்டான். பழனியில் அவனுடைய மாமனாருக்கு மணிவிழா. அதனால் இன்று இரவு கிளம்புகிறான்."

"மிகவும் நல்லதாப் போச்சு. நாங்கள் நாளை காலையே வந்துவிடுகிறோம்."

"சாட் பீட் கீத்! இது மிகவும் கவனமாகவும் இரகசியமாகவும் அணுகப்பட வேண்டிய பிரச்னை. என் சொந்த மைத்துனனையே நான் சந்தேகப்படுகிறேன் என்பது என் மனைவிக்குத் தெரிந்தால், வீட்டில் எனக்கு மன அமைதி போய்விடும். நடிப்பில் கவனத்தைச் செலுத்துவது கடினமாகிவிடும்."

"சார், உங்களுக்கு அந்தக் கவலையே வேண்டாம்" என்று விடைபெற்றனர் சாட் பீட் கீத்.

அடுத்த நாள் ரங்கிஷ்குமாரின் வீட்டு வரவேற்பு அறை. சாட் பீட் கீத் பரிசுப் பொருள்கள் அழகாக; பார்வையாக வைக்கப்பட்டிருந்த பீரோக்களைப் பார்த்தனர். ரங்கிஷ்குமாரும் கூடவே இருந்தார். முன்பே விவாதித்து எடுத்து முடித்த முடிவின்படி, சாட் பீட் கீத் செயலில் இறங்கினர்.

பீரோக்களின் ஒவ்வொரு தட்டும் கொலுப் படி போல் அமைக்கப்பட்டு அழகான பூப் போட்ட 'மார்பிள்' காகிதம் பரப்பப்பட்டு, அவைகளில் பரிசுப் பொருள்கள் கலை அழகுடன் வைக்கப்பட்டு இருந்தன. அந்த அமைப்பைச் சிறிதும் கலைக்காமல், அப்படி அப்படியே, அவைகளின் அடிப்பாகத்தை மார்பிள் காகிதத்தின் மேல் மெல்லிய பென்சிலால் வரைந்து, அலுங்காமல் அவைகளை அப்படி அப்படியே இருக்கும்படி விட்டனர். வைக்கப்பட்டிருந்த வரிசைப்படி பரிசுப் பொருள்களின் விவரத்தை எழுதிக் கொண்டனர். புகைப்படமும் எடுத்துக் கொண்டனர்.

ஒரு வாரம் ஓடியது. சுபாஷ் திரும்பிவிட்டதாகத் தகவல் வந்தது. அன்று ரங்கிஷ்குமார் படப்பிடிப்புக்காக வெளியூர் போனார். நான்கு நாட்களுக்குப் பிறகு சாட் பீட் கீத்துக்குத்

தகவல் வந்தது.

"சுபாஷ், இன்று கோவை போகிறார். நாளைக்கு அவரது மைத்துனருக்குத் திருமண நிச்சயதார்த்தம். திரும்பிவர இரண்டு நாட்களாகும்," என்று போனில் தகவல் கூறினார் ரங்கேஷ்குமார்.

"இன்று இரவே கிளம்பி வருகிறோம். பீரோக்கள் எதையும் நீங்கள் திறக்கவில் என்று கூறியிருக்கிறீர்களே...? அதனால் அப்படியே வெளியில் வைத்திருக்கிறேன்" என்று சிரித்தார் ரங்கேஷ்குமார்.

மூவரும் அன்று மாலையே ரங்கேஷ்குமார் வீட்டுக்கு விரைந்தனர். மூவரையும் வரவேற்ற ரங்கேஷ்குமார், "இதோ மூன்று பீரோக்களின் சாவி" என்று கொத்து சாவியை ஒப்படைத்தார்.



லையே?" என்று கேட்டான் சாதிக்.

"தொடக் கூட இல்லை. சேலத்தில் படப்பிடிப்பு முடிந்ததும் அங்கே ரசிகர் மன்றக் கிளையைத் திறந்தேன். அவர்கள் கூட ஒரு சின்ன நடராஜர் சிலையை நினைவுப் பரிசாகத் தந்திருக்கிறார்கள். சாதாரணமாக இருந்தால், நான் ஊரில் இருந்து திரும்பியதும் பீரோவைத் திறந்து வைத்துவிடுவேன். இப்போதான் நீங்கள் அதற்கு என்னவோ வட்ட மந்திரம் போட்டு, உங்கள் அனுமதி இல்லாமல் திறக்கக் கூடாது

பீட்டர்தான் மூன்று பீரோக்களையும் மிகவும் கவனமாகத் திறந்தான். சாவியைப் போட்டுத் திருப்பியதுமே, கொஞ்சம் சிக்கி முக்கித் திண்டாடி, பிறகே திறந்து கொண்டன! பழைய மென்மையான 'திருகல்' இல்லை! மூன்று பீரோக்களிலும் அதே நிலைதான்.

"மூன்று பீரோக்களையும் யாரோ மாற்று சாவி போட்டுத்தான் திறந்திருக்கிறார்கள். உங்கள் சந்தேகம் உறுதியானதே" என்றான் பீட்டர்.

சாட் பீட் கித் செயலில் இறங்கினர்.

பீரோக்களின் கதவுகளை மல்லாக்க, பரக்கத் திறந்து கொண்டு உயரமான நாற்காலிகளில் ஏறி, அசைக்காமல் ஒவ்வொரு தட்டில் இருந்த பொருள்களையும் கவனிக்க ஆரம்பித்தனர்.

முதல் பீரோவில் இரண்டாவது தட்டில் இருந்த படகு வடிவக் கேடயத்தின் நீள் சதுர அடிப்பாகம் நகர்ந்து கிடந்தது.

இரண்டாவது பீரோவில் மூன்றாவது தட்டில் இருந்த மிருதங்க வடிவிலான கேடயத்தின் சதுர அடிப்பாகம் நகர்ந்து இருந்தது.

மூன்றாவது பீரோவில் முதல் தட்டில் இருந்த நின்றகோலப் பிள்ளையாரின் வட்ட வடிவ அடிப்பாகமும் நகர்ந்து கிடந்தது.

"சார், எங்கள் கண்டுபிடிப்பின்படி, மூன்று பீரோக்களையும் மாற்று சாவி போட்டுத் திறந்தவர்கள் படகு, மிருதங்க, பிள்ளையார் கேடயங்களை எதற்காகவோ எடுத்திருக்கிறார்கள். ஆனால் மறுபடியும் கொண்டுவந்து வைத்திருக்கிறார்கள்" என்றான் சாதிக்.

"வந்தவனுக்குத் திருடும் நோக்கம் இருந்தால், அவைகளை ஏன் திரும்ப வைத்துவிட்டுப் போக வேண்டும்?" என்று கேட்டார் ரங்கேஷ்குமார்.

"இதைத்தான் நாம் கண்டுபிடிக்க வேண்டும்" என்று கூறிய கீதா, "சார், இந்த மூன்று சிலைகளிலும் ஏதாவது ஒற்றுமை இருக்கிறதா? இவைகளில் என்ன விசேஷம்?" என்று கேட்டாள்.

தன் பழைய டைரிகளை எடுத்துக் கொண்டு வந்து புரட்டிப் பார்த்த ரங்கேஷ்குமார், "படகு வடிவ கேடயம் 'பாய்மரம்' திரைப்பட நூறாவது நாள் விழாவில், மதுரையில் தரப்பட்டது. நின்றகோலப் பிள்ளையார், கோவையில் ரசிகர் மன்ற 5-வது ஆண்டுவிழாவில் தரப்பட்டது. மிருதங்க வடிவ கேடயம், டெல்லியில் தாள வாத்தியக் கலைஞர்களின் மாநாட்டில் தரப்பட்டது. இவை மூன்றுமே சுத்தமான வெள்ளியால் செய்து தங்க முலாம் பூசப்பட்ட பரிசுகள்" என்றார்.

சாட் பீட் கீத் மூவரும் ஒருவரை ஒருவர் பார்த்துச் சிரித்துக் கொண்டனர்.

"நீங்கள் சிரித்துக் கொள்வதைப் பார்த்தால், இதன் மர்மம் ஏற்கெனவே உங்களுக்கு விளங்கி விட்டதுபோல் இருக்கே! எனக்கும் சொல்லுங்கள்?" என்று கேட்டார் ரங்கேஷ்குமார்.

"எங்கள் கணக்கு சரியாக இருந்தால், சுத்த வெள்ளியில் ஆனவை என்று நீங்கள் பெருமைப்படும் இந்த மூன்றும் இப்பொழுது மாற்றப்பட்டு விட்டவை!" என்றான் பீட்டர்.

"ஆமாம் சார். வெள்ளிக்குப் பதில், மலிவு விலையில் கிடைக்கும் உலோகத்தால் அதே போல் செய்யப்பட்டு, தங்க முலாம் பூசப்பட்டவை இப்பொழுது நீங்கள் காணும் இந்த மூன்றும்," என்றான் சாதிக்.

"அதேபோல், உங்களுக்கு வந்த விலைமிக்க தங்க, வெள்ளிப் பரிசுப் பொருட்கள் இப்பொழுது தங்கமாகவோ வெள்ளியாகவோ இல்லை என்றும், இங்குள்ளவை, ஒரிஜினல் போலவே தயாரான போலிகள்தான் என்பதும் எங்கள் அசைக்க முடியாத ஊகம்" என்றாள் கீதா.

"இதை இத்தனை புத்திசாலித்தனமாகச் செய்துள்ள பெருமைக்கு உரியவர் உங்கள் மைத்துனரான சுபாஷாகத்தான் இருக்க வேண்டும் என்பதும் எங்கள் ஊகம்" என்றான் சாதிக்.

நான்கு நாட்களுக்குப் பிறகு பத்திரிகைகளில் வெளிவந்து மக்களால் பரபரப்பாகப் பேசப்பட்ட செய்திகள் சாட் பீட் கீத்தின் ஊகம் சரியென்பதை உறுதி செய்தன. தங்களுக்குப் பரிசாக அளிக்க ரங்கேஷ்குமார் முன் வந்த பெருந்தொகையை சாட் பீட் கீத் அவர் பெயராலேயே பள்ளிக் கட்டட நிதிக்கு வழங்கச் சொல்லி விட்டனர்.



"பசியைப் போக்கியதற்காகவா உங்க அப்பா உன்னை உதைச்சு அடிச்சுட்டார்?"

"பரீட்சைக்கான நோட்சுகளை யெல்லாம் கழுதையின் பசிக்குக் கொடுத்தது தப்பாம்..."



''எதிர் வீட்டு ராமுவுக்கு கிரிக்கெட்டைப் பற்றி எதுவுமே தெரியலையாம்!''
''டீமுக்கு 8 பேர் விளையாடுவாங்கன்னு கூடவா தெரியாது...?''
— சீர்காழி வி.ரேவதி
''என் கிளாஸ்ல நான்தான் பர்ஸ்ட் ராங்க்.''
''நானும் பர்ஸ்ட் ராங்க்தான். ஆனா கடைசியில இருந்து பாக்கணும்.''
— பா. ஜெயக்குமார்
''பாஸாறதுக்கு, பிள்ளையாரத்தான்டா, நம்பியிருக்கேன்... நீ...?''
''பக்கத்துல எழுதுற பையனைத் தான்டா நம்பியிருக்கேன்...''
— தேவந்தி துரைராஜ்
''நான் தூங்கப்போறப்போ ஆவி வந்துச்சுடா...''
''ஐயையோ! என்ன ஆவிடா?
''கொட்டாவி''தான்.
— நெற்குப்பை கி. மனோகரன்
''பட்டணத்துக்குப் போன நீ, மறுபடியும் கிராமத்துக்கே வந்துட்டியே, ஏன்?''
''பட்டணத்திலே நான் ஏறி நின்னு கூவ கூரை இல்லையே!''
— கு. அருணாசலம்

பற்பசை வாய்நாற்றத்தைப் போக்குமா?



● த. குணசங்கரன், நன்செய்இடையார்.
? இப்போது வரும் பற்பசைகள் வாய் நாற்றத்தைப் போக்குகிறது என்கிறார்களே, இது உண்மையா டாக்டர்?
! உண்மைதான், தம்பி! சில பற்பசைகளில் வாய்நாற்றத்தைப் போக்கக்கூடிய மருந்து கலந்துள்ளது. அதை உபயோகித்தால் வாய் நாற்றம் குறையும். என்றாலும், வாய்நாற்றத்தை ஏற்படுத்தக்கூடிய அடிப்படைக் காரணத்தை மருத்துவர் உதவியுடன் தெரிந்து கொண்டு, அதைத் தவிர்த்தால்தான் வாய்நாற்றம் முழுமையாக மறையும்.

● ஜெ. துர்க்காலட்சுமி, வேதாரண்யம்.
? இடது பக்கத்தில் தலையைச் சாய்த்தால் சில நேரங்களில் மயக்கம் வருகிறது. இதற்கு என்ன காரணம் என்பதைத் தெரியப்படுத்துங்கள், டாக்டர்!
! காதின் உட்பகுதியில் ஏற்படும் கோளாறுகள்தான் இதற்குக் காரணம். காதில் அழுக்கு அடைத்திருப்பது, காதில் சீழ் பிடிப்பது, 'லாபிரிந்த்' (Labyrinth) என்ற பகுதி பழுது பட்டிருப்பது, காது நரம்பு அல்லது காதில் உள்ள மூன்று சிற்றெலும்புகள் பாதிக்கப்பட்டிருப்பது போன்றவற்றால் தலையைச் சாய்க்கும் போது கிறுகிறுப்பு வந்து மயக்கம் ஏற்படும். காது-மூக்கு-தொண்டை மருத்துவரை அணுகி சிகிச்சை பெறுங்கள். குணமாகும்.



● கி. பேட்ரிக் மேரி ஜெயசீலி, பாண்டிச்சேரி.
? குடிப்பழக்கத்தினால் ஏற்படும் தீமைகள் என்ன?
! ஒன்றா, இரண்டா? நூற்றுக்கும் அதிகமான தீமைகளைக் கூறலாம். இருந்தபோதிலும் முக்கியமான சில தீமைகளை மட்டும் இங்கே குறிப்பிடுகிறேன். குடிப்பழக்கம் உள்ளவர்களுக்கு இரைப்பையில் புண் ஏற்படும். கணையம் பழுதுபடும். இவற்றால் இவர்களுக்கு வாழ்நாள் முழுவதும் வயிற்றுவலி தொல்லை தரும். வருடக்கணக்கில் மது அருந்தினால் கல்லீரல் கெட்டுப் போகும். கரணை நோய் (CIRRHOSIS) வந்து விடும். இது உயிருக்கே ஆபத்து தரக்கூடிய கொடிய நோய். மதுவில் உள்ள நச்சுப் பொருள்கள் மூளை நரம்புக்களைச் சிதைத்து விடும். விளைவு? நரம்புகள் வலுவிழந்து நரம்புத் தளர்ச்சி, விரல் நடுக்கம், நடையில் தள்ளாட்டம், பேச்சு உளறுதல் போன்ற கோளாறுகள் தலை காட்டும்.

எப்போதுமே குடிபோதையில் உள்ளவருக்கு மனநலம் வெகுவாகக் கெட்டுப் போகும். சிந்தனைக் குழப்பம், செயல் குழப்பம், தூக்கமின்மை, பயம், பதற்றம், மாய ஒலி, மாயத் தோற்றம் போன்ற உளவியல் பிரச்சனைகள் ஒன்றன்பின் ஒன்றாக ஒட்டிக் கொள்ளும். இவர்களால் எந்த வேலையையும் செய்ய இயலாது; வீட்டிற்கும் உதவ முடியாது; பிள்ளைகளையும் கவனிக்க முடியாது.

குடிப்பழக்கம் உள்ளவர்களுக்கு ரத்தக் கொதிப்பு, மாரடைப்பு, நீரிழிவு போன்ற நோய்கள் வருவது சகஜம். இவர்கள் உணவை மறந்து, உறவுகளை மறந்து எந்த


டாக்டர் கு. கணேசன்

நேரமும் குடிப்பதே வேலை என்று இருப்பதால், சத்துள்ள உணவுகள் கிடைப்பது கடினம். ஆகையால் இவர்களுக்கு வைட்டமின் மற்றும் தாதுக்கள் பற்றாக்குறை ஏற்பட்டு 'கோர்சகால் மன்நோய்' (KORSAKOFF PSYCHOSIS) வந்து விடும். இது ஒரு திடீர் மனக்குழப்ப நோய். இதில் மனநோய் மட்டுமின்றி, ஆரோக்கியக் குறைவும் ஏற்படுவதுண்டு. முக்கியமாக கைகால்கள் செயலற்றுப் போகும். கண் பார்வை குறைந்து விடும். தற்கொலை எண்ணம் தலைதூக்கும். ஆக மொத்தத்தில், குடிப்பழக்கம் மனித உயிரைச் சிறுகச் சிறுகக் குடித்து விடும் என்பதை அனைவரும் உணர வேண்டும்.

● *எஸ். பி. ராஜா, கோபாலசமுத்திரம்.*

? நான் சீப்பைப் பயன்படுத்தித் தலைசீவும் போதெல்லாம் தலைமுடி உதிர்கிறது. இதற்கு என்ன செய்வது?

! தினமும் 75 லிருந்து 150 தலைமுடிகள் உதிர்வது இயற்கை. இதற்கு மேல் தலைமுடி உதிர்ந்தால் காரணம் என்ன என்பதைத் தெரிந்து கொண்டு அதற்கேற்ப சிகிச்சை பெறுவது நல்லது. தலைமுடி உதிர்வதைத் தவிர்க்கப் பொதுவான ஆலோசனைகள் இவை. 1. மென்மையான சீப்பைப் பயன்படுத்துங்கள், 2. ஷாம்பூ, சோப்பு எதுவும் தலையில் தேய்த்துக் குளிக்க வேண்டாம்; சீயக்காய் போதும். 3. வைட்டமின் ஏ, வைட்டமின் சி, இரும்புச் சத்து, புரதச் சத்து நிறைந்த உணவுகளையோ அல்லது இந்தச் சத்துகள் அடங்கிய மாத்திரைகளையோ மூன்று மாதங்களுக்குச் சாப்பிடுங்கள். 4. தலையில் பொடுகு, பேன், சுரப்பான், காளான் தொற்று வராமல் பார்த்துக் கொள்ளுங்கள். 5. சொத்தைப் பல் இருந்தால் அகற்றி விடுங்கள்.



● *எல்.எஸ். கவிதா, எஸ். பாலப்பட்டி.*

? கால்சியம் குறைந்தால் என்ன கோளாறு வரும்? அதை எப்படிப் போக்கலாம்?

! எலும்புகளின் வளர்ச்சி குறையும்; அடர்த்தி குறையும்; வலிமை இழக்கும். பற்கள் வலுவிழக்கும்; பற்களின் ஆரோக்கியம் கெடும். தாய்ப்பால் சுரப்பது குறையும். 'ஆஸ்டியோபோரோசிஸ்' (OSTEOPOROSIS) என்ற எலும்புச் சிதைவு நோய் 50 வயதிற்கு மேற்பட்ட பெண்களைத் தாக்கும். இந்த நோய் உள்ளவர்கள் லேசாகக் கீழே விழுந்தால் கூட எலும்புகள் முறிந்து விடும்.

முதுகுவலி, முழங்கால் வலி, மூட்டு வலி என்று தொல்லைகள் தொடரும். வலுவிழந்த எலும்புகள் வளையத் தொடங்கும். இதனால் சீக்கிரத்தில் கூன் விழுந்து விடும். ரத்தக் கொதிப்பு நோய் வரும். கை விரல்கள் உள்ளங்கைப் பக்கமாக இழுத்துக் கொள்கின்ற 'டெட்டனி' எனும் நோய் ஏற்படும்.

இப்படி கால்சியம் பற்றாக்குறைவால் நோய்கள் வரும் போது மருத்துவர் யோசனைப்படி 'கால்சியம் குளுக்கனேட்' மற்றும் வைட்டமின் டி சேர்ந்த மாத்திரைகளைச் சாப்பிட்டால் சரியாகி விடும். கால்சியம் ஊசிகளையும் பயன்படுத்தலாம்.

பால், மோர், தயிர், முட்டை, மீன், இறைச்சி, எலும்பு சூப், கேழ்வரகு, வெங்காயம், வெள்ளைப் பூண்டு, எள், எலுமிச்சை, பசலைக் கீரை, தண்டங்கீரை, காலிபிளவர், கருணைக் கிழங்கு, மரவள்ளிக் கிழங்கு, முள்ளங்கி, அவரை, துவரை, பட்டாணி போன்ற உணவுகள் கால்சியம் சத்து மிகுந்தவை. நாளுக்கு ஒன்றாக இவற்றையும் உணவில் சேர்த்துக் கொள்ளலாம். பலன் கிடைக்கும்.

பிருந்தாவனக் கவியரங்கம்





தவளைக் கல்யாணம்!

தவளையாரே தவளையாரே எங்கே
போறீங்க?
'தங்கச்சிக்கு கல்யாணம் தாவிப் போறேங்க!'
தவளையாரே தவளையாரே பிள்ளை
யாருங்க?
தண்ணியில்லா பாழுங் கிணறு தேரை
தானுங்க!
தவளையாரே தவளையாரே கூட்டம்
எங்கேங்க?
'தத்துபூச்சி எட்டுக்காலு மொட்டைக்
குளமுங்க!
தவளையாரே தவளையாரே கொட்டு
யாருங்க?
தட்டிக் கேட்க ஆளில்லாத மந்தியாருங்க!
தவளையாரே தவளையாரே சீரு என்னங்க?
ஆறு, குளம் அத்தனையும் நமது தானுங்க.
தவளையாரே, தவளையாரே விருந்து
என்னங்க?
குட்டி மீனு தட்டு நிறைய புகுந்து
தின்னுங்க!

- க. விஜயலட்சுமி, திருச்சி - 14.





நண்டக்கா!


பொந்துக் குள்ளே வாழ்கின்ற நண்டக்கா
- நான்
பார்க்க வந்தால் தலை இழுப்பது ஏனக்கா?
பக்கவாட்டில் நகர்ந்து செல்லும் நண்டக்கா
- நான்
பார்த்ததுமே மறைந்து கொள்வது ஏனக்கா?
பொந்துப் பக்கம் சத்தம் வந்தால்
நண்டக்கா - நீ
பதுங்கிப் பதுங்கி பார்ப்பதுவும் ஏனக்கா?
தந்திரத்தால் உனைப் பிடிக்க நண்டக்கா
- கெட்ட
சதிகாரர் வருகின்றார் பதுங்கக்கா!

- முருகப்பிரியன், காரைக்கால்.

பொட்டு

குட்டிக் குட்டி பொட்டுதான்
கமல வடிவப் பொட்டுதான்
வட்ட வட்டப் பொட்டுதான்.
வண்ண அழகுப் பொட்டுதான்
நெற்றிக் கழகு பொட்டுதான்
நனைந்து கரையாப் பொட்டுதான்
பற்றிக் கொண்டு நெற்றிக்குப்
பொலிவு தரும் பொட்டுதான்!

- எஸ். விஜயலட்சுமி, புதுவை - 11.



பிருந்தாவனக் கவியரங்கம்



வாழ்ந்திடு!


அம்மா பாதம் வணங்கிடு
ஆசி நிறையப் பெற்றிடு.
அப்பா சொல்லைக் கேட்டிடு
அறிவுரை மனதில் ஏற்றிடு.
ஆசான் கற்பதை கவனித்திடு
அதுவே நல்வழி நடந்திடு.
தீயோர் நட்பை விட்டிடு
சான்றோர் போற்ற வாழ்ந்திடு!

- பா. வடிவேல், தேனாங்குறிச்சி.

புகைப்படம்

யானை மாமா யானை மாமா
அசையா திருக்கப் பாருங்கள்!
கொக்குமாமி கொக்குமாமி
காணாக் காலை நீட்டுங்கள்!
அணில் அண்ணா அணில் அண்ணா
அமர்ந்து கொஞ்சம் பாருங்கள்!
பாம்பு அத்தை பாம்பு அத்தை
படத்துக்கு சட்டம் போடுங்கள்!
குரங்கு அண்ணா குரங்கு அண்ணா
காதுக்குக் கம்மல் போடுங்கள்
எல்லோரும் அசையா தருங்கள்
எடுப்பேன் அழகாய் புகைப்படத்தை!

- வி. அரவிந்தன், கோவை - 7.




குதிரை

குதிரை நல்ல குதிரை
குதித்து ஓடும் குதிரை.
வீரம் மிக்க குதிரை
விரைந்து ஓடும் குதிரை
போரில் பங்கு கொள்ளும்
பொலிவு மிக்க குதிரை
தாளைத் தோடு ஓடும்
தாவிப் பாயும் குதிரை!

- ஆர். பாபு, பட்டீஸ்வரம்.





நீங்களாக இருந்தால் என்ன செய்வீர்கள்? – போட்டி

கொடுமையான வெயில் நேரம். பாலாஜி டி.வி.யில் கிரிக்கெட் மேட்ச் பார்த்துக் கொண்டிருந்தான். நல்ல விறுவிறுப்பான உச்சகட்டம்.

அழைப்பு மணிச் சத்தம் கேட்டது. பாலாஜி வேண்டாவெறுப்பாக எழுந்து வந்து கதவைத் திறந்தான்.

ஒரு வயதான கிழவர் நின்றிருந்தார். வெயிலில் வாடி வதங்கிய களைப்பும் படியேறி வந்த சோர்வும் முகத்தில் தெரிந்தது. ஒரு கையில் பிதுங்கித் தொடங்கிய கனமான பை. மற்றொரு கையில் ஒரு தூக்குப் பாத்திரம். அதுவும் பெரிதாகத் தெரிந்தது. கனமாகத்தான் இருக்கும். வலது கை இடுக்கில் மடக்கப்பட்ட ஒரு குடை.

பாலாஜியைப் பார்த்ததும், ''தம்பி, டெய்லர் தம்புசாமி இருக்காரா? நான் அவங்க மாமா'' என்று கேட்டார் கிழவர்.

தம்புசாமி, அந்த வீட்டில் முந்தி குடியிருந்த தையற்காரர். அவர் காலி பண்ணிக் கொண்டு போய் ஒருமாதமாகிறது. அதற்குப் பிறகுதான் பாலாஜியின் குடும்பம் அந்த வீட்டுக்குக் குடி வந்திருக்கிறது டெய்லர் தம்புசாமிகூட அதே காம்பவுண்டுக்குள் இன்னொரு மாடிக்குத்தான் குடியேறியிருக்கிறார். தம்பு சாமியின் மகன் ரங்கிஷ், பாலாஜியின் வகுப்புதான். இருவரும் நண்பர்கள் தான். காலையில் கூட டெலிபோனில் அழைத்துப் பேசினான்.

பாலாஜியின் நிலையில் நீங்கள் இருப்பதாக எண்ணிக் கொள்ளுங்கள். ''டெய்லர் தம்புசாமி இருக்கிறாரா?'' என்று பெரியவர் கேட்ட பிறகு நீங்கள் முதலில் என்ன செய்வீர்கள் என்பதை ஒரு தபால் கார்டில் (தபால் கார்டில் மட்டுமே) எழுதி, உங்கள் முகவரியையும் சரியாகக் குறிப்பிட்டு, முகவரிக் கூப்பனையும் வெட்டி ஒட்டி அனுப்புங்கள்.

முடிவு தேதி : 31.5.96.

வெளிநாட்டு வாசகர்கள் தங்கள் இந்திய தொடர்பு முகவரியைத் தரவேண்டும். நாங்கள் எதிர்பார்க்கும் பொருத்தமான விடையைத் தரும் பதினைந்து பேருக்குப் பரிக உண்டு. தபாலில் ஏற்படும் தாமதங்களுக்கு கோகுலம் பொறுப்பாகாது. ஆசிரியர் தீர்ப்பே முடிவானது.

கோகுலம்
47, ஜவஹர்லால் சாலை,
ஈக்காடுதாங்கல், சென்னை - 600 097.

அரிச்சுவடியை அறியுமுன்னதாகவே திருஞான சம்பந்தர் தேவாரப் பதிகங்களைப் பாடியதையும், சிறுமி ஆண்டாள் திருப்பாவை பாசுரங்களைப் பாடியதையும் கேட்டிருக்கிறோம். சிறுவரானாலும் கூட சாதனை படைக்க முடியும்; உலகை மலைக்க வைக்க இயலும் என்பதை இவை காட்டுகின்றன. இவர்களின் தொடர்ச்சியாக நம் கண்முன்னே காணும் மழலை மேதைகள் சிலரை ஏற்கனவே கோகுலம் உங்களுக்கு அறிமுகப்படுத்தியுள்ளது. அந்த வரிசையில் இப்பொழுது இடம் பிடிப்பவள் ஒன்பதே வயதான சிறுமி ஆதிரை.



அயரவைக்கும் ஆதிரை!

என்னது! அறிமுகமான இலக்கியப் பெயராக இருக்கிறதே என்கிறீர்களா? ஆமாம்! மணிமேகலைக்கு அமுதசுரபி கிடைத்ததும், அதில் முதலில் அன்னம் இடும் இலக்கிய பாத்திரம்தான் ஆதிரை. சிறுமி ஆதிரையின் தந்தை தமிழுலகம் நன்கு அறிந்த பேராசிரியர் மா. கண்ணப்பன் அவர்கள். எனவே, ஆதிரைக்கு இப்பெயர் சூட்டப்பட்டதில் பெரிய அதிசயம் இல்லை.

சிறுமி ஆதிரை, எந்தத் துறையில் எப்படி மழலை மேதை? கொடுக்கும் தகவல்களைக் கம்ப்யூட்டர் ஏற்றுக் கொண்டு, தேவைப்படும்போது கேட்டால் துளியும் பிழையின்றித் தருகிறதல்லவா? இதே போல், தான் அறியும் தகவல்களை, எப்பொழுது கேட்டாலும் துளியும் தவறின்றித் திருப்பிக் கூறும் ஒப்பற்ற நினைவாற்றல் சக்தி, ஆதிரையிடம் இருக்கிறது!

சாதாரண மனிதனின் வீட்டில் ஆதிரை பிறந்திருந்தால் என்ன ஆகியிருக்கும்? தன்னைச் சுற்றி எளிதில் கிடைக்கும் தேவையற்ற; பயனில்லாத தகவல்களை மூளையில் பதிய வைத்துக் கொண்டு மற்றவர்கள் வியக்கும் அதிசயச் சிறுமி ஆகியிருப்பாள். இப்பொழுதும்கூட ஆதிரை அதிசயச் சிறுமிதான். ஆனால், இப்பொழுது அவள் தன்

நினைவில் பதித்துக் கொண்டிருப்பவை பயனற்ற தகவல்கள் அல்ல! அத்தனையும் கலை, இலக்கிய, பண்பாட்டுத் தகவல்கள்!

இந்தத் திறமை ஆதிரைக்கு எப்படிக் கிடைத்தது? இதோ ஆதிரையே இது பற்றிக் கூறுகிறாள்.

''டி.வி.ல இராமாயணம் வந்தது இல்லையா? நான் அதை ஆசையா பார்ப்பேன். அதில வரும் ஒவ்வொரு பாத்திரத்தைப் பற்றியும் நான் அப்பாவிடம் கேட்பேன். அவரும் பதில் சொல்லுவார். அது அப்படியே மனசில் பதியும். இராமாயணத்தைப் பற்றி தப்பும் தவறுமா யாராவது சொன்னால், உடனே நான் அதைத் திருத்துவேன். நண்பர்கள், அக்கம் பக்கத்தில் உள்ளோர் உறவினர் ஆகியோர் இதைப் பெரிதும் அதிசயித்துப் பாராட்டினார்கள். என்னால் எதையும் நினைவில் வைத்துக் கொள்ள முடியும் என்ற அதிசயத்தை நானும் உணர்ந்து கொண்டேன். அப்பாவும் அறிந்து கொண்டார். எங்கே நான் கண்டதை எல்லாம் கேட்டு நினைவில் வைத்துக் கொள்ளப் போறேனோன்னு அப்பா பயந்திருக்க வேண்டும். அதனால், தனக்கு ஈடுபாடுள்ள கலை, இலக்கியம், பண்பாடு போன்ற துறைகளில் மணிமணியான தகவல்களை தேடித் தேடித் திரட்டி எனக்குத் தர ஆரம்பித்தார். நானும் அவைகளை நினைவில் வைத்துக் கொண்டேன். அவைகளில் கேட்கப்படும் கேள்விகளுக்கு பதில் அளித்து வருகிறேன். அவ்வளவுதான்!'' என்றாள் ஆதிரை அடக்கமாக.



• மு. மு. இஸ்மாயில் அவர்கள் பரிசளிக்கிறார்



• சிட்டிபாபு அவர்களின் பரிசு



கம்பராமாயணத்தில் இது வரை ஆதிரை மனப்பாடம் செய்துள்ளவை 300 படலங்கள்! இவைகளில் கேட்கப்படும் வினாக்களுக்கு பதிலளிக்கிறாள்!

''நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ள ஆரம்பித்தது எப்படி?''

''ஒருமுறை அப்பா கல்கத்தா போனார். நானும் போயிருந்தேன். அங்கே தமிழ்ச் சங்கத்

தைச் சேர்ந்தவங்க என்னுடைய திறமையைப் பார்த்து, மேடைல ஏத்தி மாத்தி மாத்தி கேள்வி கேட்டாங்க. தகுந்த படி பதில் சொன்னேன். இதைக் கேள்விப்பட்டு பலரும் பள்ளி விழாக்களில் என்னைக் கூப்பிட்டார்கள். இதுக்கு நடுவில் ஆனந்த விகடன் வார இதழ்,



• ஜெயேந்திர சுவாமிகள்

1992ஆம் ஆண்டில் மழலை மேதைகளுக்காக ஒரு போட்டி நடத்தியது. அதில் கலந்து கொண்டேன். ஐந்தாயிரம் ரூபாய் பரிசும் கிடைத்தது. என்னைப் பற்றி எல்லோருக்கும் தெரிய ஆரம்பித்தது. நான் கலந்து கொண்ட நிகழ்ச்சிகளுக்கு பல துறை அறிஞர்களும் வருகை தந்து, என்னைக் கேள்வி கேட்டு என் நினைவாற்றல் திறமை உண்மைதான் என்பதை உறுதிப்படுத்திப் பாராட்டினாங்க; பரிசு தந்தாங்க; நன்கொடை தந்தாங்க. எனக்கும் உற்சாகமாக இருந்தது. என் திறமையை மேலும் வளர்த்துக் கொள்ள அப்பா, இன்னும் பரவலா இலக்கியங்களை எனக்குக் கற்றுத் தர ஆரம்பித்திருக்கிறார். நானும் எனது திறமைகளை வளர்த்துக்கிட்டு இருக்கேன்" என்று சிரித்தாள் ஆதிரை.

"இதை இன்னும் கொஞ்சம் விவரமா சொல்லேன்."

"92ல் பாரதிய வித்யாபவன் அரங்கில் என்னுடைய ராமாயண வினாவிடை நிகழ்ச்சி நடந்தது. உயர்நீதிமன்ற நீதிபதி லட்சுமணன் ஐயா அவர்கள்தான் தலைமை தாங்கினாங்க. பல அறிஞர்கள் கலந்துக்கிட்டாங்க. கேள்வி கேட்டாங்க. பதில் சொன்னேன். அதில் எதிர் பாராத விதமா வீணைக் கலைஞர் அமரர் சிட்டிபாபு அவர்களும் கலந்து கொண்டார். இசை ஆர்வத்திற்குப் பரிசா அவர் ஒரு வீணையையும் பரிசாகத் தந்தார்."

• குமாரராணி மீனாமுத்தையா பாராட்ட, மாலை அணிவிப்பது திருமதி ஒப்பிலாள் ஆச்சி அவர்கள்



முதலில் பல நிகழ்ச்சிகளில் ஒன்றாக இருந்த ஆதிரையின் நிகழ்ச்சி, இப்பொழுது முழுநேர நிகழ்ச்சியாக வளர்ந்திருக்கிறது. நிகழ்ச்சிகளின் ஒருங்கிணைப்பாளராக ஆதிரையின் தந்தையே வருகிறார். மிகக் குறுகிய காலமான நான்கே ஆண்டுகளுக்குள் ஆதிரை 300க்கும் மேற்பட்ட நிகழ்ச்சிகளை நடத்தித் தனது ஒப்பற்ற நினைவாற்றலின் பெருமையைக் காட்டித் திகைக்க வைத்து வருகிறாள். இந்தியாவின் முக்கிய நகரங்



• இந்தியன் வங்கி கோபாலகிருஷ்ணன் அவர்கள்

கள் மட்டுமின்றி மலேசியாவிலும், சிங்கப் பூரிலும் கூட ஆதிரை நிகழ்ச்சிகளைத் தந்திருக்கிறாள். காஞ்சிப் பெரியவர் ஜயேந்திர சுவாமிகள், குன்றக்குடி அடிகளார், திருவாடுதுறை ஆதினம், மதுரை ஆதினம் போன்ற ஆன்மீகப் பெரியார்கள், பேராசிரியர்கள், திரைப்படக் கலைஞர்கள், பிரபல எழுத்தாளர்கள், பேச்சாளர்கள், கல்வியாளர்கள், சான்றோர்கள் என்று பல் துறையினரது பாராட்டுகளையும் பெற்று வளர்ந்து வருகிறாள். 'இந்தியா டுடே' பத்திரிகையில் ஆதிரையின் இலக்கிய நினைவாற்றல் குறித்துக் கட்டுரை வெளிவந்துள்ளது.

"உன்னுடைய இந்த வளர்ச்சிக்கு யார் காரணம் என்று நினைக்கிறாய்?"

"எனக்குள்ளே இருக்கும் திறமையை சான்றோர் மெச்சத்தக்க விதத்தில் திட்டமிட்டு வளர்த்து வரும் தந்தையார், அவருக்கு உதவியாக உள்ள அம்மா, பிளஸ் டூ வரை என் கல்வியைத் தனது நன்கொடையாக அளித்துள்ள குமாரராணி திருமதி மீனா முத்தையா அவர்கள், எனது பள்ளி ஆசிரியர்கள், எனது திறமை வளர ஐம்பதாயிரம் ரூபாய் நன்கொடை வழங்கியுள்ள இந்தியன் வங்கித் தலைவர் கோபாலகிருஷ்ணன் அவர்கள், அவ்வப் பொழுது என்னைப் பாராட்டி எனக்கு உதவி புரிந்து வரும் எண்ணற்ற பெரியோர்கள் என்று கூறிக் கொண்டே போகலாம். இது முடிவில்லாத பட்டியல். இவர்களது ஆதரவும் உற்சாகமும் இல்லையேல் நான் சாதாரண ஆதிரையே."

நன்றி உணர்வில் ஆதிரையின் குரல் தழுதழுத்தது.

அண்மையில் நடந்த நிகழ்ச்சி ஒன்றில், ஆதிரையின் வளர்ச்சிக்கென அறக்கட்டளை ஒன்றை அமைக்க முடிவாகியுள்ளது. பல்துறை அறிஞர்களின் ஒருமித்த பாராட்டைப் பெற்று வளர்ந்துவரும் ஆதிரை தனது நிகழ்ச்சிகளில் குழந்தைகளுக்கான பாடல்களையும் பாடி வருகிறாள். புதுயுகக் கவிஞர்களையும் ஆதிரை விட்டு வைக்கவில்லை! புதுக் கவிதைகளைத் தருவதுடன் தானே புதுக் கவிதையும் படைக்கிறாள். கவியரசு கண்ணதாசன் நினைவாக நடத்தப்பட்ட கவிதைப் போட்டியில் இவளது புதுக் கவிதை பரிசு பெற்றுள்ளது. தனியார் தொலைக்காட்சிகள், வானொலி ஆகியவை ஆதிரையின் பேட்டியை ஒளி, ஒலி பரப்பியுள்ளன. ஒன்பதே வயதான ஆதிரை சென்னை, செட்டிநாடு வித்யாஷ்ரமப் பள்ளியில் 4-வது படித்து வருகிறாள். இவள் மேன்மேலும் வளர்ந்து உலக சாதனை புரியும் நாள் தொலைவில் இல்லை. அட்வான்சாக பல்லாயிரக்கணக்கான கோகுலம் வாசகர் சார்பில் இப்பொழுதே வாழ்த்தி வைப்போம். வாழ்க வளர்க ஆதிரை!

– ரே

அட்டையில் : **ஆதிரை**
மலர்க்கொத்து கொடுத்து
ஆதிரையைப் பாராட்டுவது சிறுவன்
J. ராகேஷ்
அட்டை வண்ணப்படம் : **ஸ்ரீஹரி**



"உன் பக்தி கண்டு மெச்சினேன்... உனக்கு என்ன வேண்டும் சிறுவனே?"

"நான் பள்ளிக்குப் போகாமலேயே பாஸ் ஆகணும்... பிள்ளையாரப்பா..."

– நெற்குப்பை கி. மனோகரன்

புவனா தேடிய புதையல்

10. முரடர்களுக்கு முடிவு!

புவனாவைப் பார்த்ததும் எல்லோரும் திகைத்தனர். டாக்டர், அவர் மனைவி, தீபாவுடன் சினிமா பார்க்கப் போனவள், தனியாக திடுதிப்பென்று வந்து நிற்கிறாளே! எத்தனை நேரமாக நிற்கிறாள்? அவர்கள் பேசியதை எல்லாம் கேட்டிருப்பாளோ? டாக்டர், அவர் மனைவி, தீபா எல்லாம் என்ன ஆனார்கள்?

மௌனத்தை புவனாவேதான் கலைத்தாள்.

"என்னது எல்லோரும் இப்படித் திகைக்கிறீர்கள்? என்னுடைய மோதிரத்தை முகம் கழுவிக் கொள்ளும் போது வாஷ் பேசின் மேல் வைத்தேன். திரும்ப எடுத்துக் கொள்ள மறந்து போச்சு. சினிமா ஆரம்பிக்க இன்னும் அரைமணியாகும் போல இருந்தது. அதனால் நானே போகவர ஒரு ஆட்டோவைப் பேசிக் கொண்டு வந்தேன்."

புவனா குளியலறைக்குள் போய்த் திரும்பி வந்த போது அவள் கையில் மோதிரம் இருந்தது.

"ஏம்மா, நீ வந்தது டாக்டருக்குத் தெரியுமா?" என்று கேட்டார் ஈஸ்வர்.

"சொன்னால் அவர் தனியாகப் போக விடுவாரா? அதனால் வளையல் கடைகளைப் பார்ப்பது போல் இருந்து விட்டு, தீபாவிடம் மட்டும் சொல்லிக் கொண்டு கிளம்பி வந்து விட்டேன்."

"என்னம்மா இது அசட்டுத்தனம்? உன்னைக் கடத்திக்கிட்டுப் போக ஒரு முயற்சி நடந்திருக்கு. நாங்களெல்லாம் வயிற்றில் நெருப்பைக் கட்டிக் கொண்டு இருக்கிறோம். இந்த மாதிரி அசட்டுத் தனம் பண்ணியிருக்கியே? உனக்கு என்னமாவது ஆகியிருந்தாலோ, இல்லை யாராவது மறுபடி கட்டாயப் படுத்திக் கடத்திக் கொண்டு போயிருந்தாலோ என்ன ஆவது? டாக்டர் உன் செயலைப் பார்த்து



மதிஒளி

எப்படிப் பதைபதைத்துப் போயிருப்பார்?" என்று ரவி கோபமாகக் கடிந்து கொண்டிருக்கும்போதே, யாரோ தடதடவென்று வரும் சத்தம் கேட்டது.

"புவனா வந்தானா?" என்று படபடப்புடன் கேட்டுக் கொண்டே டாக்டர் வந்தார். பின்னாலேயே அவர் மனைவி, தீபா.

"ஆனாலும் இந்தக் குண்டு தைரியமும் பிடிவாதமும் உனக்கு ஆகாதம்மா" என்று டாக்டரின் மனைவி கடிந்து கொண்டாள்.

"என்னை மன்னிச்சுக்குங்க ஆண்டி. உங்ககிட்டே சொன்னால் போக அனுமதிக்க மாட்டேங்கன்னு எனக்கு நல்லாத் தெரியும். அதனால தான் தீபாவிடம் ஆட்டோவில் ஏறப்போற சமயத்துல சொல்லிட்டு வந்தேன். நாலு மணி நேரத்துக்கு ஒருமுறை, இங்க ஒட்டல்ல குளியலறையையும், வாஷ்பேசினையும் சுத்தப்படுத்தி மருந்து தெளிக்க ஆளுங்க வராங்கன்னு நல்லா தெரியும். அப்படி இருக்கும் போது, நான் பேசாம இருந்துட்டா என்ன ஆகும்? மோதிரமே யாருடைய கைபட்டாவது சாக்கடைக்குள் விழுந்து போயிடலாம் இல்லையா? அப்புறம் பழி ஒருபக்கம் பாவம் ஒருபக்கம் என்று பலரையும் சந்தேகப்படும்படி இருக்கும் இல்லையா? அதைத் தவிர்க்க இப்படிச் செய்வதே சரி என்பதால் வந்தேன். இங்கே இப்படி நான் வந்தது பல விதங்களில் எனக்கு நன்மையாக முடிந்திருக்கிறது ஆண்ட்டி."

"நாம் பேசிக் கொண்டிருந்ததைக்.



தான் குறிப்பிடுகிறானோ என்று அப்பா, அம்மா, ரவி மூவரும் அவளைத் திகைப்புடன் பார்த்தனர். டாக்டரால் எதையும் ஊகிக்க முடியவில்லை. தீபாவும் அவள் அம்மாவும் தான் குழப்பத்துடன் பார்த்தனர். அவர்களுக்குத்தான் எதுவுமே புரியவில்லை.

"நீ என்னம்மா சொல்றே புவனா?" என்று அம்மா கேட்டாள்.

"இனிமேல் ...



...விடம் எதையும் மறைத்துப் பயனில்லை அம்மா. நீங்கள் மூவரும் பேசிக் கொண்டிருந்ததை நானும் கேட்டுக் கொண்டுதான் இருந்தேன்."

புவனா பேசி நிறுத்திவிட்டு அம்மாவைப் பார்த்தாள். அதில் கலவரமும் பீதியும் நிறைந்து காணப்பட்டது.

"பயப்படாதேம்மா. அனாதையான என்மேல் இத்தனை பாசத்தையும் அன்பையும் கொட்டி வளர்த்து வருகிறீர்களே! என்னைப் பெற்ற தாயும் தந்தையும் உயிருடன் இருந்தால் கூட, இந்த அளவு அன்பையும் பாசத்தையும் காட்டியிருப்பார்களா என்பது சந்தேகம்தான். எனக்கு உண்மை தெரிந்து விடக் கூடாது என்று என்னிடம் இருந்து மறைக்க எத்தனை பாடு பட்டிருக்கிறீர்கள்? எல்லாம், எங்கே நான் உங்களிடம் அன்பைக் காட்டாமல் இருந்து விடுவேனோ என்ற பயத்தால் தானே? நான் கண்டிப்பாக உங்களை வெறுக்க மாட்டேன் அம்மா. உங்களுக்குப் பெண்ணாக இருக்க நான் பெரிய தவம் பண்ணியிருக்க வேண்டும். எனக்குந்தான் உண்மை தெரிந்து விட்டதே என்று என்னை நீங்கள் வெறுக்காமல் இருந்தால் போதும்" என்று புவனா கலங்கியபோது, ரமா ஓடி வந்து அவளை அணைத்துக் கொண்டு விசும்பினாள். எதுவுமே புரியாமல் திகைத்துநின்றவர்கள் தீபாவும் அவள் அம்மாவும்தான். டாக்டர் அவர்களுக்கும் புரியவைத்தார்.

அழுகை, கண்ணீர் வெள்ளம், ஆறுதல் என்று எல்லாம் மாறிமாறி நடந்தது. அந்த அமர்க்களத்தில் 'சினிமாவுக்கு டிக்கெட் வாங்கியிருக்கிறோம். போய்ப் பார்க்க வேண்டும்' என்பது எல்லோருக்குமே மறந்து போய்விட்டது.

'ஒரு வழியாக உங்கள் பிரச்னை தீர்ந்தது. தான் உங்களுக்கு வளர்ப்பு மகள்தான் என்ற உண்மையை புவனா தெரிந்து கொண்டு விட் டாள். நீங்கள் பயந்தபடி உங்களை வெறுக்காமல் தொடர்ந்து அன்புகாட்டி வருவேன் என்றும் கூறிவிட்டாள். இனி அடுத்த பிரச்னைக்கு வாருங்கள்'' என்றார் ரவி. எல்லோரும் ஆவலாக அவரை நோக்கினார்கள்.

"ராம்நம்பூர் மகாராணாவின் விலை மதிப்பில்லாத நகைகளும், தங்க வெள்ளிக் கட்டிகளும் புதைக்கப்பட்டிருக்கும் இடம் கண்டிப்பாக புவனாவுக்குத் தெரியும் என்றுதான் அவளைக் கடத்திய இரண்டு முரடர்களும் நம்புகிறார்கள். அந்த இரகசியம் புவனாவுக்கு உண்மையாகவே தெரியும் என்றால் நாம் இங்கே இன்னும் சில நாட்கள் தங்கி முயற்சி செய்யலாம். இல்லையேல் சென்னைக்கு மூட்டை கட்டலாம்,'' என்றார் ரவி.

"என் பெண்ணுக்குப் புதையல் கிதையல் எதுவும் வேண்டாம். அவள் நல்லபடியாக இருந்தால் அதுவே போதும். நான் சம்பாதித்து வைத்திருக்கும் பணம் அவளுக்குப் போதுமானது. நாளையே சென்னைக்குக் கிளம்பலாம்.'' என்றார் புவனாவின் அப்பா ஈஸ்வர்.

''நானும் அதையேதான் எண்ணுகிறேன். இதுவரை நடந்ததை எல்லாம் கெட்ட கனவாக மறந்துவிட்டு ஊருக்குக் கிளம்பலாம்'' என்றாள் அம்மா.



''இருங்கள். நீங்களெல்லாம் உங்கள் எண்ணத்தைக் கூறிவிட்டீர்கள். புவனா என்ன நினைக்கிறாள் என்பதைக் கேட்போம்?'' என்றார் டாக்டர்.

எல்லோரும் புவனாவை ஆவலாகப் பார்த்தனர்.

''டாக்டர், அந்த முரடர்கள், ராணியின் சுற்றத்தார்கள் எல்லோருமே உண்மையாகவே மகாராணாவின் புதையல் எங்கேயோ புதைக்கப்பட்டிருக்கிறது என்பதில் உறுதியாக இருக்கிறார்கள் என்று தோன்றுகிறது. அதோடு அந்த இரகசியம் எனக்கும் தெரியும் என்று அந்த முரடர்கள் நம்புகிறார்கள் என்றும் தெரிகிறது. இது உண்மையாக இருக்குமா என்பதை முதலில் நாம் உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். இது வெறும் வதந்திதான் என்பது உறுதியாகி விட்டால் உடனே நாம் கிளம்பி விடலாம்'' என்றாள் புவனா.

புவனாவின் பேச்சு தெளிவாக, உறுதியாக இருப்பதைக் கண்டு எல்லோருக்கும் வியப்பு. எப்படி திடீரென்று இந்த மாற்றம்!

"நீ சொல்றது சரியான யோசனைதாம்மா. ஆனால், ராணாவின் புதையல் இருப்பது உண்மையா, இல்லை வதந்திதானா என்பதை எப்படி உறுதி செய்து கொள்வது?'' என்று கேட்டார் அப்பா ஈஸ்வர்.

"என்னைக் கடத்திக் கொண்டு போன முரடர்களை நான் சந்தித்துப் பேசினால் என்னால் ஒரு முடிவுக்கு வர முடியும். அவர்களுக்கு என்னையும் தெரிந்திருக்கிறது. எந்த அளவுக்கு ராணா என்னிடம் அன்பு காட்டினார் என்பதெல்லாமும் தெரிந்திருக்கிறது."

"என்னம்மா. அவர்கள் தானே உன்னைக் கடத்திக் கொண்டு போனார்கள்?''- வியப்புடன் கேட்டார் ஈஸ்வர்.

"உண்மைதாம்பா. ஆனால், அவர்கள் என்ன காரணத்திற்காக என்னைக் கடத்தினார்கள் என்பது அரை மணி முன்பு நீங்கள் பேசிக் கொண்டிருந்ததைக் கேட்ட பிறகுதானே எனக்குப் புரிந்தது?''

என்ன ஒற்றுமை? தனித்திருப்பது எது?

- போட்டி முடிவு

இந்தப் போட்டியிலும் வழக்கப்படி, ஏராளமானவர்கள் ஆர்வத்துடன் கலந்து கொண்டிருக்கிறார்கள். ஆனாலும் மிகப் பெரும்பாலோர் தவறான விடையையே தந்திருக்கிறார்கள்! ஒவ்வொரு படமும் என்ன என்பதைக் கவனித்து ஒன்றின்பின் ஒன்றாக எழுதிக் கொண்டே வந்தால் விடையைக் கண்டுபிடிக்க மிக எளிய வழி தோன்றிவிடும். எந்த ஒரு போட்டிக்கும் விடையைக் கண்டுபிடிக்க இதுதான் சரியான அணுகு முறை. பத்து மட்டும் ஒற்றுமை உள்ளவை, ஒன்று மட்டும் தனித்து நிற்கும் என்று குறிப்பு வேறு தரப்பட்டுள்ளதே! இருந்தும் மிகப் பெரும்பாலோர் கோட்டை விட்டிருக்கிறார்கள். சரியான விடை எழுதியவர்களில் இருந்து பரிசுக்கு உரியோர் குலுக்கல் முறையில் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

ரூபாய் பதினைந்து பரிசு பெறுவோர் :

1. எல். பிரசன்னா, காரைக்கால்,
2. பி. சண்முகம், மருதவனம் போஸ்ட்,
3. வி.ஆர். ஹரிணி, சென்னை - 63,
4. வி. அர்ச்சனா, சென்னை - 83,
5. பா. ஜெயக்குமார், வந்தவாசி,
6. ஆர். சி. குமார், சிவகாசி,
7. பி. ஞானரோனி, திருச்சி - 21,
8. மு. சித்ராதேவி, தூத்துக்குடி - 8,
9. ச. பூர்ணிமா, சென்னை - 73,
10. கு. ஸ்ரீராம், ஒன்பத்துவேலி போஸ்ட்,
11. கௌசல்யா, பஞ்சமாதேவி போஸ்ட்.

சரியான விடை :

பத்துப் படங்களில் உள்ளவையும் 'வி' என்ற கடைசி எழுத்தில் முடிகின்றன. ஒன்று மட்டும் (குரங்கு) 'கு' என்ற எழுத்தில் முடிகிறது.

● குவி, சீவி, குருவி, புரவி (குதிரை), புவி, கவி, அருவி, சாவி, குழவி (குழந்தை), ஆவி.

கலந்து கொண்டவர்களுக்கு நன்றி. பரிசு பெற்றவர்களுக்குப் பாராட்டு.

"மின்தடை ஏற்பட்ட அந்த அரை நிமிட மின்னல் இடைவேளையைப் பயன் படுத்திக் கொண்டு அவர்கள் தப்பி விட்டார்களே? போலிசாரால் மறுபடி அவர்களைக் கண்டு பிடிக்க முடியுமா? கண்டு பிடித்தால்தானே அவர்களோடு பேச முடியும்? அப்படி நடக்கா விட்டால் அடுத்தது என்ன திட்டம்?"- ரவி கேட்டார்.

"புதையல் இருக்கிறது என்று உறுதியாக நடவடிக்கை எடுத்தவர்கள் நமக்குத் தெரிந்து இவர்கள் மட்டுமே. மற்றதெல்லாம் வதந்திகள்தான்" என்றார் டாக்டர்.

"எதற்கும் நாளை காலை போலீஸ் அதிகாரியிடம் அவர்கள் கிடைத்தார்களா என்பதைக் கேட்போம். பிறகு மற்றதெல்லாம்" என்றார் டாக்டர்.

காலையில் எழுந்ததும் டாக்டரும், ரவியும் புவனாவையும் அழைத்துக் கொண்டு போலீஸ் ஸ்டேஷனுக்குப் போனார்கள். அங்கே, ராம்தம்பூர் அரண்மனையின் பாதுகாப்பு அதிகாரியாக இருந்த தமிழ் தெரிந்தவர் இருந்தார். இவர்களைக் கண்டதும் அவர் உற்சாகத்துடன் வரவேற்றார்.

"புவனாவைக் கடத்தி, பிடிபட்டு, தப்பி ஓடிவிட்ட அந்த இரு முரடர்களைப் பற்றியும் ஏதாவது தகவல் தெரிந்ததா?" என்று ஆவலுடன் கேட்டார் ரவி.

"இனிமேல் அவர்கள் நம்மிடம் சிக்கவே மாட்டார்கள். அப்படிப்பட்ட இடத்துக்குப் போய் விட்டார்கள் இருவரும்!" என்று சஸ்பென்ஸாக நிறுத்தினார் அதிகாரி.

"ஏன் சார்?" என்று கேட்டார் டாக்டர்.

"அவர்கள் இருவரும் விபத்தில் சிக்கி இறந்து விட்டார்கள்."

எல்லோரும் அதிர்ந்துபோய் நின்றனர்.

"ஆமாம் சார். இங்கே சலவைக்கல் பாறை மலைகள் அதிகம் என்பது உங்களுக்குத் தெரியும் இல்லையா? அவைகளை சில சமயங்களில் வெடி வைத்துத் தகர்ப்பதும் உண்டு. எங்களிடம் இருந்து ஒளிந்து வாழ, அப்படி வெடி வைத்த இடத்திற்கு இருவரும் போயிருக்கிறார்கள். வெடித்த பாறைகள் சிதறி, இவர்கள்மேல் விழுந்து இருவருமே போய்விட்டார்கள். இப்படி ஒரு முடிவைச் சந்திக்கத்தான் அன்று எங்களிடம் இருந்து தப்பி ஓடினார்களோ என்னவோ?" என்று பெருமூச்சு விட்ட அதிகாரி விடைபெற்றுக் கொண்டு நகர்ந்தார்.


மேற்கொண்டு என்ன செய்வது என எந்த முடிவுக்கும் வர இயலாது மூவரும் குழம்பிப் போய் திரும்பினர்.

(தொடரும்)



தேர்தல் வந்தாச்சு!







தேர்தல் பொதுத் தேர்தல்
தேவை யுள்ள தேர்தல்
ஊர்கள் தோறும் மக்கள்
ஓட்டுப் போடும் தேர்தல்

அபேட் சகரின் நிலையினை
ஆய்ந்து ஓட்டுப் போட்டு
சுபேட்ச நாடாய் மாற்றும்
சுறு சுறுப்புத் தேர்தல்

நைந்த ஏழை மக்களும்
நடுநிலை ஓட்டுப் போடும்
ஐந்தாண் டுக்கு ஒருமுறை
அழகாய் வரும் தேர்தல்


இரவு பகலில் எல்லாம்
இனிய பேச்சும் பாட்டின்
குரலில் கொள்கை விளக்கும்
கொடிகள் பறக்கும் தேர்தல்

பலபல கட்சிக் கொடிகள்
பாங்காய் பறக்கும் தேர்தல்
கலகல வென்று தலைவர்
கட்சியை விளக்கும் தேர்தல்

ஆண்கள் பெண்கள் ஒழுங்காய்
அபேட் சகரைத் தேர்ந்து
வேண்டிய சின்னம் குத்தி
விரைவாய் போடும் தேர்தல்

- வேட்டைநல்லூர் தமிழன்பன்









தும்பிலி
அமைப்பு — ரே
ஓவியம் — சசி
கோடங்கி கொடிய கொள்ளைக்காரன்
கொள்ளைக்குக் கிளம்புமுன்
சின்னி, உனக்கு என்ன கொண்டு வரட்டும்?
கல் வைத்த பதக்கம் அப்பா
மனைவியிடம் —
உனக்கு மல்லி?
வைரத்தோடு மட்டும்
இந்த இரண்டும் இல்லாம திரும்ப மாட்டேன். வரேன்



ஊர்களைக் கொள்ளையிடுவான்.
ஐயோ!
அம்மா
ஐயோ!
செல்வர்களைக் கட்டி வைத்து—
ஐநூறு சவரன் நகை,
துணிமணி, மளிகை தரீங்களா?
தரோம். ஊரை எரிக்காதீங்க
அதுல வைரத்தோடும்,
கல் வைத்த பதக்கமும் இருக்கணும்
கண்டிப்பா இருக்குங்க. இதோ
எரிக்காம, கொல்லாம கிளம்புங்க!



புத்திசாலி மக்கள்!
ஒருமுறை கோடங்கி கொள்ளையிட்டுத் திரும்பும் போது
குதிரை ஏன் தயங்குது!
கோடங்கி குனிந்து பார்த்து...
அட! சின்ன நாய்க் குட்டி!
பாவம். காயம்பட்டிருக்கு! எந்தப் பாவியோ அடிச்சிருக்கான்!
பயப்படாதே! பச்சிலை கட்டி மருந்து போடறேன். ரெண்டு நாள்ள சரியாய்டும். பாலைக் குடி!
வாலைக் கூட ஆட்டறியே!
நன்றி ஐயா!


பேசறியே! உன் பேர் என்ன?
தும்பிலி
கோடங்கி தும்பிலியைக் கொண்டு போனான்.
ஆசையாக வளர்த்தான்...
சீக்கிரமா பாலைக்குடி. கொள்ளைக்குக் கிளம்பணும் தும்பிலி
இன்னிக்கி அம்மாவுக்கு நெளி மோதிரம். எனக்கு காசுமாலை
உனக்கு என்ன வேணும்?
ஆபத்து இல்லாம, முழுசா திரும்பி வாங்க. அது போதும்!
வேறு ஏதாவது கேளேன் தும்பிலி?



இப்படி ஊரை வாட்டிக் கொள்ளை யடிக்கிறீர்களே? எதுக்காக?
அன்பு மகளுக்காக, ஆசை மனைவிக்காக. இல்லாதவர் களுக்கு உதவ...
இவங்கதான். கேட்கிறேன் பார்...
உங்களுக்கு ஆபத்தானால் யார் உதவு வாங்க?
எல்லோரையும் அழைத்து—
யாருக்காகக் கொள்ளையடிக்கிறேன்?
எனக்கு ஆபத்து வந்தால்...?
உயிரைக் கொடுத் தாவது காப்போம்!
அது முடியலே, நாங்களே மாய்ச்சுக்கு வோம்!
எங்களுக்காக! எங்களுக்காக!
நீங்க இல்லாத வாழ்க்கை எங்களுக்கு மட்டும் எதற்கு?



கேட்டாயா தும்பிலி?
ஆபத்து வராது என்று அசைக்க முடியாத நம்பிக்கை! அதான்!
இதுகூட எனக்குப் பெருமை தானே? வரேன்.
ஜாக்கிரதை ஐயா!
ஒருநாள் – பக்கத்து நாட்டரசர் பெரும்படை யுடன் வந்து வளைக்கிறார்.
கோடங்கியின் எதிர்த்தாக்குதல் தோல்வியடைய... கோடங்கி கூட்டத்துடன் கைதாகிறான்.



அரசர் முன் விசாரணை...
கொலை கொள்ளைக் குற்றத்திற்காக எல்லோருக்கும் மரண தண்டனை!
அரசே, நாங்கள் நிரபராதிகள். எங்களுக்கும் இதற்கும் சம்பந்தமே இல்லை. கருணை காட்டுங்கள்.
கொள்ளை யடிப்பது பாவம்னு புத்திமதி சொன்னோம். கேட்கலே...
இவர்தான் கட் டாயப்படுத்திக் கொள்ளையிட அழைப்பார். மறுக்க முடியுமா? கருணை காட்டுங்கள்.
கோடங்கி, உன் பதில் என்ன?
எங்கள் நிலையும் இதுவே! கருணை காட்டுங்கள்.


அரசே, இவர்களுக்கா கவே கொள்ளையிட் டேன். இப்போ ஏமாற்றிவிட்டார்கள்!
கூட்டத்தின் தலைவன் நீயே. முழுப் பொறுப்பும் உன்னுடையதே.
அதனால் உனக்கு மட்டும் மரண தண்டனை விதிக்கிறேன்!
இது நியாயமில்லை அரசே...!
என் அனுதாபங்கள்! ஆனாலும், உனக்கு ஒரு சலுகை! எல்லோருமேவா நம்பிக்கைத் துரோகம் பண்ணு வார்கள்? யாராவது ஒரு நல்லவர், உன்னை நல்லவன் என்று கூறட்டும். தண்டனையைக் குறைக்கிறேன்.
ஆபத்து என்றால் உயிர் கொடுப் பேன். இல்லை, மாய்வேன் என்றீர்களே... எல்லாம் பொய்யா?
என்னை நல்லவன் என்று கூற ஒருவர் கூடவா இல்லை?



எல்லோரும் பேசாமல் இருக்க தும்பிலி முன்னே வருகிறது.
அரசே, என் எஜமானர் உண்மையில் நல்லவர்!
தும்பிலி, உன் நன்றி உணர்வில் ஒரு துளிகூட பயனடைந்த வர்களுக்கு இல்லையே!
நாயால் பிழைத்தாய். உன்னை உடனே நாடு கடத்துகிறேன். இனியாவது திருந்தி வாழ்.
நன்றி அரசே!
எல்லோரும் போய்விட
எஜமான் நானும் வருவேன்
கோடங்கி தும்பிலியுடன் காட்டுக்குக் கிளம்பினான்.



மரத்தில் பரண் அமைத்து கோடங்கி, தும்பிலியுடன் தங்கினான்
காய்கனிகளை உண்டு வாழ்ந்தனர். தும்பிலியும் உதவுகிறது.
ஒருமுறை விஷக்கனியைத் தின்றுவிட கோடங்கியின் பார்வை போய்விடுகிறது.
ஐயோ! கண் எரிகிறதே!
தும்பிலி, எனக்குக் கண் தெரியலையே! நான் இனி என்ன பண்ணுவேன்?
ஊருக்குள் போய் வைத்தியம் பார்க்கலாமா?
வேண்டாம் எஜமான். நீங்கள் சாப்பிட்டிருப்பது கடுமையான விஷக்கனி. இதற்கு மாற்றே கிடையாது!




ஊருக்குள் போனால், காவலாளிகள் பிடிப்பார்கள். பிறகு மரண தண்டனை தான்!
நான் இருக்கும்போது என்ன கவலை?
தும்பிலி வனதேவதையை வேண்டிக் கொண்டது.
வனதேவதையே!
தும்பிலி. ஏன் அழைத்தாய்?
என் எஜமானுக்குப் பார்வை திரும்ப அருளுங்கள்!
இந்தப் பாவிக்கா பரிகிறாய்?
ஆம்தாயே. அருள் செய்!



அப்படியானால் பதிலுக்கு நீ உன் பார்வையை இழக்கத் தயாரா?
இப்பவே தயார்! எஜமானுக்கு பார்வை கிடைத்தால் போதும்!"
கோடங்கிக்குப் பார்வை கிடைக்க,
தும்பிலி பார்வை இழக்கிறது.
எனக்காக, உன் பார்வையைத் தியாகம் பண்ணி விட்டாயே!
தும்பிலியைப் பரணில் வைத்து கோடங்கி காக்கிறான்.
தும்பிலி, இந்தா சாப்பிடு!
ஒருநாள் கோடங்கியைப் புலி துரத்த மரத்தில் ஏறித் தப்புகிறான்.


தப்பியதை தும்பிலியிடம் கூறுகிறான்.
புலி போயிடுத்தா எஜமான்?
இல்லே. கீழேயே படுத்திருக்கு
ஜாக்கிறதையா இருங்க
தும்பிலி, எனக்காவது பார்வை இருக்கு. நீதான் மிகவும் கவனமா இருக்கணும்.
இரவு வந்தும் புலி போகவில்லை!
நள்ளிரவில் புலி மேலே பார்த்தது—
கோடங்கி, தும்பிலி தூங்கிடுத்தா?
தூங்கியாச்சு!


காட்டில் எத்தனை நாள் தவிப்பே? தும்பிலியைத் தள்ளிவிடு. என் பசி ஆறும். பரிசா புதையல் தரேன். வேற இராஜ்ஜியம் போய்ப் பிழை...
கோடங்கி தும்பிலியைத் தள்ளி விடுகிறான்.
தும்பிலியை வனதேவதை தாங்கி—
தும்பிலி, எஜமானனின் புத்தி தெரிஞ்சுதா? ஊரே உதறின பிறகும், இவன் உயிரைக் காத்தாய்.
காட்டிலும் தொடர்ந்தாய். உன் பார்வையைக் கொடுத்து வாழவைத்தாய். கடைசியில் என்ன செய்தான் பார்த்தாயா?
மரத்தை சாய்ப்பேன்! நன்றி இல்லா இவனே புலிக்கு இரையாகட்டும். உன் தியாகத்திற்குப் பரிசு தரேன். என்ன வரம் வேண்டும்?



உலகெங்கும் நாய்கள், சோறிட்டவர்களிடம் இறுதி வரை நன்றி உணர்வு மாறாது இருப்பது இதனால் தான்.

கருத்து : ஆப்பிரிக்கப் பழங்கதை.



ஐயா தான் நீதிபதி!

சீனுவின் குரலில் ஓர் அதட்டல் கலந்திருந்தது.

"எல்லாரும் அவங்க அவங்க கைவிரல் ரேகையை இந்தக் காகிதங்களிலே பதிவு செய்யணும் வாங்க. ஒவ்வொருவரா வரணும்" என்றான்.

வீட்டின் கூடத்தில் கூடி இருந்த அனைவரும் ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துக் கொண்டனர். அனைவரும் என்றால் தாத்தா, பாட்டி, அம்மா, அப்பா, அத்தை, மாமா, மாமி, அத்தான் சேகர், அண்ணா வெங்கிட்டு, அக்கா சுமதி, தம்பி சந்துரு, தங்கை மீனா, மாமா மகள் சுலோச்சனா, வேலைக்காரி காந்தாமணி இத்தனை பேரும் அந்த அனைவரில் அடங்குவர். பூனைக்குட்டி அங்கு இருந்தாலும், அது சேர்க்கப்படவில்லை. பூனையின் பாதங்களில் ரேகைகள் கிடையாது என்பது சீனுவின் கருத்து.

வீட்டில் ஒரு மாபெரும் திருட்டு நடந்திருக்கிறது. வெறும் பணம், நகை, கடியாரம், டிரான்சிஸ்ட்டர், துணி மணிகள் காணாமற்போனால்தான் திருட்டு என்பது அல்ல. சற்று மாறுதலான திருட்டு. நாம் கூட கொஞ்சம் திருடி இருக்கலாமே என்று எண்ணும்படியான திருட்டு!


அதாவது திருட்டுப் போன பொருள் சீடை. உருண்டை உருண்டையாக கோலிக் குண்டு வடிவில் இருக்குமே, அது. உப்புச் சீடை என்னும் அதை குறிப்பிடுபவர்கள் உண்டு. ஏனென்றால் வெல்லச் சீடை என்பதும் உண்டல்லவா?

பூ! இதானா? இத்தனூண்டு சீடை திருட்டுப் போனதற்காகவா இத்தனை ஆர்ப்பாட்டம் என்று கருதலாம். சீடை சிறிய அற்பமான பொருள்தான். அதுக்காக, காணாமற் போன அதைத் திருட்டு அல்ல என்று சொல்லிவிட முடியுமா? எதாக இருந்தாலும் திருட்டு திருட்டுத்தானே?

திருட்டு என்னும்போது, அது சீடையாக இருந்தால் என்ன, பட்டாணிக் கடலையாக இருந்தால் என்ன? இன்று சீடை திருட்டுப் போய் இருக்கிறது; நாளை முறுக்கு திருட்டுப் போகலாம். அப்புறம் தேன்குழல், லட்டு, அதிரசம் என்று செய்து வைத்தவைகள் அனைத்தும் கால்கள் முளைத்தன போல காணாமற் போவதற்கு வாய்ப்பு ஏற்படலாம் அல்லவா? ஆகவே சீடையைத் திருடியவர் யார் என்பதை மரியாதைக் குறைவு இல்லாமல் கண்டு பிடிக்க சீனு முடிவு எடுத்தான்.

இன்னொரு சிறப்பான விவகாரமும் இதில் அடங்கி இருந்தது! பணம், நகை,

திருவாழத்தான்



நுணி, கடியாரம், டிரான்சிஸ்ட்டர் போன்றவை திருட்டுப் போனால், திரும்பக் கிடைப்பதற்கு வாய்ப்பு உண்டு. ஆனால் சீடை, முறுக்கு போன்ற தின்பண்டங்கள் திருட்டுப் போனால் போனதுதானே!

போனது போனதுதான் என்பதற்காக சும்மா இருந்து விட முடியுமா? திருடியது யார் என்று கண்டு பிடித்து, எச்சரிப்பது அல்லது தண்டிப்பது என்பது மீண்டும் அத்தகைய தின்பண்டத் திருட்டு ஏற்படக் கூடாது என்ற முன் நடவடிக்கையில் தானே? ஆகவே சீடைத் திருடனை அல்லது திருடியைக் கைரேகையும், களவுமாகப் பிடித்து விடுவது என்று சீனு முனைந்து விட்டான்.

பாட்டி, அத்தை, அம்மா, மாமி, மீனா ஆகியோர் மெனக்கெட்டு மணிக் கணக்காக உட்கார்ந்து உருட்டிப் பண்ணி ஒரு பெரிய எவர்சில்வர் அடுக்கு நிறைய மூடி வைத்த சீடை அது. சுட்டிப் பெண் சுலோச்சு கூட, தானும் பண்ணுவேன் என்று அடம் பிடித்துக் குட்டி குட்டியாக மாவை உருட்டிப் போட்டாள். உருண்டை, உருண்டையாக, ஒண்ணுகூடக் கருகாமல் செக்கச் செவக்க, எண்ணெய் பொங்கும் வாணலியில் டேக்ஸா கரண்டியால் எடுத்து, குவியக் குவியச் செய்து வைத்த சீடை. பல்லுப் போன தாத்தா கூட, தின்று



பார்த்துவிட்டு, 'என் ஆயுளில் இத்தனை ருசியான, வாயிலே கரகரன்னு கரைகிற சீடையைப் பார்த்ததே இல்லை என்று பாட்டியிடம் சான்றிதழ் வழங்கினாராம்.

அப்படி அந்தப் பெரிய அடுக்கு நிறைய நிரப்பி, மூடி வைத்திருந்த சீடை ஓர் இரவுப் பொழுதுக்குள் முக்கால் அடுக்காகக் குறைவது என்றால், அதைத் தாங்களும் திருடி உண்ணவில்லையே என்று குறைப்படுபவர்களுக்கு வயிற்று எரிச்சல் இருக்காதா, என்ன?

கேட்டுப் பார்த்தார்கள். யாருமே உண்மையை ஒப்புக் கொள்ள முன் வரவில்லை!

"என்னிடம் விடுங்கள். திருடனை நான் கண்டு பிடிக்கிறேன்" என்று சீனு முன் வந்தான். "ஆனால் எல்லாரும் என்னுடன் ஒத்துழைக்கணும். இதில் பெரியவர்-சிறியவர், ஆண்-பெண் வித்தியாசம் கிடையாது. நீதியின் முன் 'அனைவரும் சமம்" என்று முன்னுரையாக வசனம் பேசினான்.

எல்லோரும் ஒப்புக் கொண்டனர்.

எதிரே மேஜை. அதன் அருகில் சீனு நின்றான். மேஜைமீது வெள்ளைக் காகிதங்கள், ரப்பர் ஸ்டாம்ப் பேடு, பிடிகொண்ட பூதக் கண்ணாடி, சம்பந்தப்பட்ட எவர்சில்வர் அடுக்கின் வட்ட வடிவ மேல் மூடி இத்தனையும் இருந்தன. மாஜிக் செய்யப் போகிறவனைப்போல சீனுவின் தோற்றம்!



''எதிர்காலத்தில் நான் ஒரு இன்ஸ்ட்ருமெண்ட் மெக்கானிக்காக உருவாக விரும்புகிறேன்!"

''சரி! அதற்கு நான் என்ன செய்யணும்?"

"உங்க வாட்சை கழற்றித்தாங்க! ரிப்பேர் பண்றேன்.

"ஒவ்வொருவராக வாருங்கள். வந்து இந்த ரப்பர் ஸ்டாம்ப் பேடில் வலது கை ஐந்து விரல் நுனிகளையும் அழுத்தி எடுத்து, இந்த வெள்ளைத் தாளில் விரல் ரேகைகளைப் பதிய வைக்க வேண்டும்'' என்றான் சீனு ஆர்பாட்டமாக.

"எனக்கு ஆள்காட்டி விரல்லே நகச் சுத்து. எலுமிச்சம்பழம் சொருகிகிட்டு இருக்கேனே?'' என்றான் சந்துரு கையை உயர்த்தி.

''மற்ற விரல்களைப் பதியவை'' என்றான் சீனு அவன் பக்கம் திரும்பாமல்.

"நான் மாட்டேன். விரல் எல்லாம் மைக்-கரையாகிவிடும்'' சுலோச்சனா சொன்னாள்.

''நினைச்சேன். அம்மா, சிடையை சுலோச்சுதான் திருடி இருக்காள்!''- துப் பறிந்து கண்டு பிடித்தவனின் வெற்றி எக்காளத்துடன் சீனு கூறினான்.

"ஐயையோ! விரல்லே மையானாலும் பரவாயில்லை, ரேகையைப் பதிவு செய்ய றேன்''- சுலோச்சனா பதறி எழுந்து வந் தாள்.

தாத்தா கேட்டார், "சீனு, எப்படி ரேகையை ஒப்பிட்டுப் பார்ப்பாய்?''

"இதோ அசல் ரேகைகளை அடுக்கு மூடியிலிருந்து நகல் எடுத்து வச்சிருக்கேன், தாத்தா!''. ஒரு காகிதத்தை எடுத்துக் காண் பித்தான். கருப்பு நிறத்தில் அந்த தாளில் விரல் ரேகைகள் காணப்பட்டன.

"இதை எல்லாம் எங்கேடா கத்துக் கிட்டே?''- அத்தை கேட்டாள்.

சீனு கம்பீரமாக ஒரு புன்னகை பூத் தான். "இத்தனை ரேகைகள் இருக்கின்றன. இந்த ரேகைகளுடன் யார் யாருடைய ரேகைகள் ஒத்துப் போகின்றன என்று பார்க்கப் போகிறேன்''- நாடக பாணியில் சீனு பதில் சொன்னான்.

"அதுலே உன் அம்மா, பாட்டி, அத்தை, மாமி எல்லாருடைய ரேகையும் இருக் குமே!''

"இருக்காது'' என்றாள் அம்மா. "நான் தான் கடைசியாக அடுக்கை எடுத்து சிடை யைப் போட்டு மூடி வைத்தேன். மத்த யாரும் அடுக்கைத் தொடவே இல்லை. இருந்தா என்ரேகை மட்டும்தான் இருக் கும்''

"சரி, நான் பார்க்கிறேனே?''- சீனு ஒவ் வொருவராக அழைத்தான்.

எல்லோரும் வந்தனர். தங்கள் வலது கை விரல் ரேகையை வெள்ளைத் தாளில் பதித்தனர். அதே தாளில் அவர்கள் பெயரைக் குறித்தான் சீனு..

ரேகைப் பதிவு முடிந்ததும் அவரவர் கள் தங்கள் இடங்களில் அமர்ந்தனர். பூதக் கண்ணாடியைக் கையில் எடுத்துக் கொண்டு, கரிய நிறத்தூள்களால் பதிப்பித் திருந்த ரேகைகளுடன், ஊதா நிற ரேகை களை ஒவ்வொரு தாளாக எடுத்து ஒத்திட் டுப் பார்க்கத் தொடங்கினான் சீனு.

"அம்மா சொன்னது சரி. அவளுடைய ரேகை இருக்கு. ஆனால், அது தவிர மற்ற ரேகைகளும் இருக்கே! அது ஒருரத்தரோட ரேகையா, பல பேருடைய ரேகையான்னு குழப்பமா இருக்கே! கவனமா பார்க் கணும்'' என்றான் சீனு பூதக் கண்ணாடி வழியாக ஒரு கண்ணால் பார்த்துக் கொண்டு.

கூடி இருந்தவர்கள் நாற்காலிகளிலும், தரையிலும் உட்கார்ந்து ஆர்வத்தோடு அவனுடைய செயல்களைக் கவனித்தனர்.

பார்த்து முடித்ததும், சீனு பூதக்

கண்ணாடியை மேஜைமீது வைத்துவிட்டு, ஒரு பெரு மூச்சை விட்டபடி ஏமாற்ற மடைந்த முகத்தோடு எதிரில் இருப்பவர் களைப் பார்த்தான்.

"என்ன?"- அப்பா கேட்டார்.

"அடுக்கு மூடி ரேகைகள் யாருடைய ரேகைகளுடனும் ஒத்துப் போகவில்லை!"

''அப்போ, வெளியிலிருந்துதான் திருடன் வந்து, கால் அடுக்கு சீடையை எடுத்துக் கொண்டு விட்டு, பாக்கி முக்கால் அடுக்குச் சீடையை விட்டு விட்டுப் போயிருக்கிறான் என்கிறாயா?"

"சொல்ல முடியாது. இருக்கவும் இருக்க லாம்!"

"அப்பமுன்னா?"

அமைதி நிலவியது. சீடையைத் திருடித் தின்றவர்கள் வீட்டிலுள்ளவர்களைத் தவிர வேறு யாராக இருக்க முடியும்?

"சீனு!" என்று கூப்பிட்டுக் கொண்டே மாமா ஏதோ ஒரு முடிவுடன் அவனை அணுகினார்.

"என்ன?"- நிமிர்ந்து, சற்றே முகத்தில் பீதி கௌவ சீனு, தன்னை நோக்கி வரும் மாமாவைப் பார்த்தான்.

"உன் விரல் ரேகைகளையும் பதிவு பண்ணி, ஒத்திட்டுப் பாரு."

"எதுக்கு?"

''அந்த ரேகைகள் உன்னுடையது இல்லை என்பதற்கு என்ன ஆதாரம்? உன்னுடையதையும் பதிவு பண்ணிப்பார்"

"நான் பதிவு பண்ண மாட்டேன். இங்கே ஐயா நான் நீதிபதி. நீதிபதியை யாரும் விசாரிக்கக் கூடாது. அந்த உரிமை யாருக்கும் இல்லை."

''நீதிபதியாவது, மண்ணாங்கட்டி யாவது! கொண்டாடா கையை" பலவந்த மாக அவனுடைய கையைப் பற்ற முனைந் தார் மாமா.

மாமாவின் கையை உதறிவிட்டு, சீனு நகர்ந்து நின்றான். பான்ட் பாக்கெட்டி னுள் கையை விட்டு, ஏதோ ஒன்றை வெளியே எடுத்து, மாமாவைநோக்கி எறிந்து விட்டு, அந்த இடத்தை விட்டு ஓட்டமாக ஓடி விட்டான் சீனு .

தன்மீது விழுந்து தரையில் உருண்ட பொருளைக் குனிந்து எடுத்தார் மாமா. அது சீடையேதான்!



இன்றே முயன்றிடுவேன்!

எப்படி இந்தச் செயலினை அவர்கள்
செய்திட முடிகிறது? - அதை
அப்படி நானும் செய்திட நெஞ்சில்
ஆசை எழுகிறது!

கையும் மெய்யும் கண்ணும் காலும்
பலவித அசைவோடே - இசை
தையத் தக்கத் தாம்எனச் சேர
நடனம் ஆகிறது!

கல்லில் உளியைக் கவனத் தோடு
தட்டிச் செதுக்கிடவே - அங்கே
மெல்ல ஆணும் பெண்ணும் தோன்றிச்
சிலையாய் ஆகிறது!

சொல்லொடு பொருளும் துள்ளி எழுந்து
சந்த நடைபோட - கற்றோர்
உள்ளம் தன்னைக் கொள்ளை கொள்ளும்
கவிதை ஆகிறது!

எண்ணம் போலக் கோடுகள் பலவும்
சேர்ந்தே ஒன்றாகி - பல
வண்ணம் கொண்ட பூவாய் மயிலாய்
ஓவியம் ஆகிறது!

அறுபத்து நான்கு கலைகள் பிறந்த
அருந்தமிழ் நாட்டினிலே - நான்
ஒருகலை யேனும் பயின்று சிறந்திட
இன்றே முயன்றிடுவேன்!

- தேனி திருமாவளவன்



எங்கள் ஊரில் நடந்தது!

இனாமாக

இப்போது வந்து போன தீபாவளிக்கு முதல் வாரத்தில் ஒரு நாள், நான் என் அம்மா, அக்கம் பக்கத்து வீட்டுப் பெண்கள் சிலரும் துணிமணி வாங்கக் கும்பகோணம் போனோம். துணிகள் வாங்கிய புதுப்புதுப் பைகளோடு மதியம் திரும்பும் போது பழவகைகளைக் கூறு கட்டி விற்றுக் கொண்டிருந்த ஒரு தள்ளுவண்டிக்காரரிடம் பழங்கள் வாங்கினோம். எங்களில், எனக்குப் பெரியம்மா முறையான வயதானவர், பழவண்டிக்காரரிடம், "ஏம்பா முப்பது ரூபாய்க்குப் பழங்கள் வாங்கியிருக்கிறேனே! ஒரே ஒரு சாத்துக்குடிப் பழம் இனமாகக் கொடுங்களேன்?" என்று கேட்டார். அதற்கு வண்டிக்காரர், "அம்மா! மூவாயிரம் ரூபாய்க்குத் துணி



எடுக்கறீங்க. ஒரு 'பிட்' துணி இனாமாகக் கேட்பது தானே! எங்களைப் பார்த்தால் மட்டும் இளப்பமாகத் தெரிகிறதா?'' என்றாரே பார்க்கலாம். அதற்கு மேல் யாரும் எதுவும் பேசாமல் நகர்ந்தோம்.

கா. சசிகலாசரோஜினி. காரைக்கால்.

ஏரியில் போடு!



சமீபத்தில் என் தம்பியின் சட்டையைத் துவைக்கும் போது சில இடங்களில் ஏதோ கறை இருப்பதைப் பார்த்தேன். "என்னடா இது! எப்போது பார்த்தாலும் சட்டையில் ஏதாவது கறை பண்ணிக்

கொண்டே வருகிறாய்?" என்று சலிப்புடன் கூறினேன். அவனோ, சர்வசாதாரணமாக 'ஏரியல்' போடுக்கா. போயிடும், என்று சொன்னான். அருகில் இருந்த பாட்டி 'இப்போ ஏரியில் உள்ள தண்ணீரெல்லாம் சிவப்பாக இருக்குமே. ஏரியில் துவைத்தால் இன்னும் அழுக்காகி விடும்'' என்று கூறினார். 'ஏரியல்' என்பது துணி துவைக்கப் போடற சோப்புத் தூள் பாட்டி. பக்கத்தில் உள்ள ஏரி அல்ல, என்று பாட்டிக்கு விளக்கம் கொடுக்க, பாட்டி உட்பட அனைவரும் சிரித்தோம்.

தே. மஞ்சுளா, ஆலங்காயம்.

விழாப் பேருந்து!

நானும், என் அண்ணன் மகள் சரண்யாவும் வேளாங்கண்ணி திருவிழாவுக்குச்



செல்வதற்காக வேதாரண்யம் பேருந்து நிலையத்தில் பஸ்ஸுக்காகக் காத்திருந்தோம். பல மார்க்கங்களிலிருந்தும் பேருந்துகள் வருவதும் போவதுமாக இருந்தன. அப்போது வேளாங்கண்ணி திருவிழா நடைபெற்றுக் கொண்டிருந்ததால் சோழன் போக்குவரத்துக் கழகம் பல்வேறு வழித்தடப் பேருந்துகளிலும் "விழாப் பேருந்து" என்ற அச்சிட்ட தாளை ஒட்டியிருந்தது. என் அண்ணன் மகள் அதைப் படித்து விட்டு ''என்னப்பா, விழாப் பேருந்து என்று போட்டுள்ளதே? அப்படின்னா மற்ற பஸ்ஸில் போனால் விழுந்துவிடுவோமா?'' என்றதும் கூடி இருந்தவர்கள் எல்லாம் 'கொல்'லென்று சிரித்து விட்டனர்.

பஞ்சவர்ணமகன், கறுப்பன்பாளையம்.

முதல்ல

எனது அக்கா மகன் சுந்தர்ராமுக்கு



வயது மூன்று. அவன் ரொம்ப சுட்டி! ஒரு இடத்தில் சும்மா உட்கார்ந்திருக்க மாட்டான். அன்று அவனது தொல்லை தாங்காமல் "சுந்தர்!.. இங்கே வா! படம் போட்டுக் காண்பிக்கிறேன்!" என்று அவனுக்கு 'யானை, பாம்பு, ஆமை, குரங்கு' படமெல்லாம் தரையில் வரைந்து காட்டினேன். உடனே அவன் "எனக்கு யானை போட்டுக் காட்டு சித்தி!" என்றான். நான் அப்பொழுது தான் யானை போட்டேன். திரும்ப போடச் சொல்லுகிறானே என்று "டேய்!... முதல்லே போட்டுக் காட்டினேனே...? நீ பார்க்கலையா?" என்றேன். அதற்கு அவன் "முதலையா?... எங்க சித்தி முதலை!" என்று தரையில் முதலையைத் தேட ஆரம்பித்தான் எனக்கு ஒரே சிரிப்பு. நான் "முன்பு" என்பதை முதல்லே என்று சொன்னதும் அவன் தப்பாகப் புரிந்து கொண்டு விட்டான்.

கவிதா வீராசுவாமி, முடிகொண்டான்.

அறிவியல் ஆசிரியர்

எங்க வகுப்பு சயின்ஸ் ஆசிரியரை, அறிவியல் ஆசிரியர் என அழைப்போம். ஆனால், அதற்கு அவர் கடும் எதிர்ப்புத்



தெரிவிப்பார். "இனி அப்படிக் கூப்பிட் டீங்கன்னா நடக்கறதே வேற..." என ஒரு நாள் கோபப்பட்டார். "ஏன்சார் அப் படி...?" என அவரை கோரஸாகக் கேட் டோம்... "அதுவா..? எனக்கு முன்னாடி அறிவியல் ஆசிரியர்னு சொல்லுவீங்க... நான் இல்லாத போது, அதையே பின் னாடி அறிவில்லாத ஆசிரியர்னு கிண்டல் அடிக்க ஆரம்பிச்சிடுவீங்க.... அதைத் தவிர்க்கத் தான்..." என்றாரே பார்க்கலாம். உடனே வகுப்பே சிரித்து விட்டது.

இரா. திலிப், திருச்சி-14.

எத்தனை ஜீரோ?

எங்கள் கணித ஆசிரியர் முத்துசாமி மிகவும் வித்தியாசமானவர். அவர் கேட் கும் கேள்விகளுக்கு டக்கென்று விடை




சொல்ல இயலாது. அன்றும் அப்படித் தான் ஒரு மாணவனை எழுப்பி "ஆயிரத் துக்கு எத்தனை ஜீரோ?" என்றார். அவன் "மூன்று ஜீரோ ஸார்" என்றான். பிறகு இன்னொரு மாணவனை எழுப்பி "ஆயிரத் துக்கு மூன்று ஜீரோ என்றால் இரண் டாயிரத்துக்கு எத்தனை ஜீரோ?" என்று கேட்டபோது அவன் "ஆறு ஜீரோ ஸார்" என்றானே பார்க்கலாம்! ஒரே சிரிப்பு தான்!

இராம. ஜெயகாந்தன், துத்திபட்டு.

அப்பா மாதிரியே!

எங்கள் உறவினர் ஒருவருக்குக் குழந்தை பிறந்திருப்பதைப் பார்த்து வர நாங்கள் சென்றோம். என் அம்மா அந்தக்




குழந்தையைப் பார்த்து "அப்பா மாதிரியே அச்சு மாறாம பொறந்திருக்கான்" என்று கொ[illegible] இதைக் கேட்ட என் தம்பி "அம்மா. பொய் சொல்லாதீங்க. அந்த அண்ணனுக்கு மீசை இருக்கே. குழந் தைக்கு இல்லையே?" என்றானே பார்க் கலாம். குபீர் சிரிப்புதான்! அந்த அழகான குழந்தையும் கூட எதேச்சையாக சிரித்தது.

பாசி. கோகுலன், சித்தம்பூண்டி.

உறா!உறா!

எங்கள் பள்ளி ஆண்டு விழாவிற்காக, 'ஹரிச் சந்திரன்' நாடகம் போட்டார்கள். விஸ்வாமித்திரர் பாத்திரத்தில் எனது தோழி சித்ரா நடித்தாள். வசனத்தை எழுதிக் கொடுக்காமல், டைப் செய்து கொடுத்திருந்தனர். மறுநாள் ஒத்திகையின் போது அவள் "ஹரிச் சந்திரா! உன் சத்தி



யம் பலிக்காது, உறா! உறா!'' என்று கூறினாள். எங்களுக்கு ஒரே குழப்பம். கடைசியில் பார்த்தால், 'ஹா' என்ற எழுத்து தட்டெழுத்தில் இல்லாததால் 'உ' 'றா' இரண்டையும் சேர்த்து 'ஹ' என்று அடித்திருந்தார்கள். அவள் அதைத் தவறாகப் புரிந்து கொண்டு விட்டாள். எங்கள் தலைமையாசிரியை உட்பட அனைவரும் சிரித்து விட்டனர்.

நா.ப.ஷோபனா, புதுக்குடி.

விவசாய நீதிபதி

விடைத்தாள்களைத் திருத்திக் கொடுத்தபின், வினாத்தாளை ஆரம்ப முதல் இறுதிவரை படித்துப் பார்த்து, அனைத்து வினாக்களுக்கும் விடை கூறி, ஐயங்களை நிவர்த்தி செய்வது எங்கள் தமிழாசிரியரின் வழக்கம். அவர் ஒரு முறை ஒரு மாணவனிடம் வினாத்தாளைக் கொடுத்து, மொழிபெயர்ப்பு பகுதியில்




"Former Chief Justice' சொல்லுக்கு தமிழ் அர்த்தம் என்ன என்று கேட்டார். அந்த மாணவன் எழுந்து, 'விவசாய முதன்மை நீதிபதி' என்று வாசித்தான். எல்லோரும் சிரித்த சிரிப்பு இருக்கிறதே... இன்றும் என்னால் மறக்க முடியாது...!

கோண்டு மாமா, சென்னை - 116.

மனமுருகிப் பிரார்த்தனை!

வழக்கம் போல தங்கள் குறும்புத்தனங்களால் அக்கம் பக்கத்தாரை மகிழ்வித்துக் கொண்டிருப்பார்கள் பிரசன்னாவும் அவன் தம்பி மணிகண்டனும். 22.12.95 அன்று இருவரும் வானொலி செய்தி கேட்டுக் கொண்டிருந்தார்கள். பள்ளி ஆண்டு விழாவின்போது ஏற்பட்ட



விபத்தால் ஹரியானா மாநிலத்தில் 300க்கும் மேற்பட்ட பள்ளிக் குழந்தைகள் உயிரிழந்த செய்தி கேட்டு அதிர்ச்சி அடைந்தார்கள். டிசம்பர் மாதம் இயேசு பிறந்த நாள். எல்லா சமய இறைவழிபாடும் செய்யும் இவர்கள் அன்று, உயிரிழந்த தங்கள் சகோதரர்களுக்காக மனமுருகி பிரார்த்தனை செய்தது எங்கள் கண்களில் கண்ணீரை வரவழைத்தது!

சச்சிதானந்தம், நாமக்கல்.

டிக்கெட் கிழிஞ்சிருக்கு!

ஒரு நாள் பேருந்தில் கும்பகோணம் சென்று கொண்டிருந்தேன். அப்போது ஒரு

நிறுத்தத்தில் ஒரு பெண் ஐந்து வயதுச் சிறுவனுடன் பேருந்தில் ஏறினார். ஏறியவுடன் கண்டக்டர் அந்தப் பெண்ணிடம் டிக்கெட்டைக் கொடுத்துவிட்டு பணம் கேட்டார். அந்தப் பெண் ஒரு இரண்டு ரூபாய் நோட்டைக் கொடுத்தார். கண்டக்டர் அந்தப் பெண்ணிடம் "பணம் கிழிஞ்சிருக்கு வேறு நோட்டைக் கொடு" என்றார். உடனே அந்தப் பெண்ணோடு வந்த சிறுவன் கண்டக்டரிடம், "எங்களை ஏமாத்தப் பார்க்குறியா! நீ தந்த டிக்கெட் கூடக் கிழிஞ்சிருக்கு! வேற டிக்கெட் கொடு" என்றான். உடனே பேருந்தில் இருந்த அனைவரும் சிரித்து விட்டோம்.



டிரைவர் உட்பட..

த. விஜயராஜ், கும்பகோணம்.


அற்புதம்

நான், என் தம்பி அனைவரும் பழங்காலத்து சினிமா ஒன்றைப் பார்த்தோம்.




அதில் ஒரு காட்சியில் தன் நாட்டைப் புகழ்ந்து ஒரு புலவர் கவிதை பாடுகிறார். அதைக் கேட்ட மன்னன் "ஆகா, அற்புதம்!" என்று கூறிப் பரிசளித்தார். இதைப் பார்த்த என் தம்பி, "அண்ணா, அற்புதம் என்றால் என்ன?" என்றான். அதற்கு நான் பாராட்டுதல் என்றேன். ஒரு நாள் நாங்கள் கடை வீதிக்கு சென்றுக் கொண்டிருந்தோம். வழியில் எங்கள் அம்மா ஒரு அழகான வீட்டை பார்த்து "அற்புதமான வீடு!" என்றார். இதை கேட்ட தம்பி, "அம்மா அந்த வீடு என்ன கவிதையா பாடுது? அதைப் போய் அற்புதமான வீடுங் கறியே?" என்று கேட்க ஒரே சிரிப்புதான்.

எல். சேகர், திருச்சி-6.



"நம்ப ராமுவுக்கு டெஸ்ட்டுன்னாலே ஒரே பயம்! பிளட் டெஸ்டுன்னாக்கூட போக மாட்டேங்கறான்!"

— சோமசேகர்



தெளிவு

எட்டாம் வகுப்புப் படிக்கும் பரமசிவம், விநாயகம், முருகன் மூவரும் நெருங்கிய நண்பர்கள்.

பரமசிவம் படிப்பில் கெட்டி; முதல் ரேங்க் அவன்தான். விநாயகம் இனிய குரல் உடையவன்; நன்றாகப் பாடுவான். முருகனோ விளையாட்டு வீரன்.

மாலை நேரம். நண்பர்கள் மூவரும் மகிழ்ச்சியாகப் பேசிக் கொண்டிருந்தனர். "படிப்பு, பாட்டு, விளையாட்டு ஆகியவற்றில் எது சிறந்தது?" என்று கேட்டான் பரமசிவம்.

விளையாட்டில் திறமை படைத்த முருகன் விளையாட்டுதான் சிறந்தது என்றான். பாட்டில் ஆற்றல் கொண்ட விநாயகம் பாட்டுதான் என்றும், பரமசிவமோ படிப்பே என்றும், அழுத்தம் திருத்தமாகப் பேசினர்.

மூவரும் அவரவர் கட்சியையே பேசியதால் எந்த முடிவுக்கும் வர முடியாமல் போனது. தமிழாசிரியரைக் கேட்டு நம் சந்தேகத்தைத் தீர்த்துக் கொள்வோம் என்று முடிவு செய்தனர்.

தமிழ் வகுப்பு. ஆசிரியர் வந்ததும் பரமசிவம் தங்கள் பிரச்னையை எடுத்து முன் வைத்தான்.

எல்லாவற்றையும் கேட்ட தமிழாசிரியர், "ஒரு மனிதனுக்கு உணவும் உடையும் உறைவிடமும் எப்படி முக்கியமானவையோ, அப்படித்தான் படிப்பும் பாட்டும் விளையாட்டும்" என்றார்.


"இன்னும் விளக்கிக் கூறுங்கள் ஐயா," என்றனர் மாணவர்கள்.


"உடலுக்குக் கண்கள் முக்கியமா? செவிகள் முக்கியமா? இல்லே, வாய் முக்கியமா? மூன்றும் மூன்று சிறப்பான பணிகளைச் செய்து மனிதனை முழுமையாக்குகின்றன. அதே மாதிரித்தான் இதுவும். இவை ஒவ்வொன்றும் ஒவ்வொரு விதத்தில் சிறப்பானவை" என்றார் ஆசிரியர்.

மாணவர்கள் தெளிவு பெற்றனர்.

— பொறையாறு கணேசன்







என்ன கடிதம்?

கோடை விடுமுறைப் போட்டி - 1

இங்கே மொத்தம் 25 படங்கள் இருக்கின்றன. இவை ஒவ்வொன்றிலும் சொற்களாக அமையும் சில எழுத்துகள் மறைந்துள்ளன. படத்தையும் அதிலுள்ள குறிப்பையும் கொண்டு இந்த எழுத்துக்களைக் கண்டு பிடித்து, குறித்துக் கொண்டே வாருங்கள். இவைகளைப் பொருத்தமாகச் சேர்த்து அமைத்தால், அழகான ஒரு கடிதம் வரும். அதை ஓர் அஞ்சலட்டையில் எழுதி, முகவரிக் கூப்பனையும் ஒட்டி, உங்கள் முழு முகவரியையும் தந்து, அனுப்புங்கள். ஒன்றுக்கு மேற்பட்டவர்கள் சரியான விடை எழுதியிருந்தால் குலுக்கல் முறையிலேயே முடிவு செய்யப் படும். முகவரிக் கூப்பன் இல்லாமல் வருபவை ஏற்கப் படமாட்டா. அயல் நாட்டு வாசகர்கள், கண்டிப்பாகத் தங்கள் இந்தியத் தொடர்பு முகவரியைத் தர வேண்டும். தபாலில் ஏற்படும் தாமதங்களுக்கு கோகுலம் அலுவலகம் பொறுப்பல்ல. முடிவு தேதி 31.5.96. ஆசிரியர் தீர்ப்பே முடிவானது.

ஆசிரியர் கோகுலம்
47, ஜவாஹர்லால் நேரு சாலை,
ஈக்காட்டுதாங்கல், சென்னை - 600 097.



கோபி கல்லை எடுத்தான். "அண்ணா, மாங்காய் அடிக்காதே. காவல்காரன் பார்த்தால் நம்மைக் கட்டிப் போட்டு அடிப்பான்" என்றாள் மீனா.

"நீ சரியான பயந்தாங்கொள்ளி. வாயை மூடிக்கிட்டு இரு. நான் எப்படி சரியாக் குறி பார்த்து அடிக்கறேன்னு பாரு. கிழவி மாதிரி போதனை பண்ணாதே" - கோபி கோபமாகக் கூறினான்.

"அண்ணா, மாம்பழம் சாப்பிடணும்னா அம்மாகிட்டே சொல்லியிருக்கலாமே? வாங்கித் தராமலா போவாங்க?"

"உனக்கு ஏன் ஒண்ணுமே புரிய மாட்டேங்குது? 'திருட்டு மாங்காய் சாப்பிடறதுல தனி ருசி' அனுபவிச்சிருந்தால் நீயும் கையிலே கல்லை எடுத்திடுவே" - கோபி எகத்தாளமாகக் கூறினான்.

"நீ எப்பத்தான் மாறப் போறியோ? நேர்வழியிலே கிடைக்காத எதற்கும் நான் ஆசைப்படவே மாட்டேன். பள்ளிக்கு நேரமாச்சு. நான் போறேன். தாமதமானால் தண்டனை வேறு கிடைக்கும். நீ வருகிறபோது வா" - மீனா பள்ளி நோக்கி விரைந்தாள். வழிநெடுக மீனாவுக்குத் தன் அண்ணனைப் பற்றிய யோசனை. 'எவ்வளவு கூறியும் மாங்காய் திருடும் பழக்கத்தை விடமாட்டேங்கறானே!' என்று கவலைப்பட்டாள். சாப்பிடுவதற்கான நேரம் வந்ததும்



அண்ணனின் வகுப்பிற்குச் சென்றாள்.

"இன்றைக்கு நீ மட்டும் வந்திருக்கியே! உன் அண்ணன் கோபிக்கு உடம்புக்கு என்ன?" - விஜய் கேட்டான்.

"கோபி இன்னும் வரலியா? என்று மனம் பதைத்த மீனா கடவுளே, அண்ணனுக்கு எதுவும் ஆயிருக்கக் கூடாது. காப்பாற்று" - என்று அண்ணனுக்காக வேண்டிக் கொண்டாள். அவள் கண்களில் கண்ணீர் நிறைந்தது. சாப்பாட்டைக் கூட மறந்து பிரார்த்தனை செய்தாள்.

மாலையில் பள்ளிவிட்டதும் நேராக மாந்தோப்புக்கு விரைந்தாள். மாந்தோப்பில் பெரிய மீசையுடைய காவல்காரன் தடியோடு நின்றிருந்தான்.

"ஏய், பொண்ணு, என்ன வேணும் உனக்கு? ஏன் இங்கேயே நிற்கறே?"

"சும்மா அதட்டாதீங்க. அண்ணனைத் தேடி வந்தேன்" - தைரியமாகப் பதிலளித்தாள் மீனா.



"கொஞ்சம் கூட பயமில்லாமல் பேசறியே! உன் 'மாங்காய்த் திருடன்' அண்ணன் இன்றைக்கு மாட்டிக்கிட்டான். அழுதுக்கிட்டே இருக்கான்" - காவல்காரன் கூறினான்.

"நான் நேர்மையா இருக்கும்போது உங்களுக்கு ஏன் பயப்படணும்? இங்கேயிருந்து அண்ணனைக் கூட்டிட்டுப் போகாமல் நகர மாட்டேன்" - மீனா உறுதியுடன் கூறினாள்.

"உன் திருட்டு அண்ணன் வழக்கப்படி கல்லடிச்சுப் பார்த்திருக்கான். மாங்காய் எதுவும் விழலே. அதனால மரமேறிப் பறிக்க முயன்று கால் சறுக்கி விழுந்துட்டான். எழுந்திருக்க முடியலை. அப்பத்தான் எங்கிட்டே வசமா அகப்பட்டுக்கிட்டான். அவன் கால் சுளுக்கைக் களிம்பு தடவிச் சரியாக்கினேன். எஜமானரிடம் பிடித்துக் கொடுப்பதற்காக இப்போ கட்டிப் போட்டிருக்கேன்" - காவல்காரன் சொல்லி முடித்த அதே நேரத்தில் தோப்பின் எஜமானர் அங்கு வந்தார். நடந்ததை எல்லாம் கேட்ட அவர் கட்டிப் போடப்பட்டிருக்கும் கோபியைக் கூட்டிவரச் சொன்னார்.

"ஏம்மா, நீயே சொல்லு? உன் அண்ணனுக்கு என்ன தண்டனை தரலாம்?"

"எந்தத் தண்டனையும் வேண்டாம். விட்டிடுங்க ஐயா!"

காவல்காரனும், மாந்தோப்பு எஜமானரும் வியந்தனர்.

"திருட்டுக் குற்றம் செய்தவனுக்குத் தண்டனை வேண்டாமா? இது என்ன நியாயம்?"

"நான் அப்படிச் சொல்ல வரலை ஐயா. ஒரு தப்புக்கு இரண்டு தண்டனை கொடுப்பது

திருட்டு ருசியைவிட..!

நியாயம் இல்லே என்று சொன்னேன்."


எஜமானரும் காவலாளியும் புரியாமல் விழிக்க மீனா தொடர்ந்தாள்.

"எங்க அண்ணன் மாங்காய் திருடியது தப்புதான். அதற்குத் தண்டனையாகத்தான் அவன் மரத்திலிருந்து கீழே விழுந்து வலியை அனுபவிச்சுட்டான். இனித் திருடவும் மாட்டான். அதனால் இன்னொரு தனி தண்டனை அண்ணனுக்கு அவசியமில்லை."

"தம்பி, உன் தங்கைக்குத்தான் நீ நன்றி சொல்லணும். இந்தச் சின்ன வயசுல திருடக் கூடாது என்ற நல்ல பண்பும், அண்ணனைக் காப்பாற்ற வேண்டும் என்ற பொறுப்பும் அவளிடம் இருப்பதைக் கண்டு பெருமைப்படறேன். இனிமேல் மாங்காய் திருடுகிற தப்பை நீ செய்யக் கூடாது. காவலாளியிடம் கேட்டு, வேண்டிய மாங்காய்களை எடுத்துக் கொள். அப்படியே இதோ இந்த இரண்டு மாம்பழங்களை நீயும், உன் தங்கையும் எடுத்துக் கொள்ளுங்கள்" - மாந்தோப்பு எஜமானர் சந்தோஷமாகக் கூறினார்.

"அண்ணா, தயங்காமல் சாப்பிடு. நேர்மைக்குப் பரிசாகக் கிடைத்த இந்த மாம்பழத்திற்குத் திருட்டு மாங்காயைவிட ருசி அதிகம்" - சிரித்தபடியே மீனா கூறினாள்.

அ. சு. கிருஷ்ணன்



சிட்டுக் குருவியின் ஆனந்தம்

ஒரு பெரிய ஆலமரத்தில் சிட்டுக் குருவி ஒன்று கூடுகட்டி வாழ்ந்து வந்தது.

ஒருநாள் சிட்டுக்குருவி தன் குஞ்சுக்கு இரை கொண்டு வந்து கொடுத்து தின்னச் சொன்னது. அதற்கு அந்தக் குஞ்சு, "அம்மா அம்மா, நான் ஒரு கதை சொல்றேன். நீ அதைக் கேட்டால்தான் இரையைத் தின்பேன்" என்றது. தன் செல்லக் குழந்தையின் அன்பு வேண்டுகோளைத் தாய்க் குருவி ஏற்று, "சரி சொல்" என்றது.

குருவிக் குஞ்சு கதை சொல்லத் தொடங்கியது. "ஒரு குளத்தில் ஒரு மீன் இருந்தது. அது ஒரு துன்பமும் இல்லாமல் தண்ணீரில் அங்கும் இங்குமாக மகிழ்ச்சியோடு நீந்திக் கொண்டிருந்தது.

"ஒருநாள் குளத்தின் கரையில் ஒரு கொக்கு வந்து அந்த மீனைத் தின்பதற்காகக் காத்திருந்தது. அந்த மீன் வெளியில் தலையை நீட்டியபொழுது, காத்திருந்த கொக்கு அதை 'லபக்'கென்று கொத்திப் பிடித்துக் கொண்டது. அகப்பட்டுக் கொண்ட மீன், கொக்கைப் பார்த்து, "ஏ, கொக்கண்ணா, நான் சாவதற்கு அஞ்சவில்லை. ஆனால், எனக்கு வெகு நாட்களாக ஓர் ஆசை. அது மட்டும் நிறைவேறினால் நான் ஆனந்தமாக உயிர் விடுவேன்" என்றது உருக்கமாக.

கொக்கு மீனைக் குளத்தின் படி மீது விட்டுவிட்டு "அது என்ன ஆசை?" என்று கேட்டது.

"நான் ஒரு கதை சொல்கிறேன் நீங்க கேட்க வேண்டும்?" என்றது.

"அப்படியா! கதை என்றால் எனக்கும் ரொம்பப் பிடிக்கும். நல்ல கதையாகச் சொல்!" என்றது கொக்கு.

மீன் கதை சொல்ல ஆரம்பித்தது.

"ஒரு காட்டில் ஒரு நரி வசித்து வந்தது. ஒரு சமயம் அது திராட்சைத் தோட்டத்தின் வழிரே சென்று கொண்டிருந்தது. பழுத்துத் தொங்கிக் கொண்டிருந்த திராட்சைப் பழங்களைப் பார்த்த நரி, அவைகளைத் தின்ன வேண்டுமென்று ஆசைப் பட்டது. பழம் கொடியில் சற்று உயரத்தில் இருந்ததால், பழத்தைத் தின்பதற்கு இந்த மாதிரித் துள்ளிக் குதித்தது" என்று மீன் ஒரு முறை துள்ளிக் குதித்துக் காட்டியது.


"அப்போதும் நரிக்குத் திராட்சை எட்டவில்லை. மீண்டும் ஒரு முறை இம் மாதிரிக் குதித்தது. அப்பொழுதும் பழம் எட்டவில்லை. பிறகு ஒரே மூச்சாக இப்படி எகிறிக் குதித்தது" என்று சொல்லி, அந்தக் கெட்டிக்கார மீன் தண்ணீருக்குள் தாவிக் குதித்து மறைந்து விட்டது.

கொக்கு ஏமாற்றத்தோடு முகத்தைத் தொங்கப் போட்டவாறு வேறு ஏதாவது அசட்டு மீன் சிக்காதா என்று மறுபடியும் தவம் செய்யத் தொடங்கியது."

"இவ்வளவுதான் கதை" என்று குருவிக் குஞ்சு கதையை முடித்தது.

இக்கதையைக் கேட்ட தாய்க் குருவிக்கு ஆனந்தம் தாங்க முடியவில்லை. தன் குஞ்சின் கற்பனைத் திறனைக் கண்டு மிகவும் பூரித்துப் போயிற்று.

— தக்கோலம் அ. முஸ்தபா



தனக்கு வந்தால்?




குழந்தை கவிஞர் ஆழ வள்ளியப்பா நினைவுச் சிறுகதைப் போட்டியில் வெளியிடத் தேர்ந்தெடுக்கப் பட்ட போட்டிக் கதை - 8

பெரியசாமித் தாத்தா, மதியழகனின் அம்மாவிடம் அல்லாடிக் கொண்டிருந்தார்.

"மதியழகா...! மதியழகா... எலே பேராண்டி, எங்கடா போனே? ஓ! சாப்பிடறியா? சாப்பிடு, சாப்பிடு, இந்தாம்மா மருமவளே... என் பேரன் என்ன இவ்வளவு கொஞ்சமா கொறிக்கிறான்? கறிகாய் எல்லாம் நிறையச் சாப்பிடச் சொல்லும்மா அவனை; கீரையோ, பாவக்காயோ எதுவானாலும் பரவாயில்லே... எந்தக் கறிகாய் செஞ்சாலும் நிறையச் சமைக்கணும். புள்ளைங்களை நிறையச் சாப்பிட வைக்கணும். சாதத்துக்குத் தொட்டுக்கக் கறிகாய் இல்லேம்மா. கறிகாய்க்குத் தொட்டுக்கத்தான் சாதம்! அப்பத்தான் தெம்பு இருக்கும். எலே மதி, நான் பாட்டுக்குப் பேசிக்கிட்டே இருக்கேன்; நீ பாட்டுக்குக் கறிகாய் எல்லாம் சாப்பிடாம ஏதோ பேருக்குக் கொறிக்கிறியே! இப்படிக் கொறிச்சால் என்னை மாதிரி வயசானதும், பிற்காலத்திலே கண் தெரியாது, காது கேட்காது, உடம்பிலே வலு இருக்காது. நான் சின்னப் புள்ளையா இருக்கும் போது கம்பங்கூழும், கேப்ப அடையும் தின்னுட்டு..." பெரியசாமித் தாத்தா சொல்லிக் கொண்டே போனார்.

மதிக்குக் கோபமான கோபம்! 'என்ன வீடு இது! வர, வர இந்தத் தாத்தாவின் தொல்லை தாங்கவே முடியலயே! நான் குழந்தையா இருந்த போது, தாத்தா நல்லபடியா, பிரியமா இருந்தார். ஆவல் தூண்டும் விறுவிறுப்பான கதைகளைச் சொல்லி, தோட்டத்திலே மூலிகைச் செடியெல்லாம் வச்சு, அதையெல்லாம் எப்படிப் பரா

டி. விவேக்



மரிக்கறதுன்னு சொல்லிக் கொடுத்து... எப்படிபட்ட இலட்சியவாதித் தாத்தாவா இருந்தார்! இப்ப, இப்படித் தொண தொணப்புத் தாத்தாவாயிட்டாரே! வயசானாலேயே இப்படித் தொண தொணக்கும் குணம் வந்துடுமா! இப்படி அறு அறுன்னு அறுக்கிறாரே!" என்று தனக்குள் அலுத்துக் கொண்டான்.

மதி என்ற மதியழகன், இப்போது ஒன்பதாவது படிக்கும் மாணவன். சின்ன வயதில் இருந்த மாதிரி இல்லை அவன். இப்போ சாப்பாடு ருசி எல்லாம் வேற! விதம் விதமா வறுவல், பொறியல், மசாலா... என்று கேட்கும் நாக்கு! தாத்தாவுக்கோ பழங்கால ருசி! ஒரு காலத்தில் தாத்தாவுக்கு என்ன எல்லாம் பிடித்ததோ, அதெல்லாம் அவனுக்கும் பிடித்தது. தாத்தாதான் அவனுடைய உலகமாக இருந்த போது அந்த நிலை. ஆனால், இப்போ அவனுடைய உலகம் தாத்தாவைக் கடந்து வெளியே பரந்துவிட்டிருந்தது! அந்த ருசி மட்டும் விதிவிலக்கா என்ன? அதுவும் மாறிவிட்டது.

ஆனால் தாத்தா பாவம்! அவருக்கு இதெல்லாம் புரியவில்லை. அவருக்குப் பிடித்ததை எல்லாம் இவன் மேல் திணிக்கிறார்!

மதி முகத்தைக் கோபமாக வைத்துக் கொண்டு, "தாத்தா எனக்குப் பள்ளிக்கு நேரமாச்சு. சாயங்காலம் பார்க்கலாம்" என்று சொல்லிவிட்டு சைக்கிளை எடுத்தான்.

தாத்தா விடவில்லை. "இருடா இருடா மதி" என்று வாசலுக்கே வந்துவிட்டார்.

"மதி, சைக்கிள்ள மெதுவாப் போடா, இந்த பஸ்ஸுக்காரங்க, லாரிக்காரங்க 'சர், சர்'ன்னு எமன் கணக்கா குறுக்கேயும் நெடுக்கேயும் வரானுங்க. நாம்தான் கவனமா போகணும். என்ன? மெதுவா இடப் பக்கமா போ. உம்மேல் மோதிடப் போறாங்க, சாக்கிறதை' என்று கத்திக் கொண்டே பெரியசாமித் தாத்தா வீட்டை விட்டு இறங்கி, தெருவில் பாதி தூரம் வந்து விட்டார்!

"சரி, தாத்தா சரி. நீ வீட்டுக்குப் போ" என்று மதி இரைந்து கத்திக் கொண்டே படுவேகமாக சைக்கிளை மிதித்தான்.

மதிக்கு காலை ஏழு மணிக்கு கண் விழித்து, இரவு பதினொறு பன்னிரண்டு வரை டீ.வி. பார்த்துவிட்டுத் தூங்கப் போகத்தான் பிடிக்கும். பெரியசாமித் தாத்தாவோ இதற்கு நேர் எதிர். அவர் அதிகாலை ஐந்து மணிக்கே எழுந்து பச்சைத் தண்ணீரில் குளித்துவிட்டு, "தோடுடைய செவியன் விடையேறி" என்று தேவாரத்தை ராகமாகப் பாடிக் கொண்டு பூஜை செய்ய ஆரம்பித்து விடுவார் அவருக்கு பச்சைத் தண்ணீரோ மழையோ ஒன்றும் செய்யாது. ஆனால் மதிக்கோ, வருடத்தில் ஒரே ஓர் முறை தீபாவளியன்று விடிகாலை நாலரை மணிக்கு எழுந்து குளித்தால் கூட தாங்காது! ஒரு மாதத்திற்கு சளி, ஜல தோஷம்தான்.

இப்படித்தான் ஒருமுறை, மதி தன் நண்பர்களோடு சினிமா சென்று விட்டுத்

திரும்பும் போது மழை பெய்து இலேசாக நனைந்து விட்டான். வீட்டுக்கு வந்த உடனேயே சளி, தும்மல் இருமல் வந்து விட்டது. தாத்தா பதறிக் கொண்டு உடனே மழையில் நனைந்தபடி தோட்டத்துக்குச் சென்று கொஞ்சம், துளசியும், தூதுவளையும் கொண்டு வந்து கஷாயம் செய்து தேனில் கலக்கித் தந்தார். அவனுக்கும் தாத்தாவின் வைத்தியத்தில் அப்போதெல்லாம் அசைக்க முடியாத நம்பிக்கை இருந்ததால், மறுப்பேதும் கூறாமல் சாப்பிட்டு விட்டு, படுக்கச் சென்றான். மறுநாள் காலையில் சளி இருமல் இருந்த சுவடே இல்லை!

அடுத்த நாள் விடுமுறையாதலால் நண்பர்கள் எல்லோரும் கிரிக்கெட் விளையாட மதியையும் அழைத்திருந்தனர். மதி வழக்கம் போல் தாமதமாக எழுந்து என்னவோ கொறித்து விட்டு விளையாடச் சென்று விட்டான். காலை பத்து மணிக்கு விளையாடச் சென்றவன் இரண்டு மணிக்குத்தான் வீடு திரும்பினான். வெயிலில் விளையாடியதால், தலைவலியோடு வந்தான்.

மதியின் வருகைக்காகவே காத்திருந்தவர் போல தாத்தா அவன் தலையைக் கண்டதுமே, ''மதியழகா, தெருமுனையில் இருக்கிற மருந்துக் கடைக்குப் போய் மூட்டு வலிக்கு மருந்து வாங்கியாடா கண்ணு. கால் குடைச்சல் தாங்கலேப்பா'' - என்று அவனைக் கெஞ்சினார்.

தலைவலி, காய்ச்சல் எல்லாம் சேர்ந்திருந்ததால் சோர்ந்து போயிருந்த மதி, உடனேயே வெடுக்கெனப் பேசினான். "போ தாத்தா! வர வர உன் தொல்லை தாங்க முடியல. அங்க போகாதே, இங்க போகாதே டீ.வி. பாக்காதேன்னு வர வர ரொம்ப கொத்தி எடுக்கறே. அதுவிட்டா இந்த மாதிரி கடைக்குப் போ கண்ணிக்குப் போன்னு வேலை வைக்கறே! இந்த மாதிரி தொணதொணக்கிற தாத்தா பாட்டியோட தொண தொணப்பை எல்லாம் தாங்க முடியாமதான், எவனோ ஒரு புண்ணியவான் 'முதியோர் இல்லம்' கட்டியிருக்கான் போலிருக்கு... தாத்தா நீ உன்னை மாத்திக்காம இந்த மாதிரியே தொண தொணத்துகிட்டு இருந்தேன்னா, நானே அப்பாகிட்ட சொல்லி உன்னையும் முதியோர் இல்லத்தில் சேர்க்கச் சொல்லிடுவேன். நானே தலைவலி தாங்காம வந்திருக்கேன். இதுல உனக்குவேற மாத்திரை வங்கித் தரணுமா? அதுக்கு வேற ஆளைப் போய்ப் பாரு!'' - மதி கோபம் தாங்காமல் பொறுமை இழந்து கத்தினான்.

தாத்தாவின் முகம் அதிர்ச்சியால் வாடியது. எனினும் சமாளித்துக் கொண்டு, "பேராண்டி, தலைவலிதானே! கஷாயம் போட்டுத் தரேன். அதைக் குடிச்சிட்டு நீ படு. ஒரு தூக்கம் போட்டு எழுந்ததும் தலைவலி ஓடிப் போயிடும்'' - என்று கஷாயம் வைத்துக் கொடுத்து அவன் நெற்றி, தலையை மெல்ல வருடிக்



கொடுத்தார்.

மதிக்கு திடீரென உடம்பு என்னவோ செய்தது. கண்கள் இருண்டன. எங்கேயோ நிறைய படிக்கட்டுகள் வழியாக மேலே, மேலே ஏறிக் கொண்டே செல்வது போலத் தோன்றியது. அப்பாடா! கொஞ்சம் வெளிச்சம். ஆனால், ஐயையோ! என்ன இது! மதி திடீரென இவ்வளவு கிழவனாக ஆகிவிட்டானே!

பின்னாலேயே ஒரு குரல். "தாத்தா... மதித் தாத்தா! எங்க போறீங்க?" மதி திரும்பிப் பார்த்தான்(ர்) அவன் சாயலிலேயே சுமார் பதினான்கு வயது மதிக்கத் தக்க சிறுவன் ஒருவன் நின்றிருந்தான்.

"ஏன் தாத்தா முழிக்கிறீங்க? சனி கிரகத்தில் புதுசா சனீஸ்வரன் கோயில் கட்டிருக்காங்கன்னு அங்க போயிருந்திங்களே! அதுக்குள்ள மறந்திடுச்சா? எங்களையெல்லாம் மறந்துட்டீங்களா? நான் தான் உங்க பேரன் கோகுல். இப்பத்தான் அப்பாவும், அம்மாவும் உங்களைக் காணாமல் அழைத்து வர ராக்கெட் ஸ்டேஷனுக்குப் போயிருக்காங்க! அதுக்குள்ளே நீங்களே வந்துட்டீங்களே?" என்றான் சிறுவன்.

மதி தாத்தா கோகுலுடன் வீட்டிற்குச் சென்றார். கோகுலிடம் தன் மகன், மருமகள் பெயர்களைக் கேட்டுத் தெரிந்து கொண்டார். அங்க ஏதோ ஒரு கேலண்டர் மாதிரி இருந்த அட்டையில் 2068 ஆம் வருடம் என்று இருந்தது. ஆனால், தான் எப்படி இவ்வளவு கிழவனாக ஆனோம் என்றோ, தன் மகன், பேரன் இவர்களின் பெயர்கள் கூட எப்படி மறந்து போயிற்று என்றோ யோசிக்க, யோசிக்க, அவருக்கு மண்டை வெடித்து விடும் போலிருந்தது!

மதி தாத்தாவுக்கு, தன் பையனைவிட பேரன் கோகுலை ரொம்பவும் பிடித்திருந்தது. கோகுலை 'எலே பேராண்டி' என்றழைக்கவும் விருப்பமாக இருந்தது. அவர் மருமகளோ, அடுப்போ நெருப்போ இல்லாமல் மைக்ரோ ஓவன் அடுப்பு எனச் சொல்லிக் கொண்டு ஏதோ சமைத்துக் கொடுத்தாள். அது ஒன்றும் அவர் நாக்கிற்குப் பிடிக்கவில்லை. அந்தக் காலத்தில் சமையலும், கறிகாயும், வறுவல், பொரியல், மசாலாவும் எவ்வளவு சுவையாக ஆக இருக்கும்! அது போலச் செய்து போட்டால் இவர்களுக்கு என்ன? 'பிட்ஸா', 'ஆலு', 'மாலு' என்று இந்த கோகுல் பேராண்டி கூட என்னவோ சாப்பிடுகிறான். எப்படித்தான் சாப்பிடுகிறானோ! உடம்புக்கு என்ன சத்து வரும்?

சரி, அதுதான் போகட்டும். அந்தக் காலத்திலே கமலும், ரஜினியும் நடிப்பார்கள். பாட்டும் டான்ஸூம், சண்டையும் எப்படி இருக்கும்? இப்பவும் தான் கோகுல் சினிமா பார்க்கிறான். ஒரே போர்!

அந்தக் காலத்திலே நான் சைக்கிளிலும், பைக்கிலும் போகலியா என்ன? இந்தப் பசங்க என்னவோ கடைத் தெருவுக்கு போனும்னா கூட நூறு மாடி ஏறி அங்க ஏதோ கிளைடர்னு ஒன்னை நிறுத்தி இருக்காங்களாம். அதைப் புடிச்சுக்கிட்டே பறந்து போயிட்டு வராங்க!

சற்று நேரத்தில், கோகுல் வெளியே போக கிளைடரை எடுக்கச் சென்றான். மதி தாத்தா கவனித்து விட்டு, "எலே கோகுல். பார்த்து மெதுவா போடா.



வானத்திலே ஏரோபிளேனும், ஹெலிகாப்டரும் யமன் கணக்கா வேகமாக பறக்குதுங்க. உன் கிளைடர் மேல மோதிடப் போறதுங்க'' எனக் கத்திக் கொண்டே அசுரவேகத்தில் நூறு மாடிப் படிகளையும் கடந்து ஏறி வந்து விட்டார். அவனோ, "சரி சரி தாத்தா, நீங்க போய்ப் படுங்க தாத்தா" என்று சொல்லிவிட்டு வேகமாகப் பறக்க ஆரம்பித்தான்.


லிஃப்ட் இருப்பது தெரி யாமல் மதி தாத்தா நூறு மாடிகளில் மெதுவாக இறங்கி வந்தார். அவர் மனம் முழுவதும் கோகுலையே நினைத்துக் கொண்டிருந்தது. நூறு மாடி ஏறி இறங்கியதால் அவருக்கு மூட்டு வலி வந்து விட்டது.

"சரி, கோகுல் வந்தால் ஏதேனும் மாத்திரை வாங்கித் தரச் சொல்லலாம்' என்று நினைத்துக் கொண்டு மதி தாத்தா படுத்துக் கொண்டார்.

சிறிது நேரத்தில் கோகுல் வந்தான். பள்ளி அளவில் நடை பெற்ற கிளைடர் போட்டியில் அவன் கடைசியாக வந்திருந்தான். அதனால் பயங்கரக் கடுப்போடு இருந்தான். அவன் வந்தவுடனயே தாத்தா மூட்டு வலிக்கு மாத்திரை வாங்கித் தரும் படி கேட்க அவன் வெடித்தான்.

''தாத்தா, வர வர உங்க தொண தொணப்பு தாங்க முடியல! அங்க போகாதே இங்க போகாதே, இதைப்படி, அதைப்படி வேகமாப் போகாதேன்னு..... சே! உங்களை மாதிரி கிழங்களுக்காகத்தானே நிலாவையே 'முதியோர் இல்லமா' இப்போ மாத்தியிருக்காங்க? அப்பா கிட்டே சொல்லி அடுத்த மாசம் நிலாவுக்கு போற ராக்கெட்டுல உங்களுக்கு ஒரு டிக்கெட் ரிசர்வ் செய்துடச் சொல்ல வேண்டியது தான்'' என்று கத்திவிட்டு உள்ளே சென்றான்.

மதி தாத்தாவுக்கு ஒரே அதிர்ச்சி. "ஐயையோ, நிலவுக்கா பேராண்டி! எலே கோகுல், என்னை இந்த வயசான காலத்திலே அங்கே கொண்டு விட்டுடாதேடா. அங்க எனக்குத் தெரிஞ்ச மனுசங்க யாருமே இருக்க மாட்டாங்க. என்புள்ள, மருமவ, நீ, மத்த சொந்த பந்தம்... இவங்களையெல்லாம் பாக்காம, நம்ம வீட்டு சாப்பாட்டைத் திங்காம, முன்னே பின்னே தெரியாத வயசானவங்களோட, உடம்புக்கு வந்தாக்கூட, எனக்குனு கவலைப்படற மனுசங்க இல்லாம.... நான் எப்படிடா அங்க போய் இருப்பேன்?'' என்று அழ ஆரம்பித்து விட்டார்.



மதி தாத்தாவுக்கு இப்போதுதான் பழைய நினைவுகள் எல்லாம் தோன்றின. முன்பு, தன் தாத்தாவைத்தான் இப்படியே பயமுறுத்தியது போக, இப்போது தனக்கே அதே

நிலைமை... ஏற்பட்டு விட்டதே! அது சரி, தாத்தா அப்பா, அம்மா எல்லோரும் ஆனார்கள்?

கவலையை மறக்க அவர் சிறிது தூரம் வாக்கிங் சென்றார். இலேசாகத் தூறல் போட்டது. அத்துடன், என்ன ஆச்சரியம்? அவனுடைய அன்புத் தாத்தாவின் குரல் அல்லவா கேட்கிறது...! வானத்திலிருந்து தாத்தா தேவதையாக மாறிப் பேசுகிறாரோ? மறுபடியும் குரல் கேட்டது. "எலே மதி, பேராண்டி எழுந்திருய்யா! கஷாயம் குடிச்சிட்டு அப்படியே மதிமயங்கித் தூங்கிட்டியா? எழுந்து மூஞ்சி கழுவிட்டு சாப்பிடவா" என்றதும் தான் மதிக்குத் தெரிந்ததுதான் இத்தனை நேரம் கண்டது கனவு என்று.

தாத்தா, மதியின் முகத்தில் தண்ணீர் தெளித்து எழுப்பிக் கொண்டிருந்தார். அது தான் இலேசான மழையோ!' வருடம் 2064 என்று தான் கண்டது, தன்னுடைய தேர்வு எண் என்றும் தெரிந்தது. ராக்கெட் கிளைடர் மற்ற கிரகங்கள் சம்பந்தா சம்பந்தம் இல்லாமல் கனவில் தோன்றியதே... ஓ! நேற்று இரவு டீ.வி.யில் பார்த்த அறிவியல் தொடரின் விளைவோ, என்று நினைத்துக் கொண்டே எழுந்து சென்று முகம் கழுவி விட்டு, சாப்பிட்டான்.

பெரியசாமித் தாத்தாவிடம் சென்று, "தாத்தா, தாத்தா, நாளைக்கு உங்களுக்கு புடிச்ச கீரை வாங்கிட்டு வரணும். அப்புறம் நீங்க ரொம்ப வருஷம் நல்லா மகிழ்ச்சியோட இருந்து எங்களுடனேயே இருக்கணும். எங்களை விட்டு விட்டு எங்கேயும் போகக் கூடாது. நான் ஏதாவது உங்களைப் பேசியிருந்தாலும் தப்பா எடுத்துக்கக் கூடாது'' என்று சொல்லவும். பெரியசாமித் தாத்தா ஆச்சரியத்துடன் அவனைப் பார்த்தார். மூலிகை கஷாயம் சாப்பிடாமலேயே அவருக்கு இன்ப அதிர்ச்சியில் மூட்டு வலி பஞ்சாகப் பறந்து போய்விட்டது!

தென்னை வயது!




இயற்கையின் நன்கொடையான மனித இனம், விலங்கு, பறவை, தாவரங்கள் போன்ற எல்லாவற்றிற்கும் ஆண்டுக்கு ஆண்டு வயது கூடுகிறது. எத்தனை வயதாகிறது என்பதை அறிய மனிதன் தன் அனுபவத்தையும் அறிவையும் கொண்டு சில வழிகளைக் கண்டு பிடித்து வைத்திருக்கிறான். குதிரையின் வயதையும், மாட்டின் வயதையும் பல்லைப் பார்த்துக் கண்டு பிடிக்கலாம். மனிதனின் வயதை அவன் நெற்றி, முகச் சுருக்கம், தலை முடியை பார்த்துக் கண்டு பிடிக்கலாம். ஆமையின் வயதை அதன் ஓட்டு வரிகளை வைத்து அறியலாம். கழுகின் வயதை அதன் கழுத்தின் தோற்றத்தைப் பார்த்துக் கண்டு பிடிக்கலாம். மரங்களின் வயதை அதன் அடிமரமேல் முடிச்சுகள், குறுக்கே வெட்டி அதில் காணப் படும் வளைய ரேகைகள் உதவி கொண்டு அறியலாம். தென்னை மரத்தின் வயதை எப்படிக் கணக்கிடுவது? தென்னை மரத்தை வைத்திருப்பவர்கள், அது அடிக்கடி மட்டை உதிர்ப்பதைக் கவனித்திருப்பார்கள். இந்த மட்டை உதிர்ந்த இடத்தில் ஒரு கால் வளைய வடு இருக்கும். இது மரத்தைச் சுற்றிலும் காணப்படும். இது தென்னை மரத்திற்கு அழகைத் தருகிறது. அதோடு, மரம் ஏறுபவர்களுக்கும் இந்த வளையம், வழுக்கி விழாமல் இருக்கப் பெரிதும் உதவுகிறது. இந்த வளையங்களை வைத்து தென்னை மரத்தின் வயதைக் கணக்கிடுகிறார்கள்.

புத்தனாம்பட்டி சி. மணி.

ஓடினால் குள்ளவாத்து என்னவாகும்?

ரேவதி



வாத்து மந்தை ஏரிக்கரை மேட்டில் ஏறிவிட்டது. கண்ணுக்கு எட்டிய தூரம்வரை அலைமோதும் நீரைக் கண்டதும் மட்டில்லாத மகிழ்ச்சி. 'க்வாக்' 'க்வாக்' சத்தம் 'சேர்ந்து பாடுவோம்' இசையாகக் கேட்டது. 'கிடுகிடு' வென்று எல்லாம் இறக்கத்தில் இறங்கின.

"பொன்னி, ஒன்னையும் இறங்க விடாதே. இதுக இறங்கி நீந்த ஆரம்பிச்சிட்டா, ஒன்று சேர்த்துக் கூட்டி வரது திண்டாட்டம். தெற்குக் கரையோரம் குட்டை இருக்குது பார். அதுல இறக்கிவிடலாம். திரட்டிக்கிறதும் சுலபம். இதுங்களுக்கு இரையும் தாராளமாகக் கிடைக்கும்'' என்றான் பூவரசன்.

சரிவில் இறங்கிக் கொண்டிருந்த வாத்து மந்தையைக் கையில் இருந்த நீண்ட குச்சியால் தட்டித் தடுத்து மேட்டுக்கு விரட்டினாள் பொன்னி. மறுபக்கம் அவைகளை விரட்டியபடி நடந்தான் பூவரசன். மந்தை, குட்டையை நோக்கி ஆடி ஆடி நடந்தது.

திடீரென்று சைக்கிள் மணிச் சப்தம்!

"ஏரிக்கரை மேட்டுல யாரு சைக்கிள்ள வரது?" என்று சலிப்புடன் கேட்ட பூவரசு, "பொன்னி, சைக்கிள் போகப் பாதைவிட்டு, இதுங்களை ஒதுக்கி ஓட்டு. மந்தைக்குள்ள சைக்கிள் புகுந்தா, வாத்துங்க திண்டாடும்" என்று அவசரம் அவசரமாகக் குச்சியை வீசி "த... த..." என்று தானும் ஒதுக்கினான். மந்தையின் அகலம் குறைந்து நீளம் அதிகமானது.

அப்படியும் விடாமல் மணியை அடித்துக் கொண்டு வந்த சைக்கிள் இறங்கி, மந்தைக்குள் புகுந்துவிட்டது. பரபரப்பான 'குவாக்' சப்தம். பீதி அடைந்த வாத்துகள் சிதறிக் கலைந்தன. இந்தப் பரபரப்பில் சைக்கிள் சாய்ந்து கீழே சாய, சேகரும் சிதாவும் பரிதாபமாக நின்றனர்.

''என்ன சார், வாத்து மந்தை போவுதுன்னு தெரியுதுல்ல? ஐஸ்கிரீம் காரன் மாதிரி மணி அடிச்சுக்கிட்டு வரீங்களே! உங்களுக்காகத் தானே பாதையை விட்டுட்டு, ஒதுக்கமா ஓட்டிக்கிட்டுப் போறோம்? அப்படியும் நேரா அதுங்க பாதையிலேயே வந்து விரட்டறீங்களே?'' என்று கோபமாகக் கேட்டான் பூவரசு.

''என்ன தம்பி கோபப்படறே? உங்களையும் உங்க வாத்து மந்தையையும் பார்க்கணும்னுதானே வேகமா வந்தோம்?'' என்று சமாதானக் குரலில் பதிலளித்த சேகர், சைக்கிளைத் தூக்கி, ஸ்டாண்டைப் போட்டு

நிறுத்தினான். காமிராவில் பட்டிருந்த மண்ணைத் தட்டிக் கொண்டாள் சீதா.

"பட்டணக்காரங்க அண்ணா. வேணும்னு செய்யலே," என்று பரிந்து பேசினாள் பொன்னி. அதை உணர்ந்து கொண்ட பூவரசும் அதற்குமேல் ஒன்றும் பேசவில்லை. ஒருவழியாக வாத்து மந்தையைக் குட்டையில் இறக்கி, நீந்தி இரை தேட விட்டுவிட்டு வந்தனர் பொன்னியும் பூவரசும்.

அப்பொழுதுதான் ஏரிக்கரை மேட்டின் மறுபக்கம் இறக்கத்தில் இருந்த அழகிய குடிசையை சேகரும், சீதாவும் பார்த்தனர். பூவரசும், பொன்னியும் குடிசையை நோக்கி நடக்க, இருவரும் பின்தொடர்ந்தனர். குடிசையின் வாசல் பக்கத்தில் கூட சில வாத்துகள் புல்வெளியில் மேய்ந்து கொண்டிருந்தன!

"தம்பி, இந்த வாத்துங்க எல்லாம் உங்களுடையதா? எத்தனை வாத்து இருக்கும்?" என்று ஆவலாகக் கேட்டான் சேகர்.

"எங்களுதுதான். எண்பத்திரண்டு வாத்துங்க இருக்கு."

"எத்தனை அழகா நீந்துது அண்ணா!" என்று வியந்து கொண்ட சீதா, காமிராவைத் தட்டிவிட்டாள்.

"ஆமாம், இத்தனை வாத்துகளையும் ஒரே கூட்டமாத்தானே வளர்க்கிறீங்க...? இதுங்களுக்குள் சண்டை, தாக்குதல் எல்லாம் வராதா...?"

கேள்வி கேட்ட சேகரை, கிளிஞ்சல் பொறுக்கிக் கொண்டிருந்த பொன்னி, வியப்புடன் பார்த்தான்.

"சண்டை சச்சரவு எல்லாம் மனிதர்களுக்குள்தான். வாத்துங்க சண்டையே போடாது. ஒற்றுமையா இருக்கும். கூட்ட உணர்வு ரொம்ப. இரை தேடும் போதும், நீந்தும்போதும் விட்டுக் கொடுத்து ஒற்றுமையைக் காக்கும்."

பொறுக்கிய கிளிஞ்சல் குவியலைக் கல்லில் வைத்து, சிறிய கல்லால் இடிக்கத் தொடங்கினான் பொன்னி.

"கொஞ்சம் மணலும் ஒரு கை வைச்சுப் பொடி" என்றான் பூவரசு.

"எதுக்கு இதை இடிக்கிறீங்க?"
சீதாதான் கேட்டாள்.

பொன்னி பதிலளிக்குமுன், இரண்டு வாத்துகள் கரையேறி ஆடி ஆடி நடந்து பொன்னிக்கு அருகே வந்து அவனை நிமிர்ந்து பார்த்தன.

"இடிக்கிற சத்தம் கேட்டதும் ஓடி வந்துட்டிங்களா? பூரா இடிக்க வேண்டாமா?" என்று கொஞ்சியபடி கேட்டான் பொன்னி.

"க்வாக்' 'க்வாக்' என்று குரலெழுப்பி நெருங்கி வந்தன வாத்துகள்.

"நாம்ப கேட்பதைப் புரிஞ்சுக்குமா?" என்று ஆவலுடன் கேட்டான் சேகர்.

"அதுங்களுக்கு வேண்டிய சமாசாரமா இருந்தா புரிஞ்சுக்கும்."

"இத்தனை நேரம் நீரில் நீந்தின அடையாளமே தெரியலையே! துடைச்சு விட்ட மாதிரி உடம்பு இருக்கே?"




''பட்டு மாதிரி எப்படி இருக்கு!''

"ரெண்டு பேருமா சேர்ந்து கண்ணு போடாதீங்க" என்று அதட்டிய பொன்னி, ஒரு வாத்தை எடுத்து, குழந்தையை இடுப்பில் வைத்துக் கொள்வதுபோல் தூக்கி வைத்துக் கொண்டாள்.

''வாத்துங்க நீரில் இருந்தாலும் அதுங்க உடம்பிலே நீர் ஒட்டாது. இதுங்களுக்கு வால் பக்கத்தில் ஒரு சுரப்பி இருக்கு. இதுல எண்ணெய் மாதிரி ஒரு திரவம் கசிஞ்சிக்கிட்டே இருக்கும். இதை அடிக்கடி தங்கள் அலகால் எடுத்து, சிறகுகளில் கோதிப் பூசிவிடும். இதனால், எத்தனை நேரம் நீரில் இருந்தாலும் இதுங்க உடம்பில் துளிகூட நீர் ஒட்டாது" என்றான் பூவரசு.

"இதுங்களுக்கு என்ன தீனி போடுவீங்க?"

"தீனியை நாம்ப போடவே வேண்டாம். இதுங்களே தேடிக்கும். நீர் நிலைகளில் நீந்தும்போதே அலகைத் திறந்து சேற்றையும் நீரையும் நிரப்பி, அலசி, நீரை வெளியே வழியவிட்டு, தங்கும் புழு பூச்சிகளை உணவாக்கிக் கொள்ளும். அறுவடையான வயல்களில் புழு பூச்சிகளைக் கொத்தித் தின்னும். இவை கிடைக்காதப்போதான் தானியங்களைத் தீனியாகத் தரும்படி இருக்கும். இவைகளின் எலும்பு வளர்ச்சிக்கும் சுண்ணாம்புச் சத்து அவசியம் தேவை. அதுக்காகத்தான் கிளிஞ்சலைப் பொடிக்கிறேன். இதை இதுங்க விரும்பித் தின்னும்'' என்றாள் பொன்னி.



"இதுங்க கூடு கட்டி முட்டை இடுமா?"

சேகரின் கேள்வியைக் கேட்டுப் பூவரசு சிரித்தான்.

''இதெல்லாம் குள்ளவாத்து. ஆங்கிலத்தில் Duckகுன்னு சொல்றீங்களே, அதுதான் இது. இதுங்க நினைச்ச இடத்துல முட்டை இடும். ஆண்டுக்கு ஒரு வாத்து 180 முட்டைகள் இடும்."

"அப்பாடி!"

"பத்து ஆண்டுகளில் 1800 முட்டைகளா!"

"இதுங்க பத்து ஆண்டுகளெல்லாம் இருக்காது. மூன்று அல்லது 3½ வருடம் தான் இதன் ஆயுள்."

"இத்தனை முட்டைகளை இது எப்படி அடைகாக்கும்?"

"இதுங்க எங்கே அடைகாக்கும்? அதெல்லாம் இதற்குத் தெரியாது. இதன் முட்டைகளைப் பெரும்பாலும் கோழிகள்தான் அடைகாத்துப் பொரிக்கும்."

"இதுங்களெல்லாம் வேகமா ஓடினால் ஆனால் நீந்தினால் ரொம்ப அழகா இருக்கும். இதற்கு நேர்மாறானது கூஸ் வாத்து."

"ஆமாம். இத்தனை வாத்துகளையும் வளர்க்க உங்க வீட்டிலே நிறைய இடம் இருக்கா?"

"கோழிகளுக்குத்தான் தனி இடம் தேவை. இதுங்களுக்குக் கூரை கூடத் தேவையில்லே. திறந்தவெளியில், தட்டி அடைப்புகளுக்குள் தங்கிக்கும்."

அறிவியல் உண்மைகள்:

▶ வாத்துகள் அன்னப் பறவையின் சந்ததிகள். உலகெங்கும் உள்ளவை. முக்கிய பிரிவுகள் இரண்டு. குள்ளவாத்து (Duck), கூஸ் வாத்து (Goose). இரண்டுக்கும் நிறைய வேறுபாடுகள் உண்டு.

▶ கிராமங்களில் சாதாரணமாக இறைச்சிக்காகவும், முட்டைக்காகவும் வளர்க்கப் படுபவை குள்ளவாத்து இனம். இவை கூட்ட உணர்வு உள்ளவை. அமைதியானவை. நீந்துவதில் மகிழ்ச்சி உள்ளவை. குட்டைக் கால்கள் சவ்வால் இணைந்தவை. வேகமாக நடந்தால் முன்பக்கம் குப்புற விழுந்துவிடும்.

▶ திறமையாக அடைகாக்கத் தெரியாதவை. அதனால் பெரும்பாலும் கோழிகளே இவைகளின் முட்டைகளை அடைகாக்கும். ஆண்டுக்குச் சராசரி 180 முட்டைகள். மூன்று அல்லது 3½ ஆண்டுகளே உயிர் வாழும்.

▶ நீர் நிலைகளில் உள்ள புழு பூச்சிகளை அலகால் சேறுடன் விழுங்கி, நீரை வெளியே விட்டுவிட்டு, தங்குபவற்றை உண்ணும். பயந்த குணமுடையவை. சுண்ணாம்புச் சத்துக்காகக் கிளிஞ்சல்களை விரும்பி உண்ணும்.

▶ கோழி, ஆடு மாடுகளை வளர்க்கும் இடங்களில் குள்ளவாத்து மந்தை இருந்தால், எளிதில் கால்நடைகளுக்கு நோய் ஏதும் வராது. காரணம், குள்ளவாத்துகள் கால்நடைகளுக்கு நோய் உண்டாக்கும் புழு, பூச்சி, நத்தை, மீன்களைப் பிடித்துத் தின்றுவிடும்.

"பேராசை பெருநஷ்டம் கதையில் வரும் பொன் முட்டை இடும் வாத்து இந்த இனம்தானே?" என்று கேட்டாள் சீதா.

"இல்லே. கதையில் வரும் வாத்து கூஸ் (Goose) இனம். இது குள்ளவாத்து இனம். இரண்டுக்கும் நிறைய வித்தியாசம். ஆனால் இரண்டையுமே எல்லோரும் வாத்துன்னு சொல்றதாலே, ரெண்டுக்கும் பல பேருக்கு வித்தியாசம் தெரிவதில்லே. இந்தக் குள்ளவாத்துக்கு நீண்ட தட்டை அலகு, குறுகிய கழுத்து. குட்டைக்கால். தரையில் நடந்தால் அழகா இருக்காது. என்ன பண்ணுவீங்க?"

"இதுங்களால வேகமா ஓடமுடியாது. ஏன்னா குட்டைக்கால்கள். அவைகளும் உடலின் பின்பக்கத்துக்கு அருகே உள்ளன. அதனால், உடல் எடையைச் சமப்படுத்திக்கிட்டு நடப்பதே ஆடி ஆடித்தான். வேகமா நடந்தால், முன்னோக்கிக் குப்புற விழுந்திடும்."

பூவரசனையும், பொன்னியையும் குள்ளவாத்துக் கூட்டத்துடன் நிற்க வைத்து, புகைப்படம் எடுத்துக் கொண்டான் சேகர்.

உங்கள் நூலகம்



பெரும் புள்ளிகளின் புத்திசாலித்தனமான பதில்கள், பாபநாசம் குறள் பித்தன், பக். 96, ரூ. 18/- மணிமேகலைப் பிரசுரம், 4 தணிகாசலம் சாலை, சென்னை - 17.

உலகப் புகழ்பெற்ற பல்துறைத் தலைவர்கள், சான்றோர்கள் அவ்வப்பொழுது கூறிய புத்திசாலித்தனமான பதில்களை இந்த நூலில் திரட்டித் திறமையாகத் தந்துள்ளார் ஆசிரியர். தமிழ் நாட்டுத் தலைவர்களும் இடம் பெற்றுள்ளனர். உதாரணத்திற்கு இதோ ஒன்று:

டாக்டர் எஸ். ராதாகிருஷ்ணன் அமெரிக்கா சென்றிருந்தார். அந்த நாட்டின் அரசியல் தலைவர் ஒருவருக்கு, இந்தியர்களை மட்டம் தட்டுவதில் அளவில்லாத விருப்பம். "எங்கள் நாட்டில் பாருங்கள். எல்லோருமே வெளுப்பாக இருக்கிறோம். ஆனால், உங்கள் இந்தியாவில் ஒருவர் வெளுப்பாகவும், ஒருவர் கறுப்பாகவும், சாம்பல் நிறமாகவும் கலந்து கலந்து அசிங்கமாய் இருக்கின்றனர்" என்றார் அவர். அவரது பேச்சில் இருந்த கிண்டலை ராதாகிருஷ்ணன் உணர்ந்தார். "இதென்ன அசிங்கம்? கழுதைகள் எல்லாமே ஒரே நிறமாகத்தான் இருக்கும். ஆனால் குதிரைகள்தான் பல வண்ணங்களில் இருக்கும்" என்று பதிலளித்தார். மட்டம்தட்ட வந்த தலைவரின் தலை, குனிந்தது.

இந்த மாதிரி ஏராளமான நிகழ்ச்சிகளும், அவைகளைச் சமாளித்தவர்களின் திறமையான பதில்களும் சுவைபடத் தரப்பட்டுள்ளன. எல்லோரையும் மகிழ்விக்கக் கூடிய நூல்.

நோய்களும் மூட நம்பிக்கைகளும், டாக்டர் பி. பாஸ்கர பாண்டியன், பக். 126, ரூ. 24/- மணிமேகலைப் பிரசுரம், 4, தணிகாசலம் சாலை, சென்னை - 17.

நோய்கள் என்பவை சக்திக் குறைவாலும், தொற்றாலும் வருபவை என்ற உண்மையை அறியாத மக்கள் இன்னமும் இருக்கிறார்கள். இவைகளுக்கு மருத்துவ அடிப்படையில் சிகிச்சை தர வேண்டும் என்ற எண்ணமே இல்லாத மக்களுக்கு இந்த நூல் மிகவும் பயனுள்ளது. நகரங்களில் உள்ள கற்றவர்களிடம் கூட நோய்களைப் பற்றிக்காணும் அலட்சிய நோக்கத்தை ஆசிரியர் இதில் விளக்கி இவைகளை மாற்றிக் கொள்ள வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தியுள்ளார். எல்லாத் தரப்பினருக்கும் வழிகாட்டும் பயனுள்ள நூல்.

தெரியுமா உங்களுக்கு? கே. எஸ். சுப்ரமணி, பக். 192, ரூ. 36/-, மணிமேகலைப் பிரசுரம், 4, தணிகாசலம் சாலை, சென்னை - 17.

கல்கண்டு இதழில் தொடர்ந்து வெளிவந்த சுவையான செய்திகளின் தொகுப்பு. வெளிவந்த போதே வாசகர்களின் பாராட்டைப் பெற்ற இதில், எல்லோரும் படித்து அதிசயிக்கும் பல செய்திகள் தரப்பட்டுள்ளன. புதிய செய்திகளை நாடுவோருக்கு நல்ல விருந்து.


அறிவியல் அறிஞர் சர் ஹம்ப்ரி டேவிட், இ.க. கலியபெருமாள், பக். 64, ரூ. 15/- பழனியப்பா பிரதர்ஸ், 14, பீட்டர்ஸ் சாலை, சென்னை - 17.

இந்தப் பதிப்பகம் தொடர்ந்து வெளியிட்டு வரும் அறிவியல் அறிஞர் 'வரிசையில் இது 19-வது நூல். நிலக்கரிச் சுரங்கத் தொழிலாளர்களுக்குப் பயன்படும் பாதுகாப்பான விளக்கைக் கண்டு பிடித்து அளித்த விஞ்ஞானி ஹம்ப்ரி டேவிட்டின் வாழ்க்கை வரலாறு இது. படிப்பவர்களுக்கு சலிப்புத்தட்டாமல் ஒரு வாழ்க்கை வரலாற்றை எழுதியிருப்பது பாராட்டதக்க முயற்சி சிறப்பான படைப்பு.

சமயம் வளர்த்த சான்றோர் (மாணிக்க வாசகர்) இ.க. கலிய பெருமாள், பக். 80, ரூ. 15/- பழனியப்பா பிரதர்ஸ், பீட்டர்ஸ் சாலை, சென்னை - 14.

திருவாசகம் தந்த மாணிக்க வாசகரின் வாழ்க்கை வரலாறு சிறுவர்கள் படித்து மகிழும் வண்ணம் சிறப்பாக எழுதப்பட்டுள்ளது. தரமான படைப்பு.

சிறுவர் நூல்களும், அறிவியல் பொது நூல்களும் மட்டுமே இந்தப் பகுதியில் இடம் பெறும். நூல்களின் இரண்டு பிரதிகளை ஆசிரியர், கோகுலம், 47, ஜவாஹர்லால் நேரு சாலை, சென்னை - 97 என்ற முகவரிக்கு அனுப்ப வேண்டும். கட்டணம் இல்லை.



16 ஓவரையும் முடிச்சிருக்கணும்!

கிரிக்கெட் ரசிகர்களும், அபிமானிகளும், உணவு உறக்கத்தைக் கூட மறந்து பரபரப்புடன் இருந்தனர். கிரிக்கெட்டைப் பற்றி அதிகம் தெரியாமல் இருந்த வர்களையும் ''குடுகுடு'' தாத்தா பாட்டி களையும் கூட இந்தப் பொல்லாத உலகக் கோப்பை விட்டு வைக்கவில்லை! எத்தனை பரபரப்பு! எத்தனை விதமான திணறல்கள்! எல்லோரையும் தங்களையே மறக்கும்படி செய்த ஆட்டம் ஒருவழியாக முடிந்தது. ஸ்ரீலங்கா கோப்பையைத் தட்டிச் சென்று, உலக கிரிக்கெட் வரைபடத்தில் தங்கள் கொடியை ஏற்றி வைத்துத் திகைப்படைய வைத்திருக்கிறார்கள்! இந்தியாவுக்குக் கோப்பை கிடைக்காது போனாலும், இந்திய ஆட்டக்காரர்களின் ஆட்டம், மற்ற நாட்டு அணியினரின் திறமை எல்லாம் எப்படி இருந்தது என்பதை சென்னை பாற்கடல் சிறுவர் சங்கத்தைச் சேர்ந்த சிறுவர் சிறுமியர் இங்கே அலசுகிறார்கள். எத்தனை எதிர் பார்ப்புகள்! எத்தனை விதமான ஏக்கங்கள்! நீங்களும்தான் கேளுங்களேன்!



டெண்டுல்கர்

விஷ்ணு : எனக்கு ரொம்ப வருத்தம் கார்த்திக்! உலகக் கோப்பைப் பந்தயம், நாலு வருஷத்துக்கொரு தடவைதானே வரது?

சதீஷ் : அட, அப்படித் தான் வரதே... சரியா 'விக்கெட்'டுக்கு நேரா பந்து வந்து விழறமாதிரி, கரெக்டா நம்ம பரீட்சை சமயத்திலே தானா வரணும்?

காயத்ரி தேவி : கிரிக்கெட் வீரர்களுக்கு பெரிய பெரிய மைதானங்கள்லே பலப் பரீட்சை! நமக்கு படிப்பிலே முழுப் பரீட்சை!



• ஆஸ்திரேலியா கேப்டன் டெய்லர்

மைத்ரேயி : ஆமாம்! 'செமி ஃபைனல்' மாட்ச்சுக்குத் தகுதியாகி வரதுக்கு, இந்தியா, ஸ்ரீலங்கா, ஆஸ்திரேலியா, வெஸ்ட் இண்டீஸ் டீம் ஆட்டக்காரர்கள் எப்படியெல்லாம் கஷ்டப்பட்டுட்டாங்க!

கார்த்திக் : ஸ்ரீலங்கா ஃபைனல் ஆட்டத்துக்குத் தகுதியானதும், கோப்பையை வென்றதும் எதிர்பாராதது இல்லையா?

மைத்ரேயி : ஏன் அப்படிச் சொல்றே? ஆரம்பத்துலே இருந்தே அவங்க, நல்லாத்தானே விளையாடியிருக்காங்க! இப்படி அவர்கள் தங்கள் திறமையை வளர்த்துக்கிட்டிருப்பாங்கன்னு நாம எதிர் பார்க்கலே. அவ்வளவுதான்!

கார்த்திக் : சரியா சொன்னே. இதுவரை நடந்த உலகக் கோப்பைப் பந்தய ஆட்டங்கள்லே, ஸ்ரீலங்காவுக்குக் கிடைச்ச வெற்றி பதினாறு சதவிகிதம்தான்! இதுவரை 25 மாட்ச் விளையாடி, 20 மாட்சுலே தோத்திருந்தாங்க!

விஷ்ணு : மற்ற நாடுகளுக்கு?

கார்த்திக் : இந்தியாவுக்கு நாற்பத்தெட்டு. ஆஸ்திரேலியாவுக்கு ஐம்பத்தாறு. வெஸ்ட் இண்டீஸுக்கு எழுபத்தொன்று சதவிகிதம் வெற்றி மதிப்பெண் கிடைச்சிருக்கு!

காயத்ரி தேவி : அப்படியானா ஸ்ரீலங்கா டீமை கண்டிப்பா பாராட்டத்தான் வேணும்!

• ஸ்ரீலங்கா ரணதுங்கே



விஷ்ணு : இந்தமுறை, தொடக்கத்தில் இருந்தே இவங்க உழைப்பை உணர முடிந்தது. ரொம்ப நல்லா 'பிராக்டீஸ்' பண்ணியிருக்காங்கன்னு தெரியுது.

சதீஷ் : இப்போ கால் இறுதி ஆட்டம் வரை எட்டு நாட்டு டீம்கள் எடுத்திருக்கிற ஸ்கோர்லே ஆஸ்திரேலியாதான் அதிக அளவா 289 ரன்கள் எடுத்திருக்கு. அடுத்தது நாம தான் 287 ரன்கள் எடுத்திருக்கோம். ஆனாலும் நமக்கான அதே கதிதான் ஆஸ்திரேலியாவுக்கும்!



சதம் போட்ட நியூஜிலாந்து ஹாரிஸ்
புகைப்படம் : சசி



• அசாருதீன்

மைத்ரேயி : வெஸ்ட் இண்டீஸ் ஆஃப் ஸ்பின்னர் ரோகர் ஹாப்பரை பாராட்டாம இருக்க முடியாது! ஸ்டீவ் பால்பிராமென் அடிச்ச பந்து, எவ்வளவு வேகமா வந்தது! அதைப் பாய்ந்து போய் உடம்பை சாய்ச்சு, ஒரே கையிலே பிடிச்சு விக்கெட்டுக்குத் தூக்கிப் போட்ட காட்சி எத்தனை அமர்க்களமா இருந்தது! பார்க்கப் பார்க்க அலுக்கலையே!

சதீஷ் : அதே மாதிரி நியூஸிலாண்டு ப்ளேயர் சி. ஹாரிஸையும் நிச்சயம் பாராட்டணும்! பதின்மூன்று தடவை. ஃபோர்ஸ் (4 ரன்கள்) அடிச்சிருக்கார். நான்கு தடவை சிக்சர்ஸ்! விறுவிறுப்பான ஆட்டம்.

கார்த்திக் : கொடி கட்டிப் பறந்த இங்கிலாந்து இதுவரை ஆடியிருக்கிற உலகக் கோப்பைக்கான ஆட்டங்கள்ளே 67 சதவிகிதத்துக்கும் மேலே வெற்றியடைஞ்சிருக்கு. இருந்தும் அதுவும் ஸ்ரீலங்காகிட்டே தோத்துப் போனது யாருமே எதிர் பார்க்காதது!

காயத்ரி தேவி : இலங்கையின் திறமையை நாம ரொம்பக் குறைவா நினைச்சிருந்தோம். ஆனா கண்டியிலே நடந்த 'லீக்' மாட்சுலே, கென்யாவை எதிர்த்து ஸ்ரீலங்கா 398 ரன்களைக் குவிச்சு, உலகக் கோப்பை போட்டியிலே பைனலுக்கு முன்னாடியே ஒரு நல்ல ரிகார்டையே உண்டாக்கிட்டாங்க!

விஷ்ணு : பாகிஸ்தான் - இந்தியா ஆட்டத்துல குறைந்த பந்து வீச்சிலே அதிகமான ரன்களை அஜய் ஜடேஜா எடுத்தது. ஆட்டத்துக்கு நல்ல விறுவிறுப்பா இருந்தது. 26 பந்துல 45 ரன் எடுத்திருந்தாரே!

சதீஷ் : சௌத் ஆப்ரிக்கா ஃபீல்டிங் மத்த டீம்களைவிட நல்லாயிருந்தது. ஜோனதான் ஜோன்டி ரோட்ஸோட ஃபீல்டிங் அருமை!

கார்த்திக் : 'போலிங்' பத்தி சொல்லணும்னா, நம்ம டீம்லே லெக் ஸ்பின்னர் அனில் கும்ப்ளேயும், ஆஸ்திரேலியா லெக் ஸ்பின்னர் ஷேன் வார்னேயும் ரொம்ப நல்லா போட்டாங்க!

காயத்ரி தேவி : வாசிம் அக்ரம், அம்ரோஸ் போலிங் கூட ரொம்ப ரசிக்கும்படியா இருந்தது.

விஷ்ணு : 'பாட்டிங்' பத்தி நீ என்ன சொல்றே?

சதீஷ் : ஆஸ்திரேலியா டீம் மார்க் வாப், ஸ்ரீலங்கா டீம் ஜயசூர்யா, இண்டியன் டீம் டெண்டுல்கர் இவங்க பாட்டிங் ரொம்ப நல்லாயிருந்தது.

விஷ்ணு : நிறைய தடவை 'காட்ச்' கூட வந்தது! அடப்பா! எவ்வளவு ஜோரா, ஸ்டைலா பிடிச்சாங்க!

மைத்ரேயி : சஞ்சே மஞ்சரேகரும், அஜாருதீனும், கும்ப்ளேயும் பிடிச்ச காட்ச்சுகள் அபாரம்.

சதீஷ் : பாகிஸ்தான், ஸ்ரீலங்கா, இந்தியா, ஆஸ்திரேலியா, வெஸ்ட் இண்டீஸ் டீம்லே அதிகமான ரன்களை எடுத்திருக்கிற ஆட்டக்காரர்கள் பாகிஸ்தான் டீம்லேதான் இருக்காங்க. ஜேவட் மியாண்டாட் மட்டும் 228 மாட்ச் விளையாடி 7327 ரன்கள் குவிச்சிருக்கார். ராமீஸ் ராஜாவும், சலீம் மாலிக்கும் தனித் தனியா இதுவரைக்கும் 5200 ரன்கள் மேலேயே எடுத்திருக்காங்க.

விஷ்ணு : இவங்களுக்கு எவ்வளவு அனுபவம் ஆயிருக்கும்!

சதீஷ் : இருந்தும் அரையிறுதி ஆட்டத்தை எட்டிப் பிடிக்க முடியாம போயிட்டுதே!

காயத்ரி தேவி : அவங்களை எதிர்த்து விளையாடி ஜெயிச்ச இண்டியன் டீமும்தான் ஸ்ரீலங்காவிடம் கோட்டை விட்டதே!

மைத்ரேயி : இந்த உலகக் கோப்பை விளையாட்டாலே நம்ம சிதம்பரம் ஸ்டேடியத்திலே ஒளிவெள்ளத்தை அள்ளி வீசற மாதிரி ப்ளட் லைட்கள் போட்டிருந்தாங்க! சிதம்பரம் ஸ்டேடியத்துலே முதல் முதலா ப்ளட் லைட்டுலே கிரிக்கெட் விளையாட்டை 40,000 ரசிகர்களுக்கு மேல் பார்த்து சந்தோஷப்பட்டிருக்காங்க!

கார்த்திக் : இவ்வளவு மகிழ்ச்சிக்கு நடுவிலே ஒரு துயரமான நிகழ்ச்சியும் நடந்திருக்கு. தெரியுமா?

காயத்ரி : 13 ஆம் தேதி கல்கத்தாவிலே நடந்ததைத்தானே சொல்றே?

கார்த்திக் : அதுவும்தான்! அதோட கூட, பாகிஸ்தான் தோற்றதைச் சகிக்கக்க முடியாத ஒரு 55 வயது பாகிஸ்தான் ரசிகர் இதய அதிர்ச்சியில் உயிரைவிட்டிருக்கார். இன்னொருவர் தன்கையிலிருந்த துப்பாக்கியால டீ.வியை சுட்டுட்டுத் தன்னையும் சுட்டுக்

கிட்டார்!

சதீஷ் : நல்லவேளை! இந்தியாவிலே அப்படி எதுவும் நடக்கலே. ஆனால் கூட அரை இறுதி ஆட்டத்திலே நமக்கு இப்படிப் பட்ட ஒரு நிலை ஏற்பட்டிருக்கக் கூடாது! வெற்றியும் இல்லாம, தோல்வியும் இல்லாம....

விஷ்ணு : ஆமாம் சே! ரொம்ப வருத்தம் தான். அதோட காம்ளி அழுத முகத்தோடு திரும்பின காட்சி, ரொம்ப வேதனையாயிருந் தது.

மைத்ரேயி : முதல்லேயே இந்தியா பேடிங் செய்திருந்தா 'வின்' பண்ணியிருக்கலாம்னு கூட நினைக்கறேன்!

காயத்ரி தேவி : இருக்கலாம்! ஏன்னா 'பிட்ச்' திருப்திகரமா இல்லைன்னு சில பேர் பேசிக்கறாங்க! இந்தியா 'பேட்டிங்' செய்யும் போது, 'பிட்ச்' முதல்லே இருந்த மாதிரி இல் லைன்னு சொல்றாங்க! இது எந்த அளவுக்கு உண்மைன்னு தெரியல்லே!

கார்த்திக் : ஆட்டமும் ஆரம்பத்திலே படு ஜோரா ஆரம்பிச்சது. நம்ம ஸ்ரீநாத் வீசின நாலு பந்துலேயே, ஸ்ரீலங்கா ஜெயசூர்யாவும், கலு வித்தானாவும் 'காட்ச்' கொடுத்து 'அவுட்'டா யிட்டாங்க!

சதீஷ் : இரண்டு பக்கமும் விக்கெட் சரிவை யும், எடுத்த ரன்களையும் கவனிச்சா, இந்தியா வோட பேட்டிங் முதல் பகுதியிலே நல்லாத் தான் வந்திருக்கு! ஸ்ரீலங்கா 2 விக்கெட்டுக்கு ஒரு ரன்தான் எடுத்திருந்தது. ஆனா நாம அதே 2 விக்கெட்டுக்கு 98 ரன் எடுத்திருந்தோம்.

விஷ்ணு : டெண்டுல்கரும் மஞ்சரேகரும் நிதானமா விளையாடி ஸ்கோரை திருப்தியாத் தான் ஏத்திக்கிட்டிருந்தாங்க!

மைத்ரேயி : ஸ்ரீலங்கா 4 விக்கெட்டுலே 85 ரன்கள் எடுத்திருந்தப்போ நாம அதே 4 விக் கெட்டுலே 101 ரன்கள் எடுத்திருந்தோமே!

காயத்ரி தேவி : இருந்தும் கூட 'ரன் ரேட்' குறைவாத்தானே இருந்துக்கிட்டிருந்தது?

கார்த்திக் : ஸ்ரீநாத் ஏழு ஓவர் போட்டு 3 விக்கெட் எடுத்தது! பாராட்ட வேண்டிய விஷயம்.

சதீஷ் : ஸ்ரீநாத்துக்கு அடுத்தபடியா போலிங் செய்ய வந்த அனில் கும்ப்ளேயும் ஸ்ரீலங்கா வோட 'பேட்டிங்'கை கட்டுப்படுத்தி வச்சிருந் தார். ஆனா கும்ப்ளேயை நிறுத்திட்டு, பிர சாத்தை போலிங் செய்ய அனுப்பிச்ச போது தான் ஸ்ரீலங்கா வேகமா ரன் எடுக்க ஆரம்பிச் சுட்டாங்க!

விஷ்ணு : ஆசிஷ் கபூர் போலிங் செய்ய வந்த போது ஸ்ரீலங்காவோட ஸ்கோர் வேகமா ஏற ஆரம்பிச்சுட்டுது.

மைத்ரேயி : நாம இழந்த 8 விக்கெட்டுலே 4 விக்கெட்டுகள் 'ரன்'னே இல்லாம போச்சு! கேப்டன் அசாருதீன், ஜடேஜா, அசிஷ்கபூர்,



"உங்க பையன், தானே சீவிக்குவான்னு சொன னீங்களே. ஆனா ஒவ்வொரு முறையும் நான்தான் பென்சிலை சீவித் தர வேண்டியிருக்கு!"

"நான் சொன்னது, அவன் தலையை அவனே சீவிக்குவான்னு!"

— கி. சிவா, சென்னை

கும்ப்ளே, இப்படி ரன்னே எடுக்காமல் 'அவுட்' ஆகியிருக்க வேண்டாம்.

காயத்ரி தேவி : கால் இறுதி ஆட்டத்திலே ஸ்ரீலங்கா 236 ரன் எடுத்து ஜெயிச்சது; இந்தியா 287 ரன் எடுத்து ஜெயிச்சது; ஆனா அரை யிறுதி ஆட்டத்துலே ஸ்ரீலங்கா 251 ரன்தான் எடுத்தது. இதை தாண்டி இந்தியா நிச்சயமா ஸ்கோர் பண்ணியிருக்க முடியும். இந்திய ரசிகர்கள் கொஞ்சம் பொறுமையா இருந்திருக் கலாம்!

கார்த்திக் : இன்னும் 16 ஓவர், 2 விக்கெட் இருந்தது. இதுலே எவ்வளவு ரன்தான் எடுக்க முடியறதுங்கறதையும் பார்த்திருக்கலாம். வீணா எட்டு விக்கெட்டுக்கு 120 ரன்தான்கிற நிலைமை இந்தியாவுக்கு ஏற்பட்டிருக்கு!

விஷ்ணு : கதையைப் பாதியிலே நிறுத்தற மாதிரி, ஆட்டத்தையே நிறுத்திட்டு, "ஸ்ரீலங் காக்கு வெற்றி"ன்னு சொல்லும்படியான நிலைமை வந்துட்டுதே!

சதீஷ் : மீதி 16 ஓவரையும் இந்தியா விளையாட எப்படியாவது அனுமதிச்சிருக்க ணும். இப்படிச் செய்திருந்தா இந்தியாவோட உண்மையான பலம் எல்லோருக்கும் தெரிஞ் சிருக்கும்!

மைத்ரேயி : நடுவிலே ஆட்டத்தை நிறுத் திட்டு, இப்படி முடிவைச் சொல்ற முறை சரி தானான்னும் தெரியல்லே!

காயத்ரி தேவி : எதிர் காலத்துலேயாவது ரசிகர்களோட ஏமாற்றம், எரிச்சல்னால ஆட்டம் இப்படி நிறுத்தப்படாமல் இருக்க எல்லா ஏற்பாடுகளையும் பண்ணணும். சம்பந் தப்பட்டவங்க அதற்கான நடவடிக்கைகளை எடுக்கணும்!


பேட்டி : **எஸ்.ஆர்.ஜி. சுந்தரம்**

♦ முதல் பக்கத்திலேயே, முதல் சிரிப்பே ஏற்கனவே வெளியானதைப் போட்டு அலுப்பு தட்ட வைக்கின்றீரே சார். இனியாவது நன்கு கவனமாயிருங்கள் .
இராம. ஜெயகாந்தன்,
துத்திப்பட்டு.

♦ சற்று வாக்கிய கதைப் போட்டியில் நான் அனுப்பிய கதை தேர்வு பெறவில்லையே என்ற வருத்தம் இருந்தாலும், தேர்வு பெற்ற கதைகளைப் படிக்கும் போது, அடுத்த முறை கதைப் போட்டி வந்தால் நிச்சயம் இது போன்ற 'மணியான' கதைகளை எழுதி அனுப்ப வேண்டும் என்ற எண்ணம் வந்து விட்டது.
தேவனாங்குறிச்சி,
பா. வடிவேல்.

♦ கமலவேலனின் படிக்காத பாடம் நாடகம் இன்றைய இளைஞர்களுக்கு ஓர் தலை சிறந்த பாடமாகும்.
- வரகூர் மா. தேசிகன், சின்னாளம்பட்டி கு. அன்பு மணி, இராஜ நாயகன் பாளையம் கடு. மாணிக்கம், அரவக்குறிச்சி ந. ரவிச்சந்திரன், குடந்தை ஆர். எஸ். நாதன், கபிஸ்தலம் எஸ். வினோத்பாபு.

♦ 'கேளுங்கள் சொல்லப்படும்' பகுதியில் செஞ்சி - 2, அ.க. நிஜாமுதீன் அவர்கள் குந்தை எழுத்தாளர் சங்கம் பற்றிக் கேட்டிருந்த ஒரு வினாவுக்குத் தெளிவாக விடை கூறியிருந்தீர்கள். மிக்க நன்றி. அண்மையில் (02.3.96) அது தன் முதலாண்டு நிறைவு விழா வினைக் சிறப்பாகக் கொண்டாடியது என்பதைக் கூறுவதில் பெருமை



கொள்கிறேன்.
அரியாங்குப்பம்,
பரிதி இரா. வேங்கடேசன்.

♦ மிருகங்களுக்கு உள்ள இரக்க குணம் மனிதனுக்கு இல்லையே என வேதனைப்பட்டேன். ''சிங்கராஜா போட்ட சத்தியம்'' நல்ல கதை! எழுதியவர் பெயரில்லையே சார்?
-விழுப்புரம் வா. முத்து மாணிக்கம், புத்திராம்பட்டு கோ. மதிவாணன். மாயவரம் க. டேவிட் ராஜ், மேலப்பாதி எஸ். நாகராஜன்.

♦ திருட்டு என்பது அது பிள்ளையாராக இருந்தால் என்ன? விலைமதிக்க முடியாத பொருளாக இருந்தால் என்ன? எல்லாமுமே திருட்டுத்தான் பிள்ளையாரை மீட்ட பிள்ளைகளின் செயல் குறும்பாக இருந்தாலும், குணத்தில் தங்கமாக இருந்தார்கள். மேலப்பாதி எஸ்.நாகராஜன்.

♦ 'சாட் பிட் கித்' இதுவரை யாருமே செய்யாத புதிய முயற்சி. மிக அருமையாகப் போகிறது. இவர்களை வைத்தே ஒரு துப்பறியும் தொடர் எழுத வைக்கலாமே?
- திருவள்ளூர் மா. சீதாராமன், பெங்களூர் தி. ஞானதேசிகன், கோவை ராஜநாயகம், கபிஸ்தலம் எஸ். வினோத் பாபு, சின்ன சேலம் பிரசன்ன குமாரி.

♦ 'பன்னனைப் பார்த்து' படித்ததும் நானும் நண்பர்களும் பிழை இன்றித் தமிழை எழுதத் தீவிரமாக முயல்கிறோம்.
- மதுராந்தகம் எஸ். அருணா, நிலக்கரை வா. பழனியப்பன், வீரப்பட்டி கு. சுப்ரமணி, கருமத்தம்பட்டி அ. இராஜப்பன்.

♦ ''தந்தங்கள்'' அரிய - புதிய செய்திகளை அறிய வைத்தன. படங்கள் ஜோர்!
- குடந்தை மா. தீனதயாளன், திருவண்ணாமலை எஸ். உமா தேவி, குடந்தை எஸ்.ஆர். நாதன் கருமத்தம்பட்டி இரா. அருள் பிரபாகரன்.

♦ பிறர் ஆபத்திலிருக்கும் போது காப்பாற்ற வேண்டும் என்ற ஈரம் இதயத்தில் இருக்க வேண்டும். அப்பொழுதுதான் நமக்கு வரும் ஆபத்திலிருந்து காப்பாற்ற மற்றவர் முன் வருவார்கள் என்பதை தென்மொழி வாழ்க' படக்கதை தெளிவாகக் கூறியது படங்கள் பேசின!
- மேலப்பாதி, என். ராஜலெட்சுமி, கபிஸ்தலம் எஸ். வினோத் பாபு, மேலப்பாதி எஸ். நாகராஜன், புத்திராம்பட்டு கோ. மதிவாணன், புத்திராம்பட்டு கோவி. அஞ்சுகம், விருத்தாசலம் வி. பிரபாகர், ஆரணி வி. ஞானமூர்த்தி. கருமத்தம்பட்டி ஆர். அனிதா ராஜப்பன்.

பரதன் அச்சகத்தில் அச்சிட்டவர் : வி. முரளி, பரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் சார்பாக வெளியிடுபவர் : கி. ராஜேந்திரன்.
ஆசிரியர் : கி. ராஜேந்திரன்.
முகவரி : 47, ஜவஹர்லால் நேரு சாலை, ஈக்காடுதாங்கல், சென்னை - 600 097. தொலைபேசி : ஆசிரியர் குழு அலுவலகம் : 2345624; சர்க்குலேஷன் மானேஜர் : 2345623; விளம்பரம் - சந்தா : 2345622; மானேஜிங் டைரக்டர் : 2345621.
ஆண்டுச் சந்தா உள்நாடு : ரூ. 60/-; வெளிநாடு - கப்பல் தபால் : ரூ. 200/-; விமானத் தபால் ரூ. 400/-.
ஆறு மாதச் சந்தா - உள்நாடு : ரூ. 30/-; வெளிநாடு - கப்பல் தபால் : ரூ. 100/-; விமானத் தபால் ரூ. 200/-.



◆ என் மாதிரி இருந்து
என்னையேவா முறைக்கிறே!

GOKULAM (Tamil) May '96 REGISTERED NO. TN MS (S) 281 Registered as Newspaper Is Sri Lanka



JOIN THE DIAMOND BOOK CLUB

AND FILL YOUR LIFE WITH FUN, THRILL & LAUGHTER

Just fill in the coupon given below and send it to us along with a Money Order or Postage Stamps worth Rs. 10/—

We shall be offering five books every month. To get a rebate of **Rs. 4/-and Free postage (approx. Rs. 7/—)** you'll have to order all the five to six books at a time in a month. In case these books are not of your choice then you are free to select any six books from the list of 'Diamond Comics' titles and we shall send you the same. But to get these benefits you'll have to order six books at a time.

We'll send you a Choice Card every month. If you like the books offered by us in the Choice Card then you need not send us the card back. In case you do not like the books then you send us the names of atleast 7 books of your choice so that we can send you 5 books of your choice available with us at that time.

Under this scheme, we shall be sending you a V.P. Packet by the 20th of every month.

Yes I would like to become a member of 'DIAMOND BOOK CLUB' and take advantage of the benefits. I have read all your rules and shall abide by these I promise to accept the V.P. every month.

NAME ______

ADDRESS ______

POST OFFICE ______ PIN CODE ______

I am sending Rs. 10/- by M.O./enclosing Postage Stamps worth Rs. 10/-

My Birth date ______

Note : We shall not enrol you as a member till we receive the membership fee.

AMAR CHITRAKATHA IN ENGLISH (PRICE Rs. 20/—EACH)

Rama	Krishna & Rukmini	Krishna & Jarasandha	Panchatantra (The Brahman & the Goat)
Buddha	Vivekananda	Panchtantra (How the Jackal ate the Elephant)	Hitopadesh
Tales of Vishnu	Tales of Arjuna	Panchatantra (Crows and Owls)	Tales of Narada
Tales of Durga	Mahavira		
Ganga	Tales of Shiva		

DIAMOND COMICS PVT. LTD. X-30, OKHLA INDUSTRIAL AREA, PHASE—2, NEW DELHI-110020

DISTRIBUTORS : Madras : Sree Meenaksni News Agency, 64, Gaudiya Mutt Road • New Century Book House (P) Ltd. (Branches Madurai & Coimbat **Hyderabad :** • Shailendra Agencies, Bashir Bagh •Neel Kamal Book Distributors, Sultan Bazar **Bangalore :** Sapna Book Stall, Gandhi Nagar. •A.K. Agencies, Rajaji Nagar •The Nav Karnataka Publications (P) Ltd., Crescent Road. **Calicut :** Remami Agencies P.O. Arakinar Calicut •Amity International Book House Arfa Bldg., East Kattaparamba, Calicut